කාර්යසාධන වාර්තාව 2022

செயலாற்றுகை அறிக்கை 2022

PERFORMANCE REPORT 2022

මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

உள்ளடக்கம்

பக்க இல

01. அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றியவிவரம் / செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு.... 1

1.1. தேர்தல் ஆணைக்குழுவின் அமைப்பு 1

1.2. தேர்தல் ஆணைக்குழுவின் தூர நோக்கு மற்றும் பணிக்கூற்று 1

1.2.1. நோக்கங்களும் குறிக்கோள்களும்..... 1

1.3. ஆணைக்குழுவின் தத்துவங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகள்..... 2

1.4. நிறுவனக்கட்டமைப்பு மற்றும் அலுவலக தள அமைப்பு 2

02. அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலநோக்கு..... **3**

2.1. தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள்..... 3

2.2. தேருநர்களைப் பதிவு செய்தல் 3

2.2.1. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2021..... 4

2.2.1.1 2022 தேருநர் இடாப்புடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள் 5

2.2.2. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் 5

2.2.3. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2022 7

2.2.3.1. 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாட்டிற்கமைய பிரதான இடாப்பை தயாரித்தல். 7

2.2.3.2. வதிவிடம் மாற்றமடைதல் காரணமாக புதிய வதிவு சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விதம் 7

2.2.3.3 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் பதிவு செய்யப்படாத ஆட்கள் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட வேண்டிய விதம்.. 7

2.2.3.4 2022.02.01 ஆம் திகதி அன்று 18 வயதை பூர்த்தி செய்த ஆட்களை தேருநர் இடாப்பில் பதிவு செய்தல் 8

2.2.3.5 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்கள் (“அ”) மற்றும் உட்சேர்க்கப்படும் பெயர்கள் (“ஆ”) பட்டியல்களை காட்சிப்படுத்தல் :உரிமைக் கோரிக்கைகளை மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல். 9

2.2.3.6 2021 ஆம் ஆண்டின் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் “அ” பட்டியல்கள் மற்றும்“ஆ”பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் 10

2.2.3.7 உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதக் கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல்..... 11

2.2.3.8 2022 தேருநர் இடாப்புடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள்..12

2.2.3.9 ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கை குறிப்புக்கள்..... 12

2.2.4. 2022 ஆம் ஆண்டின் மேலதிக குறைநிரப்பு தேருநர் இடாப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்..... 13

2.2.5. 2022(1) குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் 15

2.2.6. 2022 (2) குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் 16

2.2.7. 2022(3) குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல்..... 18

2.2.8. 2023(1), 2023(2), மற்றும் 2023(3) குறைநிரப்பு இடாப்புக்களை தயாரித்தல்..... 19

2.2.9 தேருநர் இடாப்பு தொடர்பான செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் அறிமுகஞ் செய்தல் 19

2.2.10 தேருநர் இடாப்பு தொடர்பாக தொலைபேசி உதவி சேவையை நடைமுறைப்படுத்தல்..... 20

2.2.11 மீளாய்வு தொடர்பாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல்.....20

2.2.12 செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்களைப் பிரசுரித்தல்..... 22

2.2.13 தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புக்களை விநியோகித்தல்..... 26

2.3. பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதல் 26

2.4. மாகாண சபை தேர்தல்கள் 27

2.5. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் 27

2.5.1. 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்... 27

2.5.2 உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்... 28

2.5.3. 2023 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கு தயாராகுதல். 28

2.5.4. 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்..... 28

2.5.5. 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் 29

2.5.6. அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள எழுத்தாவணங்கள், படிவங்கள், கடித உறைகள், ஜெர்னல்கள், அறிவிறுத்தல் ஏடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள். 29

2.5.7. 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கடிதங்கள் மற்றும் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் 29

2.6. **விசேட கருத்திட்டங்கள்** 30

2.6.1 வாக்காளர் தின வைபவம் 30

2.6.2 சர்வதேச சனநாயக தின வைபவம் 30

2.6.3 வலிமையிழப்புக்குட்பட்ட பிரசைகள்..... 31

2.6.3.1 இடைசெயற்பாட்டு தேர்தல் செயற்பாட்டிற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மைரைட் பிரதிநிதிகளுக்கு தெளிவுப்படுத்தல்..... 31

2.6.3.2 வாக்காளர் பதிவு சம்பந்தமாக விழிப்புலனற்ற நபர்களுக்கு அறிவுறுத்துதல். 31

2.6.3.3 தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சைகைமொழி தொடர்பான அடிப்படை பயிற்சியை வழங்குதல். 31

2.6.3.4 வாக்காளர் தின் தேசிய வைபவத்தில் பங்கேற்றல்..... 31

2.6.3.5 வலிமையிழப்புக்குட்பட்ட வாக்காளர்கள் தமது வாக்கை அடையாளமிடும் போது முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கு குறுகிய கால தீர்வுகள் முன்மொழிவை தயாரித்தல்..... 31

2.6.3.6 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு நடைமுறை தீர்வுகளை வழங்குதல் பற்றிக் கலந்துரையாடல்... 32

2.6.3.7 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தேர்தல் செயற்பாட்டின் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளல். 32

2.6.3.8 மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் புதிய பணியாட் குழுவை வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தொடர்பில் உணர்வு பூர்வமாக நடந்துகொள்ளச் செய்தல். 32

2.6.3.9 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களை தேர்தல் செயற்பாடுகளில் பங்கேற்கச் செய்யும் போது அவர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக அரசியல் கட்சி முகவர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளல். 32

2.6.3.10 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களில் ஒன்றிணைந்த கூட்டணி பிரதிநிதிகளின் முமமொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல். 33

2.6.3.11 இலங்கையில் வலிமையிழப்புக்குட்பட்ட பிரசைகளை தேர்தல் செயற்பாடுகளில் முனைப்பான தரப்பினர்களாக இணைத்துக் கொள்வதற்கு ஆளடையளத்தை உறுதி செய்தலுடன் தொடர்புடைய சவால்கள் பற்றி வினவுதல் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பித்தல். 33
2.6.3.12 வாக்குச் சீட்டுக்களை இனங்கண்டுக்கொள்வதற்கான ஸ்டென்சில் சட்டகத்தை மேம்படுத்துவதற்காக விழிப்புலனற்ற நபர்களின் மும்மொழிவுகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளலும் சனநாயகம் மற்றும் சர்வஜன வாக்குரிமை பற்றி அறிவூட்டலும். 33
2.6.3.13 தேர்தல் செயற்பாட்டில் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கு நன்மைபயக்கக்கூடிய ஊடகங்க பயன்பாட்டிற்காக ஊடகவியலாளர்களை உணர்வு பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளச் செய்தல் 33
2.6.3.14 அறிவு வளர்ச்சி குறைபாடுடைய நபர்களின் தேர்தல் செயற்பாடு தொடர்பான தெளிவை மேம்படுத்தல். 34
2.6.3.15 2022 - 2025 மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளல். 34
2.6.3.16 இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் செயற்பாடு பற்றிய உரையாடல், அதனுடன் தொடர்பான நூலை மக்கள் மயப்படுத்தல் மற்றும் அறிக்கை காணொலியை வெளியிடுதல். 34
2.6.4. நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் 34
2.6.5. நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல் 35
2.6.6. வலிமையிழப்புக்குட்பட்டோரின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு 35
2.6.7. வலிமையிழப்புக்குட்பட்டோரின் உரிமைக்காக நிறைவேற்றப்படும் பிரதான அலுவல்கள். 35
2.6.8. தொற்றுநோய் காரணமாக முகம்கொடுத்த சவால்கள் 35
2.6.9. பெண்கள், இளைஞர்கள், சமூக ஊடகங்கள் மற்றும் சர்வதேச தின வைபவங்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள்..... 35
2.7 வருடாந்த செயல் திட்டம் 36
2.8. மூலோபாயத் திட்டம் 36
2.9. ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்..... 36
2.10. ஆவணக் காப்பகம். 38
2.11. அறிவு முகாமைத்துவ பிரிவு மற்றும் அரும்பொருள் காட்சியகம் 38
2.12. 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளியீடுகள்..... 38
2.13. சட்ட அலுவல்கள்..... 41
2.13.1 உயர் நீதிமன்றம் 41
2.13.2 மேன்முறையீட்டு நீதிமன்றம்..... 41
2.13.3 மேல் நீதிமன்றம் 41
2.13.4 மாவட்ட நீதிமன்றம் 42
2.13.5 சட்டமா அதிபரின் ஆலோசனைகளை உசாவுதல் 42
2.13.6 இலஞ்சம் மற்றும் ஊழல்கள் விசாரணை ஆணைக்குழுவுடன் தொடர்பான விசாரணைகள் மற்றும் பிசீ படிவங்களை புறத்தொதுக்குதல்..... 43
2.14. தேர்தல் சட்டத் திருத்தங்கள்..... 43
2.14.1. தேர்தல் சட்ட சீரதிருத்தம் தொடர்பான விசேட பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் சட்ட சீர்திருத்த முன்மொழிவுகள்..... 43
2.15. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்துடன் தொடர்பான நடவடிக்கைகள்..... 43
2.16 அரசியல் கட்சிகள் 43
2.16.1. அரசியல் கட்சிகளை பதிவு செய்தல் மற்றும் விண்ணப்பங்களை கோருதல் 43
2.16.2. அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் 45
2.17. தேர்தல் பிணக்குகளைத் தீர்த்தல் 45
2.18. வாகனங்கள் தொடர்பான நிருவாகம்..... 45

2.18.1. தேர்தல் ஆணைக்குழுவின் வாகனங்கள் பற்றிய தகவல்கள் 46
2.19 நிர்மாணங்கள் மற்றும் சொத்துக்கள் 47
2.19.1. நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்ப்புக்கள்..... 47
2.20. பொருட்கள் கொள்வனவு, இயந்திர சாதனங்கள் கொள்வனவு / பழுதுபார்த்தல் / பராமரிப்பு..... 48
2.20.1. தேருநர்களை பதிவு செய்தல் 48
2.20.2. தேருநர் இடாப்பு அச்சிடல் 48
2.20.3. இயந்திர சாதனங்களை கொள்வனவு / பழுதுபார்ப்பு/பராமரிப்பு ... 48
2.20.4. அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்..... 49
2.20.5. பொதுவான விடயங்கள்..... 49
2.21. தகவல் தொழிநுட்ப நடவடிக்கைகளின் முன்னேற்றம்..... 49
2.21.1. மென்பொருள்களை உருவாக்குதல், மேம்பாடு மற்றும் பராமரிப்பு..... 50
2.21.2. தேர்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தரப்பினருக்கு இ-சேவைகளை வழங்குதல். 51
2.21.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்..... 52
2.22. நிதி மற்றும் கணக்காய்வு தகவல்கள் 52
2.23. உள்ளக கணக்காய்வு பிரிவின் அலுவல்கள் 53
2.24. எதிர்கால இலக்குகள்..... 55

அத்தியாயம் 03 - ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை 56

3.1 நிதிச் செயலாற்றுகை 56
3.2. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 59
3.2.1. வருமான சேகரிப்பு செயலாற்றுகை 60
3.2.2. நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்திக் கொள்ளல் செயலாற்றுகை 60
3.2.3. நி.பி. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் ஒரு பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு 60
3.2.4. நிதி சாராத சொத்துக்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை ... 60
3.2.5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 61

அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்..... 70

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதிலான செயலாற்றுகை 71

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும் 72

அத்தியாயம் 06 – மனித வளம் பற்றிய விவரம் 73

6.1 பணியாட்குழு எண்ணிக்கை முகாமைத்துவம்.......... 73

6.2. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவில் பதவிநிலை தர அலுவலர்களின் தாபன அலுவல்கள்..... 73
6.2.1. புதிய நியமனங்கள் 74
6.2.2. விடுவிப்புக்கள் 75
6.2.3. உள்ளக இடமாற்றல்கள் 75
6.2.4. பதில் கடமையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வழங்கப்பட்ட நியமனங்கள் 75
6.3. நிருவாகப் பிரிவின் அலுவல்கள்..... 77
6.3.1 பணியாட் குழு அலுவல்கள் 77
6.3.1.1 முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை 77
6.3.1.2 அபிவிருத்தி அலுவலர் சேவை 77
6.3.1.3 சாரதி சேவை 77

6.3.1.4 அலுவலக ஊழியர் சேவை 78
6.3.1.5 தொழிநுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கான ஆட்சேர்ப்பு 78
6.3.1.6 அரச சேவையிலிருந்து கேட்டு விலகல்..... 78
6.3.1.7 பணி நீக்கம்..... 78
6.3.1.8 வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையை நடாத்துதல் 78
6.3.1.9 வெற்றிடம் நிலவும் பதவிகளின் கடமைகளை நிறைவேற்றல் 78
6.3.1.10 ஓய்வுறுத்தல்கள் 78
6.4 சுத்திகரிப்பு நடவடிக்கைகள்.....79
6.5 பாதுகாப்பு நடவடிக்கைகள்..... 79
6.6 வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் புலமை பரிசில்கள் 79
6.7 உள்நாட்டு பயிற்சிகள்..... 80

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை..... 81

அத்தியாயம் 08 – நிறைவு 87

குறிப்புக்கள்

குறிப்பு 01 - நிறுவனக் கட்டமைப்பு 91

குறிப்பு 02 - 2021 ஆம் ஆண்டில் ஒவ்வொரு தேர்தல் மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 92

குறிப்பு 03 - அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடுதல் (2021)...93

குறிப்பு 04 - தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் மற்றும் இடமளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளின் எண்ணிக்கை (2021) 94

குறிப்பு 05 - ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பன்மைப் பதிவுகள் வெளிப்படுத்தப்பட்டமையின் அடிப்படையில் ஒரு முகவரியிலிருந்து நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை (2021) 95

குறிப்பு 06 - தேசிய அடையாள அட்டைகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை (2021)..... 96

குறிப்பு 07 - 2020 - 2021 ஆண்டுகளின் தேருநர் பதிவுகளை ஒப்பீடு செய்தல்..... 97

குறிப்பு 08 - ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பாக தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய உதவிப் பதிவு அலுவலர்கள் பற்றிய விபரங்கள் (2021)..... 98

குறிப்பு 09 - ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் நடப்பு இடாப்பில் (2021) நீக்கப்படவிருக்கும் (“அ” நிரல்படுத்தப்பட்ட பெயர்கள்) மற்றும் 2022 உட்சேர்க்கப்படவிருக்கும் (“ஆ” நிரல்படுத்தப்பட்ட பெயர்கள்) எண்ணிக்கை 99

குறிப்பு 10 - 2022 தேருநர் இடாப்பின் ஒவ்வொரு தேர்தல் மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை..... 100

குறிப்பு 11 - அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடுதல் (2022)..... 101

குறிப்பு 12 - தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் மற்றும் இடமளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளின் எண்ணிக்கை (2022)..... 102

குறிப்பு 13 - ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பன்மைப் பதிவுகள் வெளிப்படுத்தப்பட்டமையின் அடிப்படையில் ஒரு முகவரியிலிருந்து நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை (2022) 103

குறிப்பு 14 - தேசிய அடையாள அட்டைகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை (2022)..... 104

குறிப்பு 15 - 2021 - 2022 ஆண்டுகளின் தேருநர் பதிவுகளை ஒப்பீடு செய்தல்..... 105

குறிப்பு 16 - ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பாக தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய உதவிப் பதிவு அலுவலர்கள் பற்றிய விபரங்கள் (2022)..... 106

குறிப்பு 17 - வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு(2013-2022).. 107

குறிப்பு 18 - தேருநர் இடாப்பு மீளாய்வுகளின்போது தேசிய அடையாள அட்டை தொடர்பான விபரங்களை சமர்ப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கையின் சதவீதம் பற்றிய ஒப்பீடு (2013 - 2022) 114

குறிப்பு 19 - ஒவ்வொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அதிகரிப்பு மற்றும் அதிகரிப்பு சதவீதத்தை ஒப்பீடு செய்தல் (2010 - 2022)..... 115

குறிப்பு 20 - அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரையின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடுதல் (2013- 2022)..... 116

குறிப்பு 21 - 2022.08.31 ஆம் திகதி மேலதிக குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய அந்த இடாப்புக்களில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 117

குறிப்பு 22 - 2022.08.31 ஆம் திகதி மேலதிக குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 118

குறிப்பு 23 - 2022.11.08 ஆம் திகதி மேலதிக குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய குறைநிரப்பு பட்டியல்படுத்தப்பட்ட எண்ணிக்கை, கிடைக்கப்பெற்ற மற்றும் இடமளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 119

குறிப்பு 24 - 2022.11.08 ஆம் திகதி மேலதிக குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 120

குறிப்பு 25 - 2022.11.15 ஆம் திகதி மேலதிக குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய குறைநிரப்பு பட்டியல்படுத்தப்பட்ட எண்ணிக்கை, கிடைக்கப்பெற்ற மற்றும் இடமளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 121

குறிப்பு 26 - 2022.11.15 ஆம் திகதி மேலதிக குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 122

குறிப்பு 27 - உள்ளூர் அதிகார சபைகளின் வெற்றிடங்களை நிரப்புதல் பற்றிய தகவல்கள்..... 123

குறிப்பு 28 - 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் பற்றிய தகவல்கள்..... 149

குறிப்பு 29 - அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு வழங்கப்பட்ட எழுத்தாவணங்கள், படிவங்கள், கடித உறைகள், ஜர்னல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள்..... 150

குறிப்பு 30 - தேர்தல் சட்டங்கள் சம்பந்தமாக விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் பற்றிய முன்மொழிவுகள்..... 152

குறிப்பு 31 - தேர்தல் பிணக்குகள் தீர்வு பற்றி நடாத்தப்பட்ட பட்டறைகள் பற்றிய தகவல்கள்..... 157

குறிப்பு 32 - ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பற்றிய விபரமான அறிக்கை..... 158

குறிப்பு 33 - உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்பு..... 160

இணைப்புக்கள்

இணைப்பு 01 - 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய வர்த்தமானி அறிவித்தல் 165

இணைப்பு 02 - 2022 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகள் பட்டியல் பற்றிய வர்த்தமானி அறிவித்தல்..... 167

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விவரம் / செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு

1.1. தேர்தல் ஆணைக்குழுவின் அமைப்பு

இருபதாவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தியமைக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 103 (1) உறுப்புரையின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் இலங்கையின் இரண்டாவது தேர்தல் ஆணைக்குழுவுக்கு 2020.12.03 ஆம் திகதிய கடிதத்தினூடாக கீழ் குறிப்பிடப்படும் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கமைய ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 05 ஆகும். கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாகும். இந்த நியமனத்திற்கமைய ஆணைக்குழு உறுப்பினர்கள் 2020.12.10 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றதற்கமைய இரண்டாவது தேர்தல் ஆணைக்குழுவின் பதவிக்காலம் ஆரம்பிக்கப்பட்டது.

2022.12.31 ஆம் திகதியன்று தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் அமைப்பு பின்வருமாறு:

- திரு. நிமல் புஞ்சிஹேவா (தவிசாளர்)
- திரு. எஸ்.பி.திவாரத்ன (உறுப்பினர்)
- திரு. எம்.எம்.மொஹமட் (உறுப்பினர்)
- திரு.கே.பீ.பீ.பத்திரண (உறுப்பினர்)
- திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் (உறுப்பினர்) (2021.10.28 ஆம் திகதி முதல்)

(2020.12.10 முதல் 2021.10.10 வரை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பணியாற்றிய திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் வட மாகாண ஆளுநராக 2021.10.11 ஆம் திகதி பதவியைப் பொறுப்பேற்பதற்காக 2021.10.10 ஆம் திகதி ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து கேட்டு விலகினார். இதற்கமைய வெற்றிடமாகிய உறுப்பினர் பதவிக்காக 2021.10.28 ஆம் திகதிய கடிதத்தினூடாக அதிமேதகு ஜனாதிபதியவர்களால் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.)

1.2 தேர்தல் ஆணைக்குழுவின் தூர நோக்கு மற்றும் பணிக்கூற்று

"சர்வசன வாக்குரிமையைப் பாதுகாக்கின்ற ஜனநாயக நாடு" என்பது ஆணைக்குழுவின் தூர நோக்காகும்.

அந்தத் தூரநோக்கை அடைந்துகொள்வதற்காக "மக்கள் இறைமை, சர்வஜன வாக்குரிமை மற்றும் அதனோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமான, நீதியான மற்றும் நம்பத்தகுந்த தேர்தல் செயற்பாடுகளை வினைத்திறனும் விளைத்திறனும் கொண்டதாக மேற்கொள்ளுதல்" என்பது பணிக்கூற்றாகும்.

1.2.1. நோக்கங்களும் குறிக்கோள்களும்

- தகுதியுள்ள அனைத்துப் பிரசைகளுக்கும் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடாத்தப்படும் தேர்தல்களின்போது அச்சமின்றியும் சுதந்திரமாகவும் நம்பிக்கையுடனும் தமது வாக்கைப் பிரயோகிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வாக்குரிமை பிரசைகளுக்குள்ள பராதீனப்படுத்த முடியாத ஓர் உரிமையென்பதையும், தாம் தேர்தல் செயன்முறைக்குள் முனைப்புடன் பங்கேற்கின்றோம் என்பதையும் புரிந்துகொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேர்தல் காலத்தினுள் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும் நியாயமானதுமான வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய வகையில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அனைத்து தேர்தல்களுக்கும் முன்னர் தகுதியுள்ள அனைத்துப் பிரசைகளும் உள்ளடங்கிய, நிகழ்நிலைப்படுத்திய தேருநர் இடாப்பைத் தயாரித்தல்.
- சமூகத்தில் விளிம்புநிலையில் வாழும் அனைத்துப் பிரசைகளையும் நம்பிக்கையுடனும் போதுமான அளவிலும் தேர்தல் செயற்பாடுகளில் பங்கேற்கச்செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேர்தல் செயற்பாடுகளை திறமையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நிருவகித்தல்.
- தேர்தல் செயன்முறைக்கும் தேர்தல் ஆணைக்குழுவுடன் தொடர்புடைய தரவுகளையும் தகவல்களையும் உரிய தரப்புக்களுக்கு பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை காலத்திற்கேற்பவும் போதுமானளவிலும் ஏற்படுத்தல்.

1.3. ஆணைக்குழுவின் தத்துவங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 103 (2) உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடாத்துதல் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துதல் தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோளாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு அரசியலமைப்பின் 104 ஆ (1) உறுப்புரைக்கமைய சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூர் அதிகார சபைத் தேர்தல், மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு போன்ற தேர்தல்களை நடாத்துதல் சம்பந்தமாக நிகழ்காலத்தில் செயல்வலுப்பெறும் சட்டமொன்றினூடாக,

(அ) ஆணைக்குழு அல்லது

(ஆ) "தேர்தல்கள் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அல்லது விதித்துரைக்கப்பட்டுள்ள அனைத்துத் தத்துவங்கள், அலுவல்களை ஆணைக்குழு நடைமுறைப்படுத்தலும் நிறைவேற்றலும் வேண்டும்" என ஆணைக்குழுவுக்கு தேவையான தத்துவங்கள் அரசியலமைப்பினூடாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்புக்காக தேருநர் இடாப்புக்களை தயாரித்தல் மற்றும் திருத்தியமைத்தலும், அந்தத் தேர்தல்களை நடாத்துவதும் அந்த தத்துவங்களுக்குள், அந்த அலுவல்களுக்குள் உள்ளடக்கப்பட்டாலும் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படுவதில்லை என தேர்தல் செயற்பாடுகளுடன் இணைந்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் வரையறுக்கப்படவில்லை என அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, 104 ஆ 1 முதல் 104 (ஆ) (5) வரையான உறுப்புரைகளின் ஊடாக ஆணைக்குழு செயற்பட வேண்டிய விதமும் 104 (இ) மற்றும் 104 (ஈ) உறுப்புரைகள் ஊடாக அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்போது தேவையான பாதுகாப்பு போன்ற வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1.4. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் தள அமைப்பு

தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகத்தின் ஒவ்வொரு பிரிவுகள் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் உள்ளிட்ட நிறுவனக் கட்டமைப்பு குறிப்பு 01 ஆக உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனக் கட்டமைப்புக்கமைய தேர்தல் ஆணைக்குழுவுக்குரிய தேர்தல்கள் செயலகத்தில் தேசியத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள், கணக்கு, நிருவாகம், சட்டம் விசாரணை மற்றும் திட்டமிடல், உள்ளகக் கணக்காய்வு எனப் பிரிவுகள் மற்றும் தாபனம், போக்குவரத்து, பெறுகைகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் எனக் கிளைகளும் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து நிருவாக மாவட்டங்களிலும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களும் ஒன்றோடொன்று தொடர்புபடும் விதம் குறிப்பிடப்பட்டு, அந்தந்த அலகுகள் உள்ளடக்கப்படும் விதத்தில் அலுவலகத் தள அமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள்

பொதுவாக தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள் சேவைக்கான தேவைப்பாட்டைக் கவனத்திற்கொண்டு வாரத்திற்கொரு முறை நடாத்தப்படும். இதற்கமைய 2022 ஆம் ஆண்டில் 30 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், கொவிட் 19 தொற்று நோய் நிலைமை முற்றாக நீங்காமையின் காரணமாக சில இடையூறுகள் நிலவினாலும் நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட ரீதியான மற்றும் பொதுவான கடமை அலுவல்களை தவற விடாமல் நிறைவேற்ற முடியுமாகியமை திருப்திப்பட முடியுமான விடயமாகும். ஆணைக்குழுவின் நிருவாகப் பிரிவு, தேசியத் தேர்தல்கள் பிரிவு, உள்ளூராட்சித் தேர்தல்கள் பிரிவு, சட்டம் விசாரணைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் அவற்றின் கீழான பல்வேறு உப பிரிவுகளினால் முன்வைக்கப்படும் ஆணைக்குழுப் பத்திரங்களுடன் தொடர்பான கொள்கை சார்ந்த தீர்மானங்களை எடுத்தல், சட்ட ரீதியானதைப் போன்றே பொதுவான கடமை சார்ந்த அலுவல்களை பேணி வருவதற்குத் தேவையான வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளை வெளியிடல் போன்ற விடயங்கள் இந்தக் கூட்டங்களின்போது மேற்கொள்ளப்பட்டன.

2.2. தேருநர்களைப் பதிவு செய்தல்

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்துப் பிரஜைகளுக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறந்த இடம், சொத்து செல்வம், பாலினம் போன்ற எந்தவொரு விசேட சிறப்புக்களுமின்றி நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் பங்குகொள்ளும் உரிமை மற்றும் அதற்காக பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வதற்கான உரிமையை வாக்குரிமை ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூன்றாவது உறுப்புரைப் பிரகாரம் சர்வஜன வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ''இறைமை மக்களுக்குரியதாகவும், பராதீனப்படுத்த முடியாததாகவும், இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டின் பிரஜைகளுக்கு சனாதிபதித் தேர்தலின்போது, பாராளுமன்றத் தேர்தலின்போது, மக்கள் தீர்ப்பொன்றின்போது, மாகாண சபை தேர்தலின்போது மற்றும் உள்ளூர் அதிகார சபை தேர்தலின்போது தமது வாக்குரிமையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்களின்போது வாக்களிப்பதற்காக பிரஜைகள் குறித்த தேர்தலின்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்ளல் கட்டாயமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் சட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் போன்ற சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவே இந்த அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்குத் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் திகதியான பெப்ருவரி 01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.

(அதற்கமைய 2004.01.31 அல்லது அந்தத் திகதிக்கு முன்னர் பிறந்தவர்களுக்கு மாத்திரமே 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்ள முடியும்.)

- தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக கோரும் முகவரியில் சாதாரணமாக வசித்தல்.

தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையீனங்கள்.

- செயல்வலுப்பெறும் சட்டமொன்றின் கீழ் சித்த சுவாதீனமற்றவரென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.

- குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் 02 வருட காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 06 மாதங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சிறைப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் அதன் பின்னர் 07 வருட காலம் கழிந்திருக்காமை.

- இலஞ்ச ஊழலொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டு 07 வருடங்கள் கழிந்திருக்காமை.

- தேர்தல் சட்டத்தை மீறியதன் காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.

- பொது நிறுவனங்களில் ஊழல் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.

- மேற்குறிப்பிடப்பட்ட தகைமையீனங்கள் உட்பட அரசியலமைப்பின் 89 ஆவது உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குரிமையை இழப்பதற்கான தகைமையீனங்களுக்கு ஆளாகாத நபராக இருத்தல் வேண்டும்.

2.2.1. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2021

2021 தேருநர் இடாப்பைத் தயாரிக்கும் அலுவல்களை மாவட்ட மட்டத்தில் நிறைவு செய்து 2022.01.07 ஆம் திகதி நாட்டின் அனைத்து தேர்தல் மாவட்டங்களின் பதிவு / உதவிப் பதிவு அலுவலர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. அது சம்பந்தமாக 2022.01.07 ஆம் திகதிய 2261/71 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டதுடன் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் நாட்டின் அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் மக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் மொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 16,575,646 ஆகும்.

வருடாந்த தேருநர் இடாப்பு தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 98 ஆவது உறுப்புரையின் (8) ஆவது உப உறுப்புரையின் கீழான கட்டளைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்காக 2021 தேருநர் இடாப்பில் அந்தந்த தேர்தல் மாவட்டங்களில் பதிவு செய்துகொள்ளப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காக தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2022.02.10 ஆம் திகதிய 2266/53 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது. அது பற்றிய தகவல்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.1.1 2022 தேருநர் இடாப்புடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள்

- ஒவ்வொரு தேர்தல் மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (குறிப்பு 02)
- அரசியலமைப்பின் 98(8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்துகொள்ள வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடுதல் - 2021 (குறிப்பு 03)
- தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் மற்றும் இடமளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் (குறிப்பு 04)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பன்மைப் பதிவுகள் வெளிப்படுத்தலின் அடிப்படையில் ஒரு முகவரியிலிருந்து நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (குறிப்பு 05)
- தேசிய அடையாள அட்டைகள் சம்பந்தமான தகவல்களை சமர்ப்பித்த நபர்களின் எண்ணிக்கை (குறிப்பு 06)
- 2020 - 2021 வாக்காளர்கள் பதிவை ஒப்பீடு செய்தல் (குறிப்பு 07)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்குரிய தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய உதவிப் பதிவு அலுவலர்கள் பற்றிய விபரம் (குறிப்பு 08)

2.2.2. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம்

இந்த திருத்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம், 18 வயதை எய்தியவுடன் குறைநிரப்பு தேருநர் இடாப்பு ஊடாக வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் திகதியை பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி எனத் திருத்தியமைப்பதாகும்.

❖ 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கு (முதன்மைச் சட்டம்) மேற்கொண்ட அடிப்படைத் திருத்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசேட விடயங்கள்

- இந்த திருத்தச் சட்டம் 2021 ஒக்தோபர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
- 2021 ஒக்தோபர் 15 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் அனுபந்தமொன்றாக பிரசுரிக்கப்பட்டது.
- இந்த திருத்தச் சட்டம் 2022 பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற விடயம்.
- வாக்காளர் ஒருவராக பதிவு செய்துகொள்வதற்கான அலுவலுக்குப் பொருந்தும் வகையில் எவரேனுமொரு நபரின் 18 வயது பூர்த்தியடைய வேண்டிய திகதி யூன் மாதம் 01 ஆம் திகதிக்குப் பதிலாக பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் அல்லது வைத்திருப்பதற்கும், சாதாரணமாக வசிக்கும் தகைமை பெறுவதற்கான முகவரிக்கும், அவற்றுடன் தொடர்புடைய ஏனைய தீர்மானங்களுக்குமான திகதியாக இருந்த யூன் மாதம் 01 ஆம் திகதிக்குப் பதிலாக பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி எனத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டின் யூன் மாதம் முதலாம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குப் பதிலாக பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் எனத் திருத்தியமைக்கப்பட்டது.

- ‘அ’ மற்றும் ‘ஆ’ பட்டியல்களை பூரணப்படுத்துவதனை அடுத்த ஆண்டின் ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக செப்தெம்பர் மாதம் 31 ஆம் திகதி எனத் திருத்தியமைக்கடல் வேண்டும்.

❖ **குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் சம்பந்தமாக**

- ஆண்டொன்றின் பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அந்த ஆண்டின் மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள்.

- ஆண்டொன்றின் யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் அந்த ஆண்டின் செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள்.

- ஆண்டொன்றின் ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள்.

- 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஒருவர் வாக்காளர் ஒருவராக தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதுடன், அதற்காக பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் பதிவு அலுவலரிடம் கோரிக்கையை முன்வைக்க முடியுமெனவும் திருத்தப்பட்ட சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.
- அத்தோடு பதிவு அலுவலர் குறைநிரப்புப் பட்டியல்களைத் தயாரித்தல் வேண்டுமெனவும், அந்த குறைநிரப்பு பட்டியல்களை காட்சிப்படுத்த வேண்டுமெனவும், இது சம்பந்தமாக வர்த்தமானியில் மற்றும் மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட வேண்டுமெனவும், அந்த அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் 10 தினங்களுக்குள் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைக்க முடியுமெனவும், திருத்தப்பட்ட சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அந்த விசாரணைகளின் இறுதியில் குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தும் திகதி வரையான அலுவல்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

- குறைநிரப்பு தேருநர் இடாப்பு செயல்வலுப்பெறல் மற்றும் நிராகரிக்கப்படல் சம்பந்தமாக திருத்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ வாக்காளர்களை பதிவு செய்தல் தொடர்பாக எழும் சிரமங்கள், ஏற்கனவே எதிர்பார்க்காத விடயங்கள் சம்பந்தமாக தீர்மானித்தல் அல்லது திருத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை வெளியிடுவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❖ “தேருநர் இடாப்பு” எனும் பதத்தின் பொருள்கோடல் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் திருத்தியமைக்கப்பட்டது.

“20 ‘அ’ ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்புக்கள் உட்பட ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பு எனக் கருதப்படுகின்றது.”

❖ உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனை விண்ணப்பப் படிவங்களின் திகதிகள் திருத்தியமைக்கப்பட்டன.

❖ 2021.06.01 முதல் 2022.01.31 வரையான காலப் பகுதியினுள் ஏதேனுமொரு தினத்தில் 18 வயதைப் பூர்த்தி செய்யும் நபர்கள் உள்ளடக்கப்பட்ட குறைநிரப்பு தேருநர் இடாப்பொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

2.2.3. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2022

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய 2022 பெப்ருவரி 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டின் பிரதான இடாப்புக்காக தேருநர்களை கணக்கெடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இது சம்பந்தமான தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல் இலக்கம் 2265/27 மற்றும் 2022.02.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது.

2.2.3.1. 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாட்டிற்கமைய பிரதான இடாப்பைத் தயாரித்தல்

இந்த அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய மாவட்டத்தின் பதிவு அலுவலர்களின் வழிநடாத்தலின் கீழ் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் களத்தில் வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை கணக்கெடுப்பு அலுவலர்கள் என்ற வகையில் கிராம அலுவலர்கள் மேற்கொள்வார்கள்.

பொதுவாக தேருநர் இடாப்பு மீளாய்வின்போது சகல வீடுகளுக்கும் வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்கான படிவம் (BC படிவம்) விநியோகிக்கப்பட்டு கணக்கெடுப்பு நடாத்தப்படாலும், கொவிட் 19 தொற்று நோய் நிலைமை 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் நிலவியமையின் காரணமாக பிரஜைகளின் மற்றும் உத்தியோகத்தர்களின் சுகாதாரப் பாதுகாப்புக் கருதி 2022 தேருநர் இடாப்பு மீளாய்வின்போது வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக சகல வீடுகளுக்கும் படிவங்களை விநியோகிக்காதிருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விதத்தில் 2021 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் மற்றும் புதிதாக உட்சேர்க்கப்படும் பெயர்களின் அடிப்படையில் மாத்திரம் வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக 2022/ER எனும் விசேட படிவம் அறிமுகஞ் செய்யப்பட்டது.

2.2.3.2. வதிவிடம் மாற்றமடைதல் காரணமாக புதிய பதிவு சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விதம்

சாதாரண வதிவு 2022 பெப்ருவரி 01 ஆம் திகதியன்று நிகழ்ந்திருப்பின் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் புதிய முகவரியின் கீழ் பதிவு செய்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள் தற்போது வசிக்கும் முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரைச் சந்தித்து 2022/ER படிவமொன்றைப் பெற்று அதனைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். இந்தப் படிவத்தை www.elections.gov.lk இணையத்தளத்தில் பிரவேசித்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியுமாக இருந்ததுடன் இந்தப் படிவத்தில் முன்னைய பதிவு விபரங்களைக் குறிப்பிடுவதற்கான நிரலில் அந்த விபரங்களைக் கட்டாயம் குறிப்பிட வேண்டியிருந்தாலும் முன்னைய வதிவிடத்தை விட்டுச் செல்லல் தொடர்பாக கிராம அலுவலரால் வழங்கப்படும் கடிதத்தை சமர்ப்பித்தல் கட்டாயத் தேவைப்பாடாக இருக்கவில்லை.

2.2.3.3 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிராத நபர்கள் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொள்ள வேண்டிய விதம்.

2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிராத நபர்கள் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்துகொள்வதற்காக தற்போது வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரைச் சந்தித்து 2022/ER படிவமொன்றைப் பெற்றுக்கொள்ளல் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்துகொண்ட படிவத்தை உரிய பிரகாரம் பூரணப்படுத்தி கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

2.2.3.4 2022.02.01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்த நபர்களை தேருநர் இடாப்பில் பதிவு செய்தல்.

2004.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்கள் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டதுடன் அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் 18 வயதைப் பூர்த்தி செய்யும் நபர்கள் 2022/ER படிவமொன்றைப் பூர்த்தி செய்து பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான அறிவுறுத்தல் சுற்றறிக்கை சகல மாவட்டப் பதிவு அலுவலர்களான மாவட்டச் செயலாளர்களுக்கு மற்றும் உதவிப் பதிவு அலுவலர்களான மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு மீளாய்வு அலுவல்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளியிடப்பட்டது. தேருநர்களை கணக்கெடுத்தல் சம்பந்தமான சட்ட ரீதியான மற்றும் நடைமுறை சார்ந்த விடயங்கள் சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரையான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய திகதிகள் தொடர்பான திட்டமும் வழங்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் தேருநர் இடாப்பு மீளாய்வுக்கான களக் கணக்கெடுப்புக் காலப் பகுதியினுள் கிராம அலுவலர் இடமாற்றலை இடைநிறுத்தல் மற்றும் அக்காலப் பகுதியினுள் கிராம அலுவலர்களின் அலுவலக நாட்களை வரையறுத்தலுடன் தொடர்பான அறிவுறுத்தல்களை சகல மாவட்ட செயலாளர்கள் மற்றும் சகல பிரதேச செயலாளர்களால் ஒப்படைக்கப்படும் அவசர மற்றும் அத்தியாவசிய கடமைகளை நிறைவேற்றுவதன் கீழ் 2022.02.01 முதல் 2022.06.01 வரை கிராம அலுவலர்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய நாட்களில் முற்பகல் அலுவலகத்தில் தரித்திருக்க வேண்டியிருந்ததுடன், எஞ்சிய தினங்களை களத்தில் கணக்கெடுப்புப் பணிகளுக்காக விடுவிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அத்தோடு அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட காலப் பகுதியினுள் கிராம அலுவலர்களை இடமாற்றல் செய்யாதிருக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

2022 பெப்ருவரி மாதம் மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் ஓரளவு உயர் மட்டத்தில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக, மீளாய்வு அறிவித்தல்களை வீடு வீடாக விநியோகித்தல் மற்றும் கிராம அலுவலர்களுக்கான படிகள் தொடர்பான சிக்கல்களை முன்னிறுத்தி கிராம அலுவலர் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக 2022 மீளாய்வு நடவடிக்கைகளின் ஆரம்பத்திலேயே கடும் இடையூறு ஏற்பட்டது. இது சம்பந்தமாக 2022.02.15 ஆம் திகதி உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரது தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துடன் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசியத் தேர்தல்கள்) கலந்து கொண்டதுடன் கிராம அலுவலர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். கிராம அலுவலர்களுக்கான படிகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தாபனப் பணிப்பாளர் நாயகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சம்பந்தமாக கிராம அலுவலர் தொழிற்சங்கங்கள் இணக்கப்பாட்டைத் தெரிவித்தன. அதற்கமைய 2022 மீளாய்வு சம்பந்தமாக வீடு வீடாக அறிவித்தல்களை விநியோகித்தல் மற்றும் உறுதிப்படுத்தலை மேற்கொள்ளாதிருத்தல் மற்றும் படிகள் சம்பந்தமான அடிப்படை இணக்கப்பாடுகளின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர். வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் ஆரம்பத்திலேயே கிராம அலுவலர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டமையின் காரணமாக திட்டமிட்ட பிரகாரம் தேருநர் இடாப்பு மீளாய்வின் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதில் இடையூறுகள் ஏற்பட்டன.

சகல வீடுகளுக்கும் விநியோகிப்பதற்காக மீளாய்வு சம்பந்தமாக 6,500,000 அறிவித்தல்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் கிராம அலுவலர் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக அந்த அறிவித்தல்களை அவர்களூடாக விநியோகிக்க முடியவில்லை. அதற்காக வேறு மாற்று வழிகள் மீது ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள் மூலமாக அவர்களுடைய பெற்றோர்களுக்கு அறிவூட்டுவதற்காக கல்வி அமைச்சின் உதவி கோரப்பட்டது. அதற்காக கல்வி அமைச்சின் செயலாளரது இணக்கப்பாடு இலக்கம்:

ED/09/02/04/08/09 மற்றும் 2022.03.21 ஆம் திகதிய சுற்றறிக்கை ஊடாக அனைத்து அதிபர்கள் உள்ளிட்ட மாகாண, வலய, கோட்டக் கல்விப் பிரதானிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இது தவிர வேறு மாற்று வழிகள் ஊடாகவும் மீளாய்வு அறிவித்தல்களை வீடுகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அன்றாடம் ஏற்படும் மின்சாரத் துண்டிப்பு காரணமாக 2022.04.04 ஆம் திகதி முதல் 2022.04.18 தேர்தல்கள் செயலகத்தின் கணனித் தரவுகள் மையம் தற்காலிகமாக செயலிழக்கச் செய்யப்பட்டது. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை, ஊரடங்குச் சட்டம் விதிக்கப்படல், தலைமை அலுவலகத்தின் மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் நிலவிய சிரமம் போன்ற காரணங்களினால் 2022.05.09 ஆம் திகதி முதல் 2022.05.23 திகதி வரை மீண்டுமொரு தடைவ மத்திய சர்வரை செயலிழக்கச் செய்ய வேண்டியேற்பட்டது. இதனால் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகப் பணியாட்குழுவுக்கு தரவுகளை கணனிமயப்படுத்துவதில் கடும் சிரமங்கள் ஏற்பட்டன. மேலே குறிப்பிடப்பட்ட இடையூறுகள் காரணமாக திட்டமிட்ட பிரகாரம் மீளாய்வுடன் தொடர்பான சில அலுவல்களை இடைநிறுத்துவதற்கும், மீளாய்வுக் கால அட்டவணையை திருத்தியமைப்பதற்கும் வேண்டியேற்பட்டது.

கிராம அலுவலர்களிடமிருந்து கணக்கெடுப்புப் படிவங்களை கையேற்றலை 2022.03.11 ஆம் திகதி நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனை 2022 யூன் மாதம் வரை நீடிக்க வேண்டியேற்பட்டது. அத்தோடு தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்கள் (“அ”) மற்றும் உட்சேர்க்கப்படும் பெயர்கள் (“ஆ”) பட்டியல்களின் வரைவுகளை கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு அனுப்பி அவ்வாறு உட்சேர்க்கப்படாத நபர்களை உட்சேர்ப்பதற்காக திட்டமிடப்பட்ட அலுவல்களை கைவிட்டு விட வேண்டியேற்பட்டது.

அத்தோடு “அ” மற்றும் “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தலை 2022.05. ஆம் திகதி முதல் மேற்கொள்வதற்கு ஆரம்பத்திலேயே திட்டமிட்டிருந்த போதிலும் அதனை 2022.06.15 ஆம் திகதி வரை ஒத்திவைக்க வேண்டியேற்பட்டது.

2.2.3.5 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்கள் (“அ”) மற்றும் உட்சேர்க்கப்படும் பெயர்களைக் (“ஆ”) காட்சிப்படுத்தல்: உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல்

2021 தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடங்கியுள்ளவர்களில் இறப்பெய்தியுள்ள அல்லது வதிவிடத்தை விட்டுச் சென்றுள்ள அல்லது வேறு காரணமொன்றின் அடிப்படையில் உரமை பெறாக ஆட்களின் அதாவது 2022 ஆம் ஆண்டில் நீக்குவதற்குப் பரிந்துரைக்கப்படுகின்ற ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள “அ” பட்டியல் மற்றும் 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர்கள் உட்சேர்க்கப்படாத ஆனாலும் 18 வயதைப் பூர்த்தி செய்தல் அல்லது வதிவு அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கு புதிதாக பெயர்களை உட்சேர்ப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள “ஆ” பட்டியல் காட்சிப்படுத்தல் 2022.06.15 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம்: 2284/19 மற்றும் 2022.06.15 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

2.2.3.6 2021 ஆம் ஆண்டின் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் "அ" பட்டியல் மற்றும் "ஆ" பட்டியல் காட்சிப்படுத்தப்பட்ட இடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

காட்சிப்படுத்தப்படும் இடம்	**காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பு மற்றும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள்**
ஒவ்வொரு மாவட்டச் செயலகம் / மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்	குறித்த தேர்தல் மாவட்டத்தில் (மாவட்டத்தில்) 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் முழுப் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள்
ஒவ்வொரு பிரதேச செயலகம்	குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள்
ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம்	குறித்த உள்ளூர் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள்
ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம்	குறித்த கிராம அலுவலர் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய 2022 ஆம் ஆண்டின் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களின் பிரதிகள்

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது பிறிதொரு நபரின் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ள ஆனாலும் தனது பெயர் தேருநர் இடாப்பிலிருந்து மற்றும் "ஆ" பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு அல்லது "அ" பட்டியலில் உட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது எவரேனுமொருவர் தனது பெயரை அல்லது பிறிதொருவரின் பெயரை இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தான் சார்பாக வேறொருவர் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பாராயின் அவ்வாறு உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவரால் அது பற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கமைவான அறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் 2022 யூன் 15 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டதுடன் அன்றைய திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2022.07.12 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலருக்கு கிடைத்தல் வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.

தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் தனத பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது யெபர் அல்லது அந்த இடாப்பில் அல்லது "ஆ" பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிறிதொருவரின் பெயர் அல்லது அந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் சம்பந்தமாக அல்லது அந்த இடாப்பில் பெயரை

உட்சேர்த்துக்கொள்வதற்காக அல்லது வைத்துக்கொள்வதற்காக ஆட்சேபனையைத் தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கும் ஆட்சேபனையை மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள பிரகாரம் "இ" படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இடாப்பில் பெயரை உட்சேர்த்தல் பற்றி முன்வைக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளையும் குறித்த அறிவித்தலானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அதாவது 2022 யூன் மாதம் 15 ஆம் திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2022.07.12 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டுமென அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உரிமைக் கோரிக்கையை முன்வைக்கும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் சம்பந்தமாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் "ஈ" படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2022 யூலை மாதம் 01 ஆம் திகதி மற்றும் 2022 யூலை மாதம் 19 ஆம் திகதி காட்சிப்படுத்தப்பட்டது.

உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவைப்படும் "அ" "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான "இ" "ஈ" படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபை நிறுவனங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகளில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

2022.06.15 ஆம் திகதி ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்ட மட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட "அ" "ஆ" பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களின் எண்ணிக்கை குறிப்பு 03 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2.3.7 உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதக் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

"அ" "ஆ" பட்டியல்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை மற்றும் உரிமைக் கோரிக்கைகளை பொறுப்பேற்பதற்கான காலப் பகுதியின் இறுதியில் கிடைக்கப் பெற்றுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை சம்பந்தமாக கவனத்தை செலுத்திய தேர்தல் ஆணைக்குழு தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளாமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதற்காக ஏதேனுமொரு விதத்தில் விடுபட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வாக்காளர்களை தாமதக் கோரிக்கைகளாகக் கருதி இடாப்பில் உட்சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து சிரமங்கள், மின் துண்டிப்பு, அஞ்சல் அலுவலகங்களில் பணியாற்றும் தினங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் அஞ்சல் விநியோகத்தில் தாமதம், அலுவலகத் தினங்களை வரையறுத்தல், திறைசேரியிலிருந்து உரிய பிரகாரம் பணி முற்பணம் கிடைக்காமை போன்ற காரணங்களினால் உரிய முறையில் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தடையேற்படல், மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாரிய வகையில் தாக்கம் செலுத்திய விடயமாக இருந்தது.

எவ்வாறாயினும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதக் கோரிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல் மாவட்ட பிரதி மற்றும் உதவி தேர்தல்கள் ஆணையாளர்களின் நழிநடாத்தல் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பின் அடிப்படையில் 2022.09.30 ஆம் திகதியாகும்போது அநேகமான அலுவல்களை இறுதிக் கட்டத்திற்கு கொண்டு வர முடியுமாகியது.

2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை தயாரிக்கும் பணிகள் மாவட்ட மட்டத்தில் நிறைவு செய்யப்பட்டு 2022 ஒக்தோபர் மாதம் 31 ஆம் திகதி நாட்டின் அனைத்து தேர்தல் மாவட்டங்களினதும் உதவிப் பதிவு அலுவலர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

அது சம்பந்தமாக 2022.10.31 ஆம் திகதிய 2304/02 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தலை பிரசுரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளப் பக்கத்தில் காட்சிப்படுத்துவதற்குப் போன்றே அந்தந்த மாவட்டங்களின் தேர்தல்கள் அலுவலகங்களிலும் நாட்டின் அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும் பொது மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

2.2.3.8 2022 தேருநர் இடாப்புடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள்

2022 தேருநர் இடாப்புடன் தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் எண்ணிக்கைக் குறிப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் நடப்பு இடாப்பிலிருந்து (2021) நீக்கப்படவிருக்கும் பெயர்கள் (“அ” பட்டியலிடப்பட்ட பெயர்கள்) மற்றும் உட்சேர்க்கப்படவிருக்கும் பெயர்கள் (“ஆ” பட்டியலிடப்பட்ட பெயர்கள்) எண்ணிக்கை (குறிப்பு 09)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (குறிப்பு 10)
- அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல் - 2022 (குறிப்பு 11)
- தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் மற்றும் ஏற்றக்கொள்ளப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் (குறிப்பு 12)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பன்மைப் பதிவுகள் வெளிப்படுத்தப்பட்டமை காரணமாக ஒரு முகவரியிலிருந்து நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (குறிப்பு 13)
- தேசிய அடையாள அட்டை சம்பந்தமான தகவல்களை சமர்ப்பித்த நபர்களின் எண்ணிக்கை (குறிப்பு 14)
- 2021 - 2022 தேருநர்கள் பதிவுகளை ஒப்பீடு செய்தல் (குறிப்பு 15)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தியுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பற்றிய விபரம் (குறிப்பு 16)

❖ 2022 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 16,692,397 ஆகும்.

2.2.3.9 ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கை குறிப்புக்கள்

கடந்த சில வருடங்களின் வாக்காளர் பதிவு தொடர்பான கீழ் குறிப்பிடப்படும் ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கைக் குறிப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

- வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு 2013 - 2022 (குறிப்பு 17)
- தேருநர் இடாப்பு மீளாய்வின்போது தேசிய அடையாள அட்டையின் தகவல்களைச் சமர்ப்பித்துள்ள வாக்காளர்களின் சதவீதம் பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு 2013 - 2022 (குறிப்பு 18)
- ஒவ்வொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு மற்றும் அதிகரித்தல் சதவீதம் தொடர்பான ஒப்பீடு 2010 - 2022 (குறிப்பு 19)
- அரசியலமைப்பின் 98(8) உப உறுப்புரையின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு 2013 - 2022 (குறிப்பு 20)

2.2.4. 2022 ஆம் ஆண்டின் குறைநிரப்பு தேருநர் (வாக்காளர்) இடாப்பை தயாரித்தல்

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கமைய 2021.06.01 ஆம் திகதி முதல் 2022.01.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் இளம் நபர்கள் உள்ளடக்கப்பட்ட குறைநிரப்புப் பட்டியலை தயாரித்தல் மற்றும் அந்தக் காலப் பகுதிக்குரிய குறைநிரப்பு வாக்காளர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். 2022 பெப்ருவரி 01 ஆம் திகதி முதல் திருத்தப்பட்ட சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2021 திசெம்பர் மாதம் இந்த இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய நபர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய, இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த நபர்கள் பற்றிய தகவல்களை ஆட்பதிவுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டது. அந்தத் தகவல்களை கிராம அலுவலர் பிரிவுகளுக்கமைய பிரித்து வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக அறிமுகஞ் செய்யப்பட்ட படிவங்களுடன் கிராம அலுவலர்களுக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும் முறை சம்பந்தமாக ஆரம்ப அறிமுகத்தை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு இது சம்பந்தமாக கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் முகவர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அத்தோடு கட்சி செயலாளர்களுடன் தேர்தல்கள் செயலகத்தில் நடாத்தப்பட்ட கூட்ட்ங்களின்போதும் தெளிவுபடுத்தப்பட்டது.

குறைநிரப்பு இடாப்பு காட்சிப்படுத்தலை 2022.02.01 ஆம் திகதி முதல் மேற்கொள்வதற்கு ஆணைக்கழுவினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் அதனை 2022.04.20 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு 2022 ஜனவரி மாதத்தில் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மேலதிக குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்படுவதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்பவர்கள் 2022 பிரதான இடாப்பில் உட்சேர்க்கப்படுவதற்கான தகைமைகளைப் பெற்றக்கொள்வதனால் கணக்கெடுப்பு அலுவலர்களால் 2022 ஆம் ஆண்டின் மீளாய்வுடன் தொடர்பாக கணக்கெடுப்பை மேற்கொள்ளம்போது அதிக எண்ணிக்கையானோரை உட்சேர்த்துக்கொள்ள முடியுமென்ற விடயத்தை கவனத்திற்கொள்ளச் செய்தல்.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் இலக்கம்: 2262/8 மற்றும் 2022.01.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக் காலத்தை 2023.03.19 ஆம் திகதி வரை நீடித்தல்.

மாகாண சபைகள் தேர்தல்களை நடாத்துவதற்கான தெளிவான சட்டமொன்று இல்லாமை.

பிரதான இடாப்பை தயாரிக்கும்போது மேலே விபரிக்கப்பட்டுள்ள அனைத்து இடையூறுகளும் 2022 மேலதிக குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும்போதும் அவ்வாறே தாக்கம் செலுத்தியது. அந்த அனைத்து இடையூறுகளுக்கும் முகங்கொடுத்தவாறு 2022.06.15 ஆம் திகதி முதல் குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல் வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலர்களால் குறைநிரப்பு இடாப்பு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருப்பதாக இல.: 2284/19 மற்றும் 2022.06.15 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் செய்திப் பத்திரிகை அறிவித்தல்கள் ஊடாக 2022 யூன் 15 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதுடன் அந்த இடாப்புக்களை மாவட்டச் செயலகங்கள் / தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களில் குறித்த அலுவலகங்களின் அதிகார எல்லைக்குரிய குறைநிரப்புப் பட்டியல்கள் 2022.06.15 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்தப்படுவதாக பிரசித்தப்படுத்தப்பட்டது.

தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்குரிய குறைநிரப்பு தேருநர் இடாப்பில் தனது பெயரை அல்லது பிறிதொருவரின் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ள ஆனாலும் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்படாத எவரேனுமொருவர் தனது பெயரை அல்லது பிறிதொருவரின் பெயரை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தான் சார்பாக பிறிதொருவரினால் உரிமைக் கோரிக்கையொன்று முன்வைக்கப்படுமாயின் அவ்வாறு உரிமை கோருபவரால் மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கமைய அல்லது தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக அறிமுகஞ்செய்யப்பட்டுள்ள YC படிவத்தினூடாக அல்லது பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் 2022 யூன் 15 ஆம் திகதி முதல் 10 தினங்களுக்குள் இதற்கான சகல விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டது.

தேர்தல் மாவட்டத்திற்குரிய குறைநிரப்பு இடாப்பில் தனது பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள எவரேனுமொருவருக்கு தனது பெயர் அல்லது அந்த இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிறிதொருவரின் பெயர் உட்சேர்க்கப்பட்டிருத்தல் தொடர்பாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் "இ" படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குறைநிரப்பு இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படுதல் சம்பந்தமாக முன்வைக்கப்படும் சகல ஆட்சேபனைகளும் 2022 யூன் 15 ஆம் திகதி முதல் 10 தினங்களுக்குள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கக்கூடியவாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரிமைக் கோரிக்கையை முன்வைக்கும் ஒருவரின் பெயரை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படும் சகல ஆட்சேபனைகளும் உரிமை கோருபவர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 07 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் "ஈ" படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2022 யூலை மாதம் 01 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டது.

உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவையான "அ" "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான "இ" "ஈ"படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள் அல்லது கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் சம்பந்தமான விசாரணைகள் நடாத்தப்பட்டன. அத்தோடு 2022 ஆம் ஆண்டில் வீடு வீடாகச் சென்று தேருநர்கள் (வாக்காளர்கள்) கணக்கெடுக்கப்படாமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை இடாப்பை அத்தாட்சிப்படுத்தும் வரை கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் மீது கவனத்தைச் செலுத்தி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நபர்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் 2021.06.01 முதல் 2022.01.31 வரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய மேலதிக குறைநிரப்பு இடாப்பு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம்: 2295/11 மற்றும் 2022.08.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்த குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்துகொள்ளப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 142,537 ஆகுமென்பதோடு ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை குறிப்பு 21 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து தேருநர் இடாப்புக்களையும் அத்தாட்சிப்படுத்தியன் பின்னர் நிகழ்காலத்தில் செயல்வலுப்பெறும் தேருநர் இடாப்பின் வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆம் உறுப்புரைகளுக்கிணங்க ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல் வேண்டும். அதற்கமைய குறைநிரப்பு இடாப்புக்களை அத்தாட்சிப்படுத்தியன் பின்னரான செல்லுபடியாகும் வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறிப்பு 22 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

2.2.5 2022 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

தேருநர்களை கணக்கெடுக்கும் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2022 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2022 மே மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

இந்த குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2022.02.01 ஆம் திகதி பிரதான இடாப்பு கணக்கெடுப்புடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கணக்கெடுப்பின் போது ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் அதற்காக பின்பற்றிய நடைமுறைகள் இந்த இடாப்பை தயாரிப்பதற்கும் பின்பற்றப்பட்டது. குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக இலக்கம் 2287/11 மற்றும் 2022.07.05 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்டவாறு இந்த குறைநிரப்பு இடாப்பை தயாரித்தலை திட்டமிட்ட விதம் மற்றும் 2022.09.30 ஆம் திகதி ஆகும் போது செயற்படுத்தப்பட்ட விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்பாடு	திட்டமிடப்பட்ட விதம்	நடைமுறைப்படுத்தப்பட்ட விதம்
குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல்	2022.05.02- 2022.05.11	2022.07.05 - 2022.07.14
உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல்	2022.05.02 - 2022.05.11	2022.07.05 - 2022.07.14

கிடைக்கப்பெற்றுள்ள உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் பட்டியல்களை காட்சிப்படுத்தப்பட வேண்டிய திகதி	2022.05.17	2022.07.19
உரிமை கோரிக்கைகள் தொடர்பாக ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க முடியுமான இறுதி திகதி	2022.05.23	2022.07.25

அதன் பின்னர் கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நடாத்தப்பட்டன. அத்தோடு 2022 ஆம் ஆண்டில் வாக்காளர்கள் கணக்கெடுப்பை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளாமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதனை இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரை கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் மீது கவனத்தைச் செலுத்தி தகைமை பெறும் ஆட்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்குமாறு அனைத்து மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவு திணைக்களத்தினூடாக இக்காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்துள்ள ஆட்கள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுன் அந்த விபரங்கள் மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தவிர அந்த ஒவ்வொரு ஆட்களின் தனிப்பட்ட முகவரிக்கு பதிவு செய்துகொள்ளுமாறு கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தக் குறைநிரப்பு இடாப்பை 2022.06.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தாலும் மேலே விபரிக்கப்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக மற்றும் அதிக எண்ணிக்கையான வாக்காளர்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளும் நோக்கில் 2022.11.08 ஆம் திகதி இந்த குறைநிரப்பு இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம் 2305/10 மற்றும் 2022.11.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பத்திரிகை அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 62,732 ஆகுமென்பதோடு ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கை, கிடைக்கப்பெற்ற மற்றும் வாய்ப்பளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான எண்ணிக்கைக் குறிப்பு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து தேருநர் இடாப்பையும் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தற்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதியப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆவது உறுப்புரைகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும். அதற்கமைய குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல் குறிப்பு 24 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.6 2022 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

தேருநர்களை கணக்கெடுக்கும் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2022 யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் மாதம் 30 திகதி வரையான காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

இந்த குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2022.02.01 ஆம் திகதி பிரதான இடாப்பு கணக்கெடுப்புடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் மேலே

குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கணக்கெடுப்பின் போது ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் அதற்காக பின்பற்றிய நடைமுறைகள் இந்த இடாப்பை தயாரிப்பதற்கும் பின்பற்றப்பட்டது. குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக இலக்கம் 2298/12 மற்றும் 2022.08.31 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்டவாறு இந்த குறைநிரப்பு இடாப்பை தயாரித்தலை திட்டமிட்ட விதம் மற்றும் 2022.09.30 ஆம் திகதி ஆகும் போது செயற்படுத்தப்பட்ட விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்பாடு	**திட்டமிடப்பட்ட விதம்**	**நடைமுறைப்படுத்தப்பட்ட விதம்**
குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல்	2022.07.05 - 2022.07.14	2022.08.31 - 2022.09.09
உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல்	2022.07.05 - 2022.07.14	2022.08.31 - 2022.09.09
கிடைக்கப்பெற்றுள்ள உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் பட்டியல்களை காட்சிப்படுத்தப்பட வேண்டிய திகதி	2022.07.19	2022.09.16
உரிமை கோரிக்கைகள் தொடர்பாக ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க முடியுமான இறுதி திகதி	2022.07.25	2022.09.22

அதன் பின்னர் கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நடாத்தப்பட்டன. அத்தோடு 2022 ஆம் ஆண்டில் வாக்காளர்கள் கணக்கெடுப்பை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளாமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதனை இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரை கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் மீது கவனத்தைச் செலுத்தி தகைமை பெறும் ஆட்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்குமாறு அனைத்து மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவு திணைக்களத்தினூடாக இக்காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்துள்ள ஆட்கள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுன் அந்த விபரங்கள் மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தவிர அந்த ஒவ்வொரு ஆட்களின் தனிப்பட்ட முகவரிக்கு பதிவு செய்துகொள்ளுமாறு கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தக் குறைநிரப்பு இடாப்பை 2022.10.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தாலும் மேலே விபரிக்கப்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக மற்றும் அதிக எண்ணிக்கையான வாக்காளர்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக்கொள்ளும் நோக்கில் 2022.11.15 ஆம் திகதி இந்த குறைநிரப்பு இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக இலக்கம் 2306/21 மற்றும் 2022.11.15 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பத்திரிகை அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 56,212 ஆகுமென்பதோடு ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கை, கிடைக்கப்பெற்ற மற்றும் வாய்ப்பளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான எண்ணிக்கைக் குறிப்பு 25 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து தேருநர் இடாப்பையும் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தற்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதியப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பின் 97 மற்றும் 98 ஆவது உறுப்புரைகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும். அதற்கமைய குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல் குறிப்பு 26 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.7. 2022 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

தேருநர்களை கணக்கெடுக்கும் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2022 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2023 ஜனவரி மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

இந்த குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2022.02.01 ஆம் திகதி பிரதான இடாப்பு கணக்கெடுப்புடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டது.

வாக்காளர்களைக் கணக்கெடுக்கும்போது ஏற்பட்ட சிரமங்கள் அதே விதத்தில் இந்த குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும்போதும் ஏற்பட்டது.

மேலதிக குறைநிரப்பு இடாப்பை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் இந்த குறைநிரப்பு இடாப்பை தயாரிப்பதற்கும் பின்பற்றப்பட்டது.

குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக இலக்கம் 2308/12 மற்றும் 2022.11.30 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் திட்டமிடப்பட்ட விதம் மற்றும் செயற்படுத்திய விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்பாடு	திட்டமிடப்பட்ட விதம்	நடைமுறைப்படுத்தப்பட்ட விதம்
குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல்	2022.11.01 - 2022.11.10	2022.11.30 - 2022.12.09
உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை கையேற்றல்	2022.11.01 - 2022.11.10	2022.11.30 - 2022.12.09
கிடைக்கப்பெற்றுள்ள உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் பட்டியல்களை காட்சிப்படுத்தப்பட வேண்டிய திகதி	2022.11.15	2022.12.14
உரிமை கோரிக்கைகள் தொடர்பாக ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க முடியுமான இறுதி திகதி	2022.11.21	2022.12.20

அதன் பின்னர் கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் நடாத்தப்பட்டது. அத்தோடு 2022 ஆம் ஆண்டில் வாக்காளர்களை கணக்கெடுத்தலை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ள முடியாமையினால் ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதற்கு இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரை கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் மீது கவனத்தைச் செலுத்தி தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களை குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்குமாறு அனைத்து மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவு திணைக்களத்தினூடாக இக்காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்துள்ள ஆட்கள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுன் அந்த விபரங்கள் மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தவிர அந்த ஒவ்வொரு ஆட்களின் தனிப்பட்ட முகவரிக்கு பதிவு செய்துகொள்ளுமாறு கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது.

2022.12.31 ஆம் திகதியாகும்போது உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பிரகாரம் இந்த குறைநிரப்பு இடாப்பை 2023.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட பிரதி /உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

2.2.8. 2023 (1), 2023 (2) மற்றும் 2023 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

2023.02.01 முதல் 2023.05.31 வரை தயாரிக்க வேண்டிய 2023 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, 2023.06.01 முதல் 2023.09.30 வரை தயாரிக்க வேண்டிய 2023 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2023.10.01 முதல் 2024.01.31 வரை தயாரிக்க வேண்டிய 2023 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்கு தகைமை பெறும் ஆட்கள் பற்றிய விபரங்களை 2022 தேருநர் இடாப்பு மீளாய்வுடன் சமாந்தரமாக சேகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது 2023(1), 2023(2) மற்றும் 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களில் பதிவு செய்துகொள்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைநிரப்பு இடாப்பு	கோரிக்கை விடுத்திருந்த இளம் பிரஜைகளின் எண்ணிக்கை
(1)2023	23106
(2)2023	23299
(3)2023	21982

2.2.9. தேருநர் இடாப்பு தொடர்பான செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் அறிமுகஞ் செய்தல்

2021 தேருநர் இடாப்பு மீளாய்வுடன் இணையான வகையில் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக இணையவழி (Online) வசதிகள் அறிமுகஞ் செய்யப்பட்டதுடன் அது 2022 ஆம் ஆண்டிலும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டது.

அத்தோடு 2021 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்ட அனைத்துப் பிரஜைகளுக்கும் தேருநர் இடாப்பு தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய கூற்றொன்றை தமது அலைபேசி / கணனி ஊடாக பெற்றுக்கொள்வதற்கான வசதியும் இந்த ஆண்டிலும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டது.

தரம் 01 இற்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும் செயற்பாட்டிற்கு வலய/ கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு இலவசமாக மற்றும் பாடசாலைகளுக்கு நிவாரணக் கட்டணத்தை அறவிட்டு இ - சேவை ஊடாக வதிவிடம் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான சேவையொன்று செயற்படுத்தப்பட்டது.

தேருநர் இடாப்பு மீளாய்வுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் கடமைகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.10. தேருநர் இடாப்பு தொடர்பாக தொலைபேசி உதவி சேவையை நடைமுறைப்படுத்தல்

தேருநர் இடாப்பில் பெயர் பதிவு செய்யப்பட்டிருத்தலை சோதனைக்குட்படுத்தல் / தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்ப்பதற்கான கோரிக்கையை முன்வைத்தல் மற்றும் ஏனைய மீளாய்வு நடவடிக்கைகளுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலைப் போன்றே தொலைபேசி உதவி சேவைகள் 2022.06.20 முதல் 2022.07.30 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

2.2.11. மீளாய்வு தொடர்பாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல்

தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி மற்றும் CDMA தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு "Elections" எனும் தலைப்பில் கீழ் குறிப்பிடப்படும் குறுஞ் செய்தி பணம் அறவிடப்படாமல் 2022.02.01 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

<u>பெப்ருவரி 01 குறுஞ் செய்தி</u>

சிங்களம்

2021 ඡන්ද ලේඛනයේ නම නොමැතිනම් හෝ ලිපිනය වෙනස් කිරීමට අවශ්‍යනම් පමණක් 2022 ඡන්ද ලේඛනයට නම ඇතුළත් කිරීමට ග්‍රාම නිලධාරී විමසන්න.

சிங்லீஸ்

2021 Chanda Lekanaye nama nomathinam ho lipinaya wenas kireemata awashyanam pamanak 2022 Chanda Lekanayata nama athulath kireemata Grama Niladari wimasanna.

தமிழ்

2021 தேருநர் இடாப்பில் பெயர் இல்லையெனின் அல்லது முகவரியை மாற்றுவதற்கு தேவையாயின் மாத்திரம் 2022 தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்காக கிராம அலுவலரை விசாரிக்கவும்.

டங்லீஸ்

2021 terunar idapil peyar illeyenin alladu mugawariei matruwadaku teveiyain mattiram 2022 terunar idapil peyarai utsertukolwadakagal grama aluwalari visarikaum.

ஆங்கிலம்

Contact Grama Niladhari to include the name in the 2022 Electoral Register, only if your name isn't in the 2021 Register or if you want to change the address.

'அ' 'ஆ' பட்டியல்களைக் காட்சிப்படுத்தல் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைக் கையேற்பதற்கான காலப் பகுதியுடன் தொடர்பாக டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி மற்றும் CDMA தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு "Elections" எனும் தலைப்பில் கீழ் குறிப்பிடப்படும் குறுஞ் செய்தி பணம் அறவிடப்படாமல் 2022.06.20 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யூன் 20 குறுஞ் செய்தி

சிங்களம்

2022 ඡන්ද ලේඛනයේ ඔබේ නම තිබේදැයි, ග්‍රාම නිලධාරීගෙන් හෝ www.elections.gov.lk බලන්න. නම නැත්නම් ජූලි 12ට පෙර 0112860031 අමතන්න.

சிங்லீஸ்

2022 Chanda Lekanaye obe nama thibedeyi Grama Niladarigen ho www.elections.gov.lk web adaviyen balanna. Nama nethnam July 12ta pera 0112860031 amathanna.

தமிழ்

2022 ஆண்டின் தேருநர் இடாப்பில் உங்களது பெயர் உள்ளதாவென்று, கிராம அலுவலரிடம் அல்லது www.elections.gov.lk பார்க்கவும். பெயர் இல்லையாயின் யூலை 12 இற்கு முன்னர் 0112860032 அழைக்கவும்.

டங்லீஸ்

2022 aandin terunar idapil ungal peyar ulladawena, Grama aluwalaridam alladu www.elections.gov.lk parkavum. Peyar illayain July 12ku munnar 0112860032 alaikaum.

ஆங்கிலம்

Contact Grama Niladari or browse www.elections.gov.lk to ensure that your name is on the electoral register 2022. If isn't, inform 0112860034 before 12th July.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக 2022 ஆண்டிற்கான வாக்காளர்களைக் கணக்கெடுக்கும்போது முன்னைய ஆண்டுகளின் தேருநர் இடாப்பு மீளாய்வுகளுடன் ஒப்பிடுகையில் நகர்ப்புற, பகுதி நகர்ப்புற, தோட்டங்கள் மற்றும் கிராமிய பிரதேசங்களில் வாக்காளர் கணக்கெடுப்பில் குறைவை அவதானிக்க முடியுமாகியது. அத்தோடு 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்திற்கமைய 18 வயதை எய்தியவுடன் வாக்குரிமையை வழங்குவதற்கு சட்ட ரீதியிலான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட வேண்டிய பிரஜைகளின் எண்ணிக்கையில் குறைவைக் காண முடியுமாக இருந்தது. அதனால் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்ளல் சம்பந்தமாக பிரஜைகளுக்கு வழிப்புணர்வை ஊட்டுவதற்காக 2022.10.13 ஆம் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் SMS குறுஞ் செய்தியொன்றை Elections எனும் தலைப்பில் கீழ் டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டதுடன் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஒக்தோபர் 13 குறுஞ் செய்தி

சிங்களம்

2005.02.01 ට පෙර උපන් අය ඡන්ද ලේඛනයේ නම ඇත්දැයි ග්‍රාම නිලධාරීගෙන් / www.elections.gov.lk බලන්න. නම නැත්නම් ඔක්.19ට පෙර ග්‍රාම නිලධාරි හමුවන්න.

சிங்லீஸ்

2005.02.01 ta pera upan aya Chanda Lekanaye nama athdeyi Grama Niladarigen/ www.elections.gov.lk balanna. Nama nethnam Oct.19ta pera GN hamuwanna.

தமிழ்

2005.02.01 க்கு முன் பிறந்தோர், வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர் உள்ளதாவென கிராம அலுவலரிடம் / www.elections.gov.lk இல் பிரவேசித்து அறிந்து கொள்ளவும். பெயர் இல்லையாயின் ஒக்தோபர் 19 இற்கு முன் கிராம அலுவலரை சந்திக்கவும்.

டங்லீஸ்

2005.02.01 ku mun pirandor, vakkalar idapil ungal peyar ulladavena GN/www.elections.gov.lk il arindu kollaum. Peyar illaiyain October 19 ku mun GN ai sandikaum.

ஆங்கிலம்

Contact GN/browse www.elections.gov.lk those who were born before 2005.02.01 to ensure your name is in the electoral register. If not, meet GN before 19th Oct.

இந்தக் குறுஞ்செய்தி ஊடாக பாரியளவில் பொது மக்களுக்கு வழிப்புணர்வூட்டப்பட்டது. இது சம்பந்தமாக டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹட்சிசன் போன்ற அலைபேசி நிறுவனங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொண்ட சனாதிபதியின் செயலாளர், பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம

2.2.12 செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்களைப் பிரசுரித்தல்

பிரதான இடாப்பு மற்றும் குறைநிரப்பு இடாப்பு என்பவற்றில் பதிவு செய்துகொள்ளல் மற்றும் பொது மக்களை அறிவுறுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் செய்திப் பத்திரிகை அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் 2022.03.30 முதல் 2022.04.10 வரையான காலப் பகுதியினுள் பிரசுரிக்கப்பட்டது.

2022 ඡන්දහිමියන් ගණන් ගැනීම ආරම්භ

2022 වර්ෂය සඳහා ඡන්දහිමියන් ගණන් ගැනීම 2022.02.01 දින ආරම්භ කර ඇත. සෑම ගෘහයකටම ගණන් ගැනීමේ ආකෘතිපත්‍ර බෙදාදීම සිදු නොකෙරේ.

2021 වර්ෂයේ ලියාපදිංචි වී නොමැති නම් හෝ 2021 වර්ෂයේ ලියාපදිංචි ලිපිනය සංශෝධනය කළ යුතු නම්; 2004.01.31 හෝ ඊට පෙර උපන් තැනැත්තන් ලියාපදිංචි වීම සඳහා;

සහ

18 සම්පූර්ණ කළ විගස මාස 4කට වරක් පරිපූරක නාමලේඛන මඟින් ඡන්ද බලය

ලබාගැනීම සඳහා අවුරුදු 16 - 18 (2006.01.31ට පෙර උපන්) පුරවැසියන් ලියාපදිංචි වීම සඳහා ග්‍රාම නිලධාරී හෝ දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාලය විමසන්න.

මැතිවරණ කොමිෂන් සභාව
011-2868441 / www.elections.gov.lk

2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk

Enumeration of Electors 2022 begins

The enumeration of electors for the year 2022 has commenced on 01.02.2022. Enumeration forms are not distributed to every household.

Contact the Grama Niladhari or District Elections Office

if not registered in the year 2021 or if the address of the registration in the year 2021 need to be amended; for registration of persons born on or before 31.01.2004;

and

to register the citizens aged 16 - 18 years (born before 31.01.2006)

for obtaining voting right as soon as attaining the age of 18 by supplementary registers prepared every 4 months

Election Commission
011-2868441 / www.elections.gov.lk

செய்திப் பத்திரிகை	மொழி மூலம்	பிரசுரிக்கப்பட்ட திகதி / திகதிகள்
தினமின	சிங்களம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
தினகரன்	தமிழ்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
டெய்லி நியூஸ்	ஆங்கிலம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
சிலுமின	சிங்களம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
தினகரன் வார மஞ்சரி	தமிழ்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
சன்டே ஒப்சவர்	ஆங்கிலம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
திவயின	சிங்களம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
அய்லன்ட்	ஆங்கிலம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு திவயின	சிங்களம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
ஞாயிறு அய்லன்ட்	ஆங்கிலம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
நவலிய	சிங்களம்	ஏப்ரல் 04
விதுசர	சிங்களம்	ஏப்ரல் 06
லங்காதீப	சிங்களம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
அத	சிங்களம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு லங்காதீப	சிங்களம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
மவ்மிப	சிங்களம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08

சிலோன் டுடே	ஆங்கிலம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு மவ்பிம	சிங்களம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
ஞாயிறு சிலோன் டுடே	ஆங்கிலம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
அருண நாளிதழ்	சிங்களம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
தமிழன் நாளிதழ்	தமிழ்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
The Morning நாளிதழ்	ஆங்கிலம்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
வார இறுதி அருண	சிங்களம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
வார இறுதி தமிழன்	தமிழ்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
வார இறுதி The Sunday Morning	ஆங்கிலம்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
தரணி மகளிர் பத்திரிகை	சிங்களம்	ஏப்ரல் 06
தினக்குரல்	தமிழ்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு தினக்குரல்	தமிழ்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
வீரகேசரி	தமிழ்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு வீரகேசரி	தமிழ்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
யாழ் தினக்குரல்	தமிழ்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு யாழ் தினக்குரல்	தமிழ்	ஏப்ரல் 03 / ஏப்ரல் 10
உதயன்	தமிழ்	மார்ச் 30 / ஏப்ரல் 01 / ஏப்ரல் 04 / ஏப்ரல் 06 / ஏப்ரல் 08
ஞாயிறு உதயன்	தமிழ்	ஏப்ரல் 03

மேலே குறிப்பிடப்பட்ட அறிவித்தல்களை வெளியிட்ட செய்திப் பத்திரிகைகள், மொழி மூலம் மற்றும் பிரசுரித்த திகதிகள் சம்பந்தமான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு வாக்காளரும் கைவிடப்படாத வகையில் தேருநர் இடாப்பை தயாரிக்கும் நோக்கில் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் 2022.10.20, 21, 23 மற்றும் 25 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்டது.

2022.10.20, 21, மற்றும் 23 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள்.





2022.10.25 ஆம் திகதி செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள்









மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களை பிரசுரித்த பத்திரிகைகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்திப் பத்திரிகை	மொழி மூலம்	பிரசுரிக்கப்பட்ட திகதி / திகதிகள்
தினமின	சிங்களம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
தினகரன்	தமிழ்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
டெய்லி நியூஸ்	ஆங்கிலம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
சிலுமின	சிங்களம்	2022.10.23
சன்டே ஒப்சவர்	ஆங்கிலம்	2022.10.23
திவயின	சிங்களம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
ஐலண்ட்	ஆங்கிலம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
ஞாயிறு திவயின	சிங்களம்	2022.10.23
ஞாயிறு ஐலண்ட்	ஆங்கிலம்	2022.10.23
லங்காதீப	சிங்களம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
டெய்லி மிரர்	ஆங்கிலம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25

ஞாயிறு லங்காதீப	சிங்களம்	2022.10.23
சன்டே டைம்ஸ்	ஆங்கிலம்	2022.10.23
மவ்பிம	சிங்களம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
சிலோன் டுடே	ஆங்கிலம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
ஞாயிறு மவ்பிம	சிங்களம்	2022.10.23
ஞாயிறு சிலோன் டுடே	ஆங்கிலம்	2022.10.23
அருண நாளிதழ்	சிங்களம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
The Morning நாளிதழ்	ஆங்கிலம்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
வார இறுதி அருண	சிங்களம்	2022.10.23
The Sunday Morning	ஆங்கிலம்	2022.10.23
தினக்குரல்	தமிழ்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
ஞாயிறு தினக்குரல்	தமிழ்	2022.10.23
வீரகேசரி	தமிழ்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
ஞாயிறு வீரகேசரி	தமிழ்	2022.10.23
யாழ் தினக்குரல்	தமிழ்	2022.10.20 / 2022.10.21 / 2022.10.25
ஞாயிறு யாழ் தினக்குரல்	தமிழ்	2022.10.23

2.2.13 தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புக்களை விநியோகித்தல்

தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொண்டுள்ள எவரேனுமொருவருக்கு முன்னைய ஆண்டின் தேருநர் இடாப்பின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக தனது பதிவு செய்யப்பட்ட முகவரிக்குரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இந்த முறை பொது மக்கள் நேய முறையொன்றல்ல எனப் புரிந்துகொண்ட தேர்தல் ஆணைக்குழு எந்தவொரு மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கும் விண்ணப்பத்தை சமர்ப்பித்து எந்தவொரு மாவட்டத்தினதும் பதிவு செய்யப்பட்டுள்ள நபருக்கும் தேருநர் இடாப்பின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கான முறையொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அறிமுகஞ் செய்யப்பட்ட கணனி மென்பொருளொன்றின் ஊடாக குறித்த வசதி பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது இந்த அலுவல் அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பு தொடர்பான தகவல்களை பொது மக்களுக்கு வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் தொடர்பாக இந்த அறிக்கையில் அடுத்துவரும் பகுதிகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3. பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

இலக்கம் 18 பொலன்னறுவை தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. அமரகீர்த்தி அத்துகோரல அவர்களின் மரணத்தின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கே திரு. எஸ். ஜகத் சமரவிக்ரம அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2280/22 மற்றும் 2022.05.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் அரசியலமைப்பின் 99(எ) உறுப்புரையின் கீழ் (தேசியப் பட்டியல்) தெரிவு செய்யப்பட்ட திரு. பசில் ரோஹண ராஜபக்ஷ அவர்கள் கேட்டு விலகியமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. குலப்பு ஆரச்சிகே தொன் தம்மிக்க பெரேரா அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2283/39 மற்றும் 2022.06.10 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியினால் அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் (தேசியப் பட்டடியல்) தெரிவு செய்யப்பட்ட திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதியாக நியமிக்கப்பட்டமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கே திரு. வஜிர அபேவர்தன அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அது சம்பந்தமாக இலக்கம் 2289/42 மற்றும் 2022.07.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

2.4 மாகாண சபைத் தேர்தல்

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் திருத்தியமைக்கப்படல் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டம் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் மாகாண சபைத் தேர்தலை தொகுதிவாரி முறையின் கீழ் நடாத்துவதற்காக மாகாண சபை எல்லை நிர்ணயங்கள் பற்றிய அறிக்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படாமைக் காரணத்தினால் 2022 ஆம் ஆண்டிலும் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்த முடியவில்லை.

பதவிக் காலம் முடிவடைந்துள்ள அனைத்து மாகாண சபைகளும் ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் நிலவுகின்றன.

2.5 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்.

2.5.1 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்.

2018 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை 2022 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியல் நிறைவு செய்யப்பட்டது. அதற்கமைய அந்த அறிக்கையின் தொகுதி I இன் சிங்களப் பிரதியின் அச்சிடல் பணிகள் நிறைவு செய்யப்பட்டு புத்தகமாக தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் தொகுதி II இன் பகுதியான பெறுபேறுகள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் 2023.03.20 ஆம் திகதியுடன் முடிவடைந்ததுடன், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் இலக்கம் 2262/08 மற்றும் 2022.01.10 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலூடாக (252 அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 10(2)(ஆ) பிரிவின் கீழும் (255 அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 10(2)(ஆ) பிரிவின் கீழும் 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் சட்டத்தின் கட்டளைச் சட்டத்தின் 5(2)(ஆ) பிரிவின் கீழ் ஒவ்வொரு மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும் திகதியை 2023 மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டது.

2.5.2 உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதல்.

உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்பினர்கள் மரணித்தல், கேட்டு விலகல், கட்சி அங்கத்துவத்தை இழத்தல், அனுமதியின்றி சபைக் கூட்டங்களுக்கு உரிய காலப்பகுதியினுள் தொடர்ச்சியாக பங்குபற்றாமை, தவிசாளராக நியமிக்கப்படல், வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படல் மற்றும் ஆளுநரால் நீக்கப்படல் போன்ற காரணங்களின் அடிப்படையில் உறுப்பினர் வெற்றிடங்கள் ஏற்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்பும் பணி உள்ளூராட்சி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கிணங்க 2022 முதல் காலாண்டின் ஆரம்பத்திலிருந்து 2022 நான்காம் காலாண்டின் இறுதி வரை உள்ளூர் அதிகார சபைகளில் ஏற்பட்ட 252 உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதுபற்றிய தகவல்கள் குறிப்பு 27 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவிகளில் வெற்றிடம் ஏற்பட்டமைக்கான காரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	வெற்றிடம் ஏற்பட்டமைக்கான காரணம்	வெற்றிடங்களின் எண்ணிக்கை
1	அனுமதி பெறாமல் 03 சபைக் கூட்டங்களில் பங்குபற்றாமை	24
2	ஆளுநரால் நீக்கப்படல்	2
3	்டு விலகல்	95
4	கட்சி அங்கத்துவத்தை இழத்தல்	82
5	மரணித்தல்	44
6	தவிசாளராக நியமிக்கப்படல்	4
7	வரவுசெலவுத் திட்டம் தோற்கடிக்கப்படல்	1

2.5.3. 2023 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கு தயாராகுதல்.

ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக் காலம் 2023 மார்ச் மாதம் 19 ஆம் திகதியுடன் நிறைவடைவதனால் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவினால் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2023 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை நடாத்துதல் தொடர்பாக 2022.12.31 ஆம் திகதியன்று உள்ளூராட்சிப் பிரிவினால் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

2.5.4. 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்

2023 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	விடயம்	வர்த்தமானி பத்திரிகை இலக்கம்	வெளியிடப்பட்ட திகதி
1	(1) 4 பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல்.	26/2311	2022.12.21
2	(1) 4 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய (1)27 ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பிலும் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல்.	27/2311	2022.12.21

3	தேருநர் இடாப்பை காட்சிப்படுத்தல்	04/2312	2022.12.27
4	ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகளுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை பற்றிய வர்த்தமானி அறிவித்தல்.	44/2312	2022.12.29
5	அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியல் கட்சிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரசித்தப்படுத்தல்.	32/2311	2022.12.27
6	கட்சி சின்னங்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல்	34/2312	2022.12.28
7	அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியல் - வர்த்தமானி அறிவித்தல்	31/2312	2022.12.28
8	அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலை 27அ பிரிவின் கீழ் வர்த்தமானியில் அறிவித்தல்.	33/2312	2022.12.28

2.5.5 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்

2023 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுடன் தொடர்பான வெளியிடப்பட்ட சுற்றிக்கையிடப்பட்ட தகவல்கள் குறிப்பு 28 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.5.6. அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள எழுத்தாவணங்கள், படிவங்கள், கடித உறைகள், ஜெர்னல்கள், அறிவிறுத்தல் ஏடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துடன் தொடர்பான ஆவணங்களை தயார் செய்தல் பற்றிய தகவல்கள் குறிப்பு 29 உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.5.7 2023 உள்ளூர் அதிகார சபை தேர்தலுடன் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கடிதங்கள் மற்றும் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள்

உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுடன் தொடர்பாக ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகள் மட்டத்தில் தேர்தல் தொடர்பான அறிவித்தலை பிரசித்தப்படுத்துமாறு அறிவித்தல்.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 2023.01.18 முதல் 2023.01.21 நண்பகல் 12.00 மணி வரை பெயர்குறித்த நியமனங்களை கையேற்றல் பற்றிய அறிவித்தல்.

அஞ்சல் மூலம் வாக்களித்தல் பற்றிய ஊடக அறிவித்தல்.

தேர்தல் பணியாட் குழுவை குறைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு சம்பந்தமாக கவனத்திற் கொள்வதற்காக மாதிரி வாக்களிப்பொன்று 2022.12.16 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

2022.12. 17, 18, 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் வாக்களிப்பின் போது பயன்படுத்திக் கொள்ளப்படும் உத்தியோகபூர்வ அடையாளங்களின் நிலைமையை சோதனையிடுவதற்கு மற்றும் உரிய பிரகாரம் அவற்றை பழுதுபார்ப்பதற்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வாக்குப் பெட்டிகளின் பழுது பார்ப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளுமாறு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. .

அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் நிறுவனங்களை இனங்கண்டுக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் வகையில் குறியீடு இடும் முறையொன்றை அறிமுகம் செய்து அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொண்டு குறித்த தகவல்களை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெயர் குறித்த நியமனங்களுடன் தொடர்பான தகவல்களை போன்றே வீடுகளுக்கான அறிவித்தல்கள், வாக்களிப்பு தொடர்பான அறிவித்தல்கள், வாக்கெடுப்பு நிலையத்தில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல்கள் மற்றும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின்

தகவல்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குத் தேவையான தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய செயற்படுத்தல்.

2.6 விசேட கருத்திட்டங்கள்

அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வஜன வாக்குரிமையை பாதுகாக்கும் செயற்பாட்டிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடும் அனைவரையும் சமமாக கவனத்திற்கொள்வதன் தேவைப்பாடு சம்பந்தமாக பிரசைகளுக்கு அறிவூட்டும் திட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமான சர்வதேச ரீதியில் நினைவு கூரப்படும் விசேடமாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 26 நிகழ்ச்சித் திட்டங்கள் கடந்த ஆண்டில் நடாத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் இந்த 26 நிகழ்ச்சித் திட்டங்களில் நேரடியாக சர்வஜன வாக்குரிமை பாதுகாக்கும் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 06 நிகழ்ச்சித் திட்டங்களை மாத்திரம் நினைவு கூருதல் பொருத்தமென முன்மொழியப்பட்டது.

இந்த ஆண்டில் இந்த விடயங்களுடன் தொடர்பான அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களூடாக மேலே குறிப்பிடப்பட்ட நினைவு கூரும் தினங்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் வைபவங்கள் அல்லது அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் வளப்பங்களிப்பை வழங்கி மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முன்மொழியப்பட்டது.

2.6.1 வாக்காளர் தின வைபவம்

18 வயதை பூர்த்தி செய்த இளம் பிரசைகள் அவர்களுடைய 18 வயது பூர்த்தியடைந்த உடனேயே குறைநிரப்பு இடாப்பொன்றினூடாக அவர்களுக்கு வாக்குரிமையை வழங்குவதற்கு மற்றும் யூன் மாதம் 01 ஆம் திகதியன்று நிறைவு கூரப்பட்ட வாக்காளர் தினம் பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதியன்று மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக "உங்களது வாக்கு நாட்டின் எதிர்காலமாகும்" எனும் தொனிப்பொருளின் கீழ் வாக்காளர் தின வைபவமொன்று அதிமேதகு சனாதிபதி, கௌரவ பிரதமர், அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், இளைஞர் பாராளுமன்ற பிரதிநிதிகள், வலிமையிழந்தோர் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள், தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக பிரதிநிதிகள் உள்ளிட்ட சுமார் 400 பேரின் பங்கேற்புடன் 2022 மார்ச் மாதம் 11 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடாத்தப்பட்டது. இந்த வைபவத்தின் போது தேர்தல் செயற்பாடுகளுடன் தொடர்பான உத்தேச தேர்தல் சட்டத்திருத்தங்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் கருத்து சமூக மயப்படுத்தப்பட்டது. பொது மக்களின் வாக்குரிமை மீது நேரடியாக தொடர்புபடும் விடயங்கள், மாற்றங்கள் மற்றும் உத்தேச திருத்தங்கள் சம்பந்தமாக விரிவான வகையில் பொது மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்தல் இந்த வைபவத்தை நடாத்துவதன் முக்கிய நோக்கமாக இருந்ததுடன் அதனை மிக சிறப்பான வகையில் நடாத்த முடியுமாகியமை தேர்தல் ஆணைக்குழுவிற்கு மிக முக்கிய விடயமொன்றாகும்.

2.6.2 சர்வதேச சனநாயகத் தின வைபவம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் இறைமையின் மையப் பகுதியான வாக்குரிமையை சுதந்திரமாகவும் நீதியாகவும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாக இருப்பதனால் அது சம்பந்தமாக அறிவுறுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டின் சர்வதேச சனநாயகத் தின வைபவம் தேர்தல் முறைகள் சம்பந்தமான சர்வதேச நிறுவனத்தின் தொழிநுட்ப ஒத்துழைப்புடன் 2022 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

2.6.3 வலிமையிழப்புக்குட்பட்டோர்

2.6.3.1 இடைசெயற்பாட்டு தேர்தல் செயற்பாட்டிற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் ஏடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மைரைட் பிரதிநிதிகளுக்கு தெளிவுப்படுத்தல்.

வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களின் ஒன்றினைந்த முன்னணியின் (DOJF) கோரிக்கைக்கமைய மைரையிட் பிரதிநிதிகளின் குழுவுடன் இடைசெயற்பாட்டு தேர்தல் செயல்முறையொன்றுக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சியொன்று தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் 2022.01.19 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் சுவீடன் பிரதிநிதி வரயிக் மற்றும் மைரைட் நிறுவனத்தின் உள்நாட்டு ஒருங்கிணைப்பாளர், (DOJF) பிரதிநிதிகள் குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி) உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர். தேர்தல் ஆணைக்குழுவினால் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களை தேர்தல் செயற்பாட்டில் பங்கேற்க செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக வெளித்தரப்பினர் அறிந்திருத்தல் வேண்டுமென்பது இதன் எதிர்பார்ப்பாகும்.

2.6.3.2 வாக்காளர் பதிவு சம்பந்தமாக விழிப்புலனற்ற நபர்களுக்கு அறிவுறுத்துதல்.

வாக்காளர் தினம் சம்பந்தமாக தெளிவுப்படுத்துவதற்காக அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரகங்களில் பிரேயில் மொழியில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டது. அவற்றில் 200 பிரதிகளை விழிப்புலனற்ற பிள்ளைகள் கல்வி கற்கும் 12 பாடசாலைகளுக்கு 2022.02.11 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டது. வாக்காளர் பதிவின் முக்கியத்துவம் சம்பந்தமாக பாடசாலை மாணவர்கள் தெளிவைப் பெற்றிருத்தல் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

2.6.3.3 தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சைகைமொழி தொடர்பான அடிப்படை பயிற்சியை வழங்குதல்.

செவிப்புலனற்ற நபர்பகள் வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக ஏற்படும் சிரமங்களை குறைத்துக் கொள்வதற்கு அந்த அலுவலர்களுக்கு சைகைமொழி பற்றிய அடிப்படை பயிற்சியை பெற்றுக்கொடுத்தல் இதன் நோக்கமாகும்.

மாவட்டத்தில் சில அலுவலர்களுக்கு பயிற்சியை வழங்கி அவர்களூடாக மாவட்ட மட்டத்தில் அடிப்படை பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டது. இது சம்பந்தமான ஆரம்பக் கலந்துரையாடலொன்று இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனத்தின் (SLCFD) பிரதிநிதிகளுடன் 2022.02.22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதனூடாக 25 மாவட்டங்களில் சைகைமொழி சம்பந்தமான அடிப்படை அறிவைப் பெற்றுக்கொண்டுள்ள குறைந்தது 50 அலுவலர்களையாவது பயிற்றுவித்தல் நோக்கமாகும்.

2.6.3.4 வாக்காளர் தின் தேசிய வைபவத்தில் பங்கேற்றல்.

தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாக்காளர் தின தேசிய வைபவத்தில் பல்வேறு வலிமையிழப்புக்குட்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் DIESL- TWG அங்கத்துவ அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்க செய்யப்பட்டனர்.

வாக்காளர் தினம் சம்பந்தமாக அறிந்திருத்தல் மற்றும் தேசிய மட்டத்தில் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யும் போது அனைத்து பிரசைகளும் உள்ளடக்கப்படுதல் இதன் பிரதான நோக்கமாகுமென்பதோடு, 2022.03.11 ஆம் திகதி தலதாரி ஹோட்டலில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வலிமையிழப்புக்குட்பட்ட அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 19 பேர் கலந்துகொண்டனர்.

2.6.3.5 வலிமையிழப்புக்குட்பட்ட வாக்காளர்கள் தமது வாக்கை அடையாளமிடும் போது முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கு குறுகிய கால தீர்வுகள் முன்மொழிவை தயாரித்தல்.

பெபரல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் 2022.03.31 ஆம் திகதி பெரலெஸ்கமுவ எல்ப்ஏச் நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வலிமையிழப்புக்குட்பட்ட அமைப்புக்கள் பங்கேற்றதுடன் நடைமுறையில் துரிதமாக

செயற்படுத்த முடியுமான மும்மொழிவுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. இந்த மும்மொழிவுகளை பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு பெபரல் அமைப்பினால் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பங்கு பற்றினார்.

2.6.3.6 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு நடைமுறை தீர்வுகளை வழங்குதல் பற்றி கலந்துரையாடல்

பெபரல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் வாக்காளர்களை பதிவு செய்தல் மற்றும் பிரவேச வசதிகள் சம்பந்தமாக 2022 வாக்காளர்களை பதிவு செய்யும் போது வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களை உட்சேர்த்துக்கொள்வதற்கு கண்காணிப்பு அமைப்புக்களை அறிவுறுத்துதல், வாக்கெடுப்பு நிலையங்களில் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களை இனங்கண்டுகொள்வதற்கான அடையாள அட்டையொன்றை பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக 2022.04.06 ஆம் திகதி கலந்துரையாடலொன்று சிவல் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், தேர்தல் ஆணையாளர் நாயகம், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி) மற்றும் (தேசியத் தேர்தல்கள்) ஆகியோருடன் இலங்கை மன்றக் கல்லூரியில் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது.

2.6.3.7 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தேர்தல் செயற்பாட்டின் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளல்.

பெபரல் அமைப்பினால் திட்டமிடப்பட்ட கண்டி, மாத்தளை, கேகாலை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வாழும் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தேர்தல் செயற்பாடுகளின் போதும் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வு மும்மொழிவுகள் சம்பந்தமாக கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு போன்றே வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மாற்றுத் தீர்வுகளை இனங்கண்டுகொள்வற்கான கலந்துரையாடலொன்று 2022.05.05 ஆம் திகதி 25 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களின் பங்கேற்புடன் கண்டி சர்வோதய நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

2.6.3.8 மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் புதிய பணியாட் குழுவை வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தொடர்பில் உணர்வு பூர்வமாக நடந்துகொள்ளச் செய்தல்.

IFES மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் புதிய பணியாட் குழுவிற்கான பயிற்சித் திட்டத்தில் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் வாக்கெடுப்பு நிலையைங்களில் முகங்கொடுக்கும் சிக்கல்கள் சம்பந்தமாக உணர்வு பூர்வமாக நடந்து கொள்வதற்கு வாக்கெடுப்பு நிலையமொன்றின் மாதிரியை தயாரித்து அந்த அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தலைப் போன்றே தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட் குழு வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களின் பொதுவான பிரச்சினைகள் சம்பந்தமாக உணர்வு பூர்வமாக நோக்குதல் மற்றும் அந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேவையான தலையிடுகளை மேற்கொள்ளுதல் சம்பந்தமான கலந்துரையாடலொன்று 2022.05.26 ஆம் திகதி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் ஏனைய விடயத்திற்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர்களுடன் கொழும்பில் நடாத்தப்பட்டது.

2.6.3.9 வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களை தேர்தல் செயற்பாடுகளில் பங்கேற்கச் செய்யும் போது அவர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக அரசியல் கட்சி முகவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்.

பெபரல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்களை வலிமையிழப்புகுட்பட்ட நபர்களை தேர்தல் செயற்பாடுகளில் நேரடியாக பங்கேற்க செய்தல் சம்பந்தமாக உணர்வு பூர்வமாக நோக்கச் செய்தல், அவர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கு அரசியல் கட்சிகளினூடாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டது. தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளூடாக வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தேர்தல் செயற்பாடுகளின் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தேவையான உணர்வு பூர்வமான விடயங்களை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடலொன்று 2022.06.17 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் கௌரவ தவிசாளர், ஆணையாளர் நாயகம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் வலிமையிழப்புக்குட்பட்ட

நபர்களுக்கான அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் தேர்தல் ஆணைக்குழுவினல் நடாத்தப்பட்டது.

3.6.3.10. வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களில் ஒன்றிணைந்த கூட்டணி பிரதிநிதிகளின் முமமொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தவர்களுடன் மேலே குறிப்பிடப்பட்ட முன்னணி பிரதிநிதிகளின் சந்திப்பொன்று தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டது. அச்சந்திப்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தொடர்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களும் பங்கேற்றனர். இதன் போது இந்த முன்னணியின் பிரதிநிதிகளின் மும்மொழிவுகள் மற்றம் கருத்துக்கள் மீது கவனம் செலுத்தப்பட்டு எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக 2022.02.08 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. இந்த கலந்துரையாடலில் அந்த முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி 07 பேர் கலந்துகொண்டர்.

2.6.3.11 இலங்கையில் வலிமையிழப்புக்குட்பட்ட பிரசைகளை தேர்தல் செயற்பாடுகளில் முனைப்பான தரப்பினர்களாக இணைத்துக்கொள்வதற்கு ஆளடையளத்தை உறுதி செய்தலுடன் தொடர்புடைய சவால்கள் பற்றி வினவுதல் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணியின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்கேற்புடன் 2022.08.18 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மண்டரினா ஹோட்டலில் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டதுடன் அதன் போது இந்த செயற்பாட்டின் போதான தடைகள் சம்பந்தமான திரு. மஞ்ஜுள கஜநாயக்க அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. இதற்காக பெபரல் அமைப்பு பூரண அனுசரணை வழங்கியதுடன் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்தை செலுத்துதல் மற்றும் அதற்கான எதிர்கால் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

2.6.3.12 வாக்குச் சீட்டுக்களை இனங்கண்டுக்கொள்வதற்கான ஸ்டென்சில் சட்டகத்தை மேம்படுத்துவதற்காக விழிப்புலனற்ற நபர்களின் மும்மொழிவுகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளலும் சனநாயகம் மற்றும் சர்வஜன வாக்குரிமை பற்றி அறிவூட்டலும்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் வாழும் வழிப்புலனற்ற நபர்களை பங்கேற்கச் செய்து வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்கு வழிகாட்டும் ஸ்டென்சில் சட்டகத்தை பயன்படுத்தி வாக்களிப்பதற்கான ஒத்திகை செயற்பாடொன்றை மேற்கொள்ளுதல் தொடர்பான நிகழ்ச்சியொன்று 2022.08.30 ஆம் திகதி பாசிக்குடாவில் 54 விழிப்புலனற்ற நபர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் செயற்பாட்டிற்கான தொழிநுட்ப குழுவின் அழைப்பாளர் மற்றும் தேர்தல்கள் முறைமைகளுக்கான சர்வதேச அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்கேற்பு மற்றும் வளப்பங்களிப்புடன் இந்த நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்கு வழிகாட்டும் ஸ்டென்சில் சட்டகத்தை மேம்படுத்துவற்கான மும்மொழிவுகள் மற்றும் கருத்துக்களை பெற்றக்கொள்ளல், சனநாயகம் மற்றும் சர்வஜன வாக்குரிமை பற்றி அறிந்திருத்தல் இந்த நிகழ்ச்சியை நடாத்துவதனூடாக எதிர்பார்க்கப்பட்டது.

2.6.3.13 தேர்தல் செயற்பாட்டில் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கு நன்மைபயக்கக்கூடிய ஊடகங்க பயன்பாட்டிற்காக ஊடகவியலாளர்களை உணர்வு பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளச் செய்தல்

தேர்தலுக்கான சர்வதேச அமைப்பு, இலங்கையில் சகலரையும் உள்ளடக்கிய தேர்தல் செயற்பாடொன்றிற்காக சர்வதேச அமைப்பு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால்

ஊடகவியலாளர்களை உணர்வு பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளச் செய்வதற்கான நிகழ்ச்சியொன்று 2022.09.16 ஆம் திகதி 25 ஊடகவியலாளர்களின் பங்கேற்புடன் கொள்ளுப்பிட்டியவில் நடாத்தப்பட்டது. இதன்போது மாதிரி வாக்கெடுப்பு நிலையமொன்றின் ஊடாக வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான அநுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

2.6.3.14 அறிவு வளர்ச்சி குறைபாடுடைய நபர்களின் தேர்தல் செயற்பாடு தொடர்பான தெளிவை மேம்படுத்தல்.

கேகாலை மாவட்டத்தின் கொட்டகல அறிவு வளர்ச்சி குறைபாட்டைக் கொண்டுள்ள நபர்கள் தங்கியிருக்கும் நிலையத்தில் வசிக்கும் 60 பேர்களுக்கு வாக்கெடுப்பு நிலையமொன்றின் செயற்பாடு சம்பந்தமாக தெளிவுபடுத்தல் மற்றும் செயன்முறை பயிற்சியொன்று 2022.10.13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்சவின் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், கேகாலை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரச அலுவலர்களைப் போன்றோ தேர்தல் செயற்பாடுகள் தொடர்பான சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர். இதற்கான நிதி அனுசரணை IFES நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. .

2.6.3.15 2022 - 2025 மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.

2023 ஆண்டில் வலிமையிழப்புக்குட்பட்ட வாக்காளர்கள் தொடர்பாக திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடலொன்று 2022.11.16 ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. வலிமையிழப்புக்குட்பட்ட நபர்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாக இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தி 10 பேர் கலந்துகொண்டனர்.

2.6.3.16 இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் செயற்பாடு பற்றிய உரையாடல், அதனுடன் தொடர்பான நூலை மக்கள் மயப்படுத்தல் மற்றும் அறிக்கை காணொலியை வெளியிடுதல்.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களை சகலரையும் உள்ளடக்கிய தேர்தல் செயற்பாடு தொடர்பாக உணர்வு பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளச் செய்தல் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்காக வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களுக்கான அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணியுடன் மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. அந்த முன்னணியினால் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சி நூல் மற்றும் காணொலி இதன் போது வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் ஜயவர்தனபுரம் Monarch Imperial Hotel இல் நடாத்தப்பட்டதுடன் இதில் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

2.6.4. நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்

விசேட கருத்திட்டங்களின் கீழான நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளூராட்சி பிரிவினால் ஒருங்கிணைப்பு செய்யப்படுகின்றது. .

2.6.5. நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

உள்ளூராட்சி பிரிவின் விசேட கருத்திட்டங்களின் கீழ் தேர்தல்கள் தொடர்பான அனைத்து தரப்பினர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தல் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2.6.6. வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு

தேர்தல் ஆணைக்குழுவின் தூரநோக்கிக்கமைய சர்வஜன வாக்குரிமையை பாதுகாக்கும் நாட்டிற்காக விளிம்பு நிலையில் வாழும் பிரசைகளை உள்ளடக்கிய தேர்தல் செயற்பாடொன்றை உறுதிப்படுத்தல் மற்றும் வலிமையிழப்புக்குட்பட்ட நபர்களின் வாக்குரிமையை ஏனையோருடன் சமமான வகையில் நியாயமான அடிப்படையில் அனுபவிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.6.7. வலிமையிழந்த நபர்களின் வாக்குரிமைக்காக நிறைவேற்றப்படும் பிரதான அலுவல்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் நான்கு வருட கால மூலோபாயத் திட்டத்திற்கமைய உள்ளூராட்சிப் பிரிவின் அலுவல்கள் மற்றும் ஏற்புடைய அறிக்கைகளைத் தயாரித்தல்.

வலிமையிழந்த நபர்கள் உள்ளடங்கிய தேர்தல் செயற்பாட்டிற்கான சட்ட ரீதியான தடைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்புக்கான முன்மொழிவுகளை வழங்குதல்.

அனைத்து தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புக்களின்போது வாக்களிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்லும் வலிமையிழந்த வாக்காளர்களுக்கான விசேட வசதிகளை வழங்கலுடன் தொடர்பான அலுவல்கள்.

வாக்களிப்புச் செயற்பாடுகள், வசதிகள் மற்றும் உபகரணங்களை அறிந்து கொள்வதற்கு மற்றும் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான, பெற்றுக்கொள்ள முடியுமான வசதிகளை உறுதிப்படுத்தல்.
வலிமையிழந்த நபர்களுக்கு வாக்களிப்பதற்கு மற்றும் தெரிவு செய்யப்படுவதற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் இரகசியம் பாதுகாக்கப்படும் வகையில் ஏனையோருக்கு சமமான அடிப்படையில் பயன்மிக்க மற்றும் பூரணமான பங்கேற்பை உறுதிப்படுத்தல்.

வாக்காளர்களாக வலிமையிழந்த நபர்களின் விருப்பத்தை சுதந்திரமாக வெளியிடுவதனை உறுதிப்படுத்தல் மற்றும் தேவையான இடங்களில் அதற்காக அவர்களுடைய கோரிக்கைக்கமைய அவர்களே தெரிவு செய்துகொள்ளும் நபரொருவரின் மூலமாக வாக்களிப்பதற்காக இடமளித்தல்.

தேர்தல் ஆணைக்குழுவின் செயல் திட்டத்திற்கமைய உள்ளூராட்சிப் பிரிவின் கடமைகள் மற்றும் உரிய அறிக்கைகளை தயாரித்தல்.

வலிமையிழப்புக்குட்பட்ட வாக்காளர்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் வலிமையிழப்புக்குட்பட்ட வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

2.6.8. தொற்றுநோய் நிலைமைக் காரணமாக முகங்கொடுத்த சவால்கள்

2022 ஆம் ஆண்டிலும் கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும், நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய தரப்பினர்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் சிக்கலான விடயமாகவிருந்தது.

2.6.9. பெண்கள், இளைஞர்கள், சமூக ஊடகங்கள் மற்றும் சர்வதேச தின வைபவ நிகழ்ச்சித் திட்டங்கள்.

2022 ஆண்டின் மார்ச் மாதம் 08 ஆம் திகதியன்று நினைவு கூரப்படும் சர்வதேச பெண்கள் தினத்திற்கு இணையான வகையில் சனநாயகத்தின் அடிப்படை அங்கங்கள் சம்பந்தமாக மாவட்ட மட்டத்தில் அரசியலில் ஈடுபட்டுள்ள பெண்கள்/ சமூக மூல அமைப்புக்களின் அங்கத்தவர்கள் / அரசாங்க உத்தியோகத்தர்கள் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் அறிவூட்டப்பட்டனர்.

மாவட்டம்	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
மாத்தளை	50
வவுனியா	30
முல்லைத்தீவு	25
அம்பாறை	55
புத்தளம்	20
பொலன்னறுவை	136
கேகாலை	30

"மாற்றத்திற்கான வழி" தொனிப்பொருளின் கீழ் சனநாயகம் சம்பந்தமாக பெண் சிவில் செயற்பாட்டாளர்களை அறிவூட்டுவதற்கான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்டன. 66 பெண் சிவில் செயற்பாட்டாளர்களின் பங்கேற்புடன் சிங்கள மொழியில் 2022.07.22 ஆம் திகதியும் 44 பெண் சிவில் செயற்பாட்டாளர்களின் பங்கேற்புடன் தமிழ் மொழியில் 2022.07.29 ஆம் திகதியும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பெபரல் அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டதுடன் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரின் தலைமையில் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இது நடாத்தப்பட்டது.

2.7. வருடாந்த செயற்திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரினாலும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயற்திட்டத்தை தயாரித்தல்.

வருடாந்த செயற்திட்டம் சம்பந்தமாக காலாண்டு ரீதியில் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அந்த அறிக்கைகளை நிதி அமைச்சுக்கு சமர்ப்பித்தல். .

2.8. மூலோபாயத்திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவிற்கு நான்கு வருடகாலத்திற்கான (2022 – 2025) இரண்டாவது மூலோபாயத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



2.9. ஊடகங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

18 வயதை பூர்த்தி செய்தவுடன் இளைஞர் யுவதிகளுக்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கு முடியுமான வகையில் அங்கீகரிக்கப்பட்ட புதிய சட்ட திருத்தத்திற்கமைய "உங்களது வாக்கு நாட்டின் எதிர் காலமாகும்." எனும் தொனிப்பொருளில் 2022.02.01 ஆம் திகதி கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் ஏற்பாடு

செய்யப்பட்ட வருடாந்த வாக்காளர் தின வைபவத்திற்கு விரிவான பிரச்சாரமொன்றை வழங்குவதற்காக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனத் தலைவர்கள்/ தலைமை ஆசிரியர்கள்/ செய்திப் பதிப்பாசியர்கள் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.

தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 வருடாந்த வாக்காளர் தின வைபவம் தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்காக இலங்கை ஒளிபரப்புக்கூட்டுத்தாபனர், வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், தெரன தொலைக்காட்சி நிறுவனம் ஹிரு, தொலைக்காட்சி நிறுவனம், சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிறுவனம், சிரச தொலைக்காட்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமை சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் அது சம்பந்தமாக முன்வைக்கப்படும் மும்மொழிவுகள் மற்றும் நடவடிக்கைகள் சம்பந்தமாக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களை அறிவூட்டுவதற்கான ஊடக கலந்துரையாடலொன்று 2022.06.09 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டது.

2022.08.12 ஆம் திகதியன்று நினைவு கூரப்படும் சர்வதேச இளைஞர் தினத்திற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அன்மையில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட 18 வயதை பூர்த்தி செய்தவுடன் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ள சட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் செய்தியொன்றை ½ மணித்தியாலங்களைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை அனைத்து இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக 2022.08.12 ஆம் திகதி மக்கள் மயப்படுத்துவதற்கு வாய்ப்பளித்தல்.

தேர்தல் ஆணைக்குழுவினால் குறித்த காலப்பகுதியினுள் கீழ் குறிப்பிடப்படும் பிரதான விடயங்கள் தொடர்பாக 20 ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

i. தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானங்களை அறிவித்தல். .
ii. 2021 ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவுசெய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை இலங்கை சனநாயக சோசலில குடியரசின் அரசியலமைப்பின் 98வது உறுப்புரையின் (8)வது உப உறுப்புரைக்கமைய வர்த்தமானியில் அறிவித்தல்.
iii. தேர்தல் ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் 2022 தேருநர் இடாப்பு மீளாய்வு சம்பந்தமாக 2022.02.23 ஆம் திகதி கலந்துரையாடலொன்றை தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்துவதாகவும் எதிர்காலத்தில் நடாத்தப்படும் தேர்தல்களின் போது தேர்தல்கள் சட்டம், நடைமுறை சட்டம், கட்டளைகள் மற்றும் வழிகாட்டு நெறிகளை பயன்படுத்திக் கொள்ளும் போது இதுவரை ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி நீதியானதும் சுதந்தமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக தேர்தல் சட்டத்தை பயன்படுத்திக்கொள்ளும் விதம் சம்பந்தமாக இலங்கை பொலிஸ் அலுவலர்கள், தேர்தல் பிணக்குகள், முகாமைத்துவ பிரிவுகள் அலுவலர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வுகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தல்.
iv. தேர்தல் ஆணைக்குழு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடான கலந்துரையாடல்களின் போதான விடங்களை அறிவித்தல்.
v. தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்படும் 2022 ஆம் ஆண்டின் வாக்காளர் தின தேசிய வைபவம் 2022.03.11 ஆம் திகதி நடாத்தப்படுமென அறிவித்தல்
vi. நாட்டில் நிலவிய அசாதாரன சூழ்நிலை சம்பந்தமாக கவனத்தை செலுத்திய தேர்தல் ஆணைக்குழு அந்த நிலைமையை சீர்படுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை வெளியிடல்.

vii. 2022 ஆண்டிற்கான தேருநர் இடாப்பை தயாரித்தல் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெளிவுப்படுத்தல்.

viii. 2022 ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாடு சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெளிவுப்படுத்தல்.

viii. தேர்தல் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளல் சம்பந்தமான பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு, அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல், தேருநர் இடாப்பு மீளாய்வு பற்றி அறிவித்தல்.

ix. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுதும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் 2022.08.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது கலந்துரையாடிய விடயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள் சம்பந்தமாக அறிவித்தல்.

2.10. ஆவணக் காப்பகம்

தேர்தல் ஆணைக்குழுவின் ஆவணக் காப்பகத்தின் அலுவல்களை புதியதொரு வளவில் தாபித்து மிகவும் முறையான வகையில் பேணி நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் காணப்படும் எழுத்தாவணங்களை மிகவும் பாதுகாப்பாகப் பேணிவரல் மற்றும் அவற்றை தேவையான பிரகாரம் எந்தவொரு தரப்புக்கும் இலகு பரிசீலணைக்காக உரிய பிரகாரம் களஞ்சியப்படுத்திக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலை மேற்கொள்வதற்காக முழு நேர அடிப்படையில் அலுவலர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார். ஆவணக் காப்பகத்தின் அலுவல்கள் சம்பந்தமாக தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தினால் அந்த அலுவலருக்கு முறையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக ஆவணங்கள் காப்பகத்தின் சேவைகளை மிகவும் பயன்மிக்க வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.11. அறிவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் அரும்பொருட் காட்சியகம்

தேர்தல் ஆணைக்குழுவின் அலுவல்கள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாக மாணவர்கள், ஆய்வாளர்கள், அரசியல் கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நிதமும் வினவுவதுடன் அநேகமான சந்தர்ப்பங்களில் நிறுவனத்திற்கு வருகை தந்து தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர். எனவே இந்த அலுவல்களை மிகவும் பயன்மிக்கதும் வினைத்திறன்மிக்கதுமான விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவு முகாமைத்துவப் பிரிவொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தகவல்கள் தேவைப்படுபவர்களுக்கு இந்தப் பிரிவுக்கு வந்து அவர்களுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.12. 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளியீடுகள்

2022 – 2025 நான்கு வருடகால பங்கேற்பு மூலோபாயத் திட்டம்



தேர்தல் ஆணைக்குழுவின் 2017 – 2020 வரையான நான்கு வருடகால பங்கேற்பு மூலோபாயத் திட்டத்தில் இனங்கண்டு கொள்ளப்பட்ட கவன ஈர்ப்புத் துறைகளின் கீழ் ஆணைக்குழுவின் அலுவல்கள் மற்றும் கடைமைகளை உள்ளடக்கிய வகையில் காலாண்டு ரீதியில் புள்ளடியின் பலம் எனும் பெயரில் (News Letter) செய்தி சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது. அந்த செய்தி சஞ்சிகையின் ஐந்தாது தொகுதியின் மூன்றாவது இதழ் (செப்டெம்பர் - டிசம்பர் 2021) மற்றும் ஆறாவது தொகுதியின் முதலாவது இதழ் (சனவரி – ஏப்ரல் 2022), ஆறாவது தொகுதியின் இரண்டாவது இதழ் (மே – செப்டெம்பர் 2022) அச்சிடப்பட்டுள்ளது.





2022.03.11 ஆம் திகதி நடாத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் வாக்காளர் தின தேசிய வைபவத்துடன் இணையான வகையில் சர்வஜன வாக்குரிமை, மக்கள் இறைமை மற்றும் சனநாயகம் சம்பந்தமாக பொதுமக்களிடையே விரிவான புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார்ந்த தொழில் வல்லுநர்களின் கட்டுரைகளை உள்ளடக்கிய “2022 வாக்காளர் தின தேசிய நினைவு வைபவம்” எனும் பெயரில் நூலொன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.



2020.08.05 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கை மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு 2022.05.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



2015 சனாதிபதித் தேர்தல் மற்றும் 2015 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் இரண்டு நூல்களாக தயாரிக்கப்பட்டு அச்சிடப்படல்.



2023 வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையை தயாரித்தல்.



2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையான இரண்டு வருடங்களின் அடிச்சுவடுகள் அறிக்கை தயாரிக்கப்பட்டது.



2.13. சட்ட நடவடிக்கைகள்

2022 ஆம் ஆண்டில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களை பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிட்டு புதிதாக தாக்கல் செய்யப்பட்ட 48 வழக்குகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

2.13.1 உயர் நீதிமன்றம்.

உயர் நீதிமன்றத்தில் 16 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பான 09 வழக்குகளும் (வழக்கிலக்கம் SC/FR/203/2022, SC/FR/207/2022, SC/Writ/04/2022, SC/FR/210/2022, SC/FR/206/2022, SC/FR/216/2022, SC/FR/217/2022, SC/FR/211/2022, SC/FR/215/2022), கட்சி அங்கத்துவம் முடிவுறுத்தப்படல் தொடர்பான 03 வழக்குகளும் (வழக்கிலக்கம் SC/Exp/01/2022, SC/Exp/02/2022, SC/Exp/03/2022), நடாத்தப்படவிருக்கும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் சம்பந்தமாக 02 வழக்களும் (வழக்கிலக்கம் SC/Writ/06/2022, SC/Writ/06/2022), உள்ளூர் அதிகார சபை தவிசாளர் பதவித் தொடர்பான 01 வழக்கும் (வழக்கிலக்கம் SC/Writ/02/2022), அரசியல் கட்சிகளை பதிவுசெய்தலுடன் தொடர்பான 01 வழக்கும் (வழக்கிலக்கம் SC/FR/247/2021) தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2.13.2 மேன்முறையீட்டு நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 06 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றில் உள்ளூர் அதிகார சபைகளின் தவிசாளர் பதவி தொடர்புடைய 04 வழக்குகளும் (வழக்கிலக்கம் CA/Writ/52/2022, CA/Writ/24/2022, CA/Writ/11/2022, CA/Writ/182/2022) தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாமை தொடர்பான 01 வழக்கும் (வழக்கிலக்கம் CA/Writ/255/2022) பிராஜாவுரிமை சம்பந்தமான 01 வழக்கும் (வழக்கிலக்கம் CA/Writ/434/2022) தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2.13.3 மேல் நீதிமன்றம்

மேல் நீதிமன்றத்தில் 09 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 07 வழக்குகள் (வழக்கிலக்கம் WP/HCCA/COL/LA/04/2022, WP/HCCA/COL/LA/05/2022, HC/NE/Writ/02/2022, WP/HCCA/COL/LA/127/2022, WP/HCCA/COLOMBO/175/22/LA, HC/NE/Writ/13/2022, WP/HCCA/Mt./54/2021/LA) கட்சி அங்கத்துவம் முடிவுறுத்தப்படலுடன்

தொடர்புடைய வழக்குகளாகும் என்பதோடு, 02 வழக்குகள் (வழக்கிலக்கம் HC/NE/Writ/04/2022, HCW/04/2022) உள்ளூர் அதிகார சபைகளின் தவிசாளர் பதவி தொடர்பான வழக்குகளாகும்.

2.13.4 மாவட்ட நீதிமன்றம்

மாவட்ட நீதிமன்றத்தில் 17 வழக்குகள் தாக்கள் செய்யப்பட்டுள்ளதுடன். அவற்றில் 16 வழக்குகள் கட்சி அங்கத்துவத்தை முடிவுறுத்துதல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளாகும் என்பதோடு, 01 வழக்கு தேருநர் இடாப்பில் இருந்து பெயரை நீக்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். அவையாவன (வழக்கிலக்கம் DSP/10/2022 - கொழும்பு, DSP/11/2022 - கொழும்பு, DSP/25/2022 - கொழும்பு, SPL/31/2022 - யாழ்ப்பாணம், SPL/373/2022 - மொறட்டுவை, DSP/161/2022 - கொழும்பு, DSP/162/2022 - கொழும்பு, DSP/156/2022 - கொழும்பு, DSP/147/2022 - கொழும்பு, DSP/436/2021 - கொழும்பு, DSP/441/2021 - கொழும்பு, DSP/107/2021 - கொழும்பு, DSP/442/2021 - கொழும்பு, DSP/435/2021 - கொழும்பு, SPL/04/2022 - மத்துகமை, DSP/458/2022 - கொழும்பு, 1546/22/ விஷேட – கல்கிசை).

இதற்கு முன்னைய ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுடன் தொடர்பான திருத்தப்பட்ட 01 மனுவும் இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுடன் தொடர்பான திருத்தப்பட்ட 06 மனுக்களும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து வழக்குகள் மற்றும் திருத்தப்பட்ட மனுக்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களும் தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஒப்பமிடப்பட்ட பதிலாள் பத்திரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்தோடு மேலே குறிப்பிடப்பட்ட வழக்குகளுடன் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் அவதானிப்புகளும் 32 வழக்குகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக மாத்தறை பொலிசாரினால் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 47057 ஆம் இலக்க வழக்கிற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தோற்றுவதனால் ஆணைக்குழு சார்பாக சாட்சியங்களை வழிநடாத்துவதற்கு மாத்தறையில் தனிப்பட்ட சட்டத்தரணி ஒருவரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், 09 வழக்குகள் (வழக்கிலக்கம் SC/FR/203/2022, SC/FR/207/2022, SC/Writ/04/2022, SC/FR/210/2022, SC/FR/206/2022, WP/HCCA/COL/LA/04/2022, WP/HCCA/COL/LA/05/2022, HC/NE/Writ/04/2022, DSP/11/2022(Colombo) தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்பான 17 வழக்குகள் (வழக்கிலக்கம் SC/Exp/03/2019, SC/FR/440/2019, SC/FR/200/2021, DSP/05/2021, MIS/168/2018, MIS/167/2018, CA/Exp/01/2019, CA/Exp/01/2020, DSP/13/2020, CA/Writ/242/2021, CA/Exp/01/2020, DSP/88/2021, SC/Writ/09/2022, SC/SPL/228/2021/LA, SC/FR/440/2019, SC/Writ/03/2021, DSP/07/2021) முடிவுறுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

2.13.5 சட்டமா அதிபரின் ஆலோசனைகளை உசாவுதல்

இது தவிர பல்வேறு சட்டரீதியான நிலைமைகள் சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளை வினவி 08 விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்பாக தேசியத் தேர்தல்கள் பிரிவு மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான 40 சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற 05 முறைப்பாடுகளுக்கு குறித்த தரப்பினரிடமிருந்து தகவல்கள் வினவப்படல் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.13.6. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுடன் தொடர்பான விசாரணைகள் மற்றும் பிசீ படிவங்களை புறத்தொதுக்குதல்.

லஞ்சம் மற்றும ஊழல் விசாரணைக்குரிய 04 விசாரணைகளுடன் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த தேர்தல்களுடன் தொடர்பான ஆவணங்களை புறத்தொதுக்குதல் மற்றும் பிசீ படிவங்களை புறத்தொதுக்குதல் சம்பந்தமான ஆலோசனைகளை வினவி கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான 18 ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகளுக்கு சாட்சியங்களை வழங்குதல் தொடர்பான அழைப்பாளைகளை குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அனுப்புதல் மற்றும் அவற்றுடன் தொடர்பான 18 அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.14. தேர்தல் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளல்

தேர்தல் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளும் அலுவல்களுடன் தொடர்பாக தேர்தல் செலவுகள் கட்டுப்பாட்டிற்கான சட்ட மூலம் கௌவர சட்டமா அதிபரின் அவதானிப்புக்குப் பின்னர் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதனை அமைச்சரவை அங்கீகாரத்திற்கு மற்றும் சட்ட மூலமொன்றாக மும்மொழிகளிலும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக தற்போது அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றினூடாக கௌரவ சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2.14.1. தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் சம்பந்தமாக விசேட பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான மும்மொழிவுகள்

தேர்தல் சட்ட சீர்திருத்தம் தொடர்பாக விசேட பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் சட்ட சீர்திருத்த மும்மொழிவுகளை துரிதமாக சட்ட மயப்படுத்துவதற்குத் தேவையான சமூகப் பின்னணியை ஏற்படுத்துதல் (IRES) மற்றும் அது சம்பந்தமாக பிரசைகளை அறிவூட்டுவதற்கு சனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆராய்ச்சி நிறுவனம் (IFES) மற்றும் தேர்தல் அமைப்புக்களுக்கான சர்வதேச மன்றம் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் வகையில் கருத்தரங்குகள் தொடர் ஒன்று நடாத்தப்பட்டதுடன் அதுபற்றி தகவல்கள் குறிப்பு 30 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.15 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்துடன் தொடர்பான அலுவல்கள்

2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தகவலுக்கான உரிமைச் சட்டத்துடன் தொடர்பான 74 கோரிக்கைகளில் 65 கோரிக்கைகள் தொடர்பாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 03 கோரிக்கைள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 06 கோரிக்கைகளுக்கான தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

2.16 அரசியல் கட்சிகள்

2.16.1. அரசியல் கட்சிகளை பதிவு செய்தல் மற்றும் விண்ணப்பங்களைக் கோருதல்

நாடொன்றின் ஆட்சிக்கான பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு போன்றே அந்த பிரதிநிதிகளை அரசியல் சூழலுடன் இயைந்து நடப்பதற்கு அரசியல் கட்சி முறையினால் பாரிய பணியொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் பிரதிநிதித்துவ சனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் பங்களிப்பு மிக முக்கியமாகும். அரசியல் கட்சி என்றால் கொள்கையொன்றின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யும் அரசியல் சார்ந்த அமைப்பொன்றாகும். இந்த அரசியல் செயற்பாட்டு அமைப்புக்களை அரசியல் நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளென தேர்தல் ஆணைக்குழுவில்

பதிவு செய்து கொள்ளும் சட்டரீதியான ஏற்பாடுகள் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் எழாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஏதேனுமொரு அரசியல் செயற்பாட்டு அமைப்பைபொன்றின் தேர்தல் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கு எழுத்துமூலமான கோரிக்கையொன்றை முன்வைக்குமாறு அறிவித்து சகல ஆண்டுகளிலும் சனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரசித்த அறிவித்தலொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். குறித்த செயற்பாட்டு அமைப்பு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய காலப்பகுதியினுள் தமது கோரிக்கையை முன்வைக்க வேண்டுமென்பதோடு, இந்த செயற்பாடு தேர்தலொன்றுக்கான திகதி வெளியிடப்பட்டிருப்பின் தேர்தல் முடிவடையும் வரை இடைநிறுத்தப்படும்.

அரசியல் செயற்பாட்டு அமைப்பொன்றை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பத்துடன் தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சின்னங்களிடையே தன்னால் தெரிவுசெய்யப்பட்ட சின்னமொன்று, கட்சியின் சட்டக்கோவை கட்டாயமாக பெண் பிரதிநிதியொருவரையாவது பிரதான பதவியொன்றில் நியமிக்கப்பட்ட கட்சி அலுவலர்கள் பட்டியல், கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள், கட்சியின் நிகழ்கால கொள்கை பிரகடனம் ஆகிய தகவல்களுடன் இந்த கோரிக்கையை சமர்ப்பிக்கும் திகதிக்கு குறைந்தது 04 வருட காலத்திற்கு முன்னர் கட்டாயமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அல்லது இரண்டு வேட்பாளர்களிடையே குறைந்தது ஒரு வேட்பாளராவது குறித்த கோரிக்கையை முன்வைத்த திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் போது வெற்றிப்பெற்றுள்ளதாக அல்லது பல்வேறு மாகாண சபைகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 05 வேட்பாளர்களிடையே 03 பேர் இந்த கோரிக்கையை முன்வைத்த தினத்திற்கு முன்னர் நடந்த மாகாண சபைத் தேர்தலின் போது வெற்றிப்பெற்றுள்ளளதாக தகவல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, அது தொடர்பாக ஆணைக்குழு திருப்தியடைத்தல் வேண்டும்.

இது சம்பந்தமாக பூரண தகவல்கள் உள்ளடக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டின் 1 இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) உபபிரிவின் கீழான அறிவித்தல் இலக்கம் 2263/23 மற்றும் 2022.01.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பிரசித்தப்படுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் 01 இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் அலுவல்களுக்காக அரசியல் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் இலக்கம் 2263/24 மற்றும் 2022.01.21 ஆம் திகதிய அதிசேட வர்த்தமானியில் பிரதித்தப்பட்டதப்பட்டதுன். இலக்க 2267/2 மற்றும் 2022.02.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் 2022.01.24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022.02.25 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்து கொள்வதற்கு 80 அரசியல் அமைப்புக்கள் விண்ணப்பங்களை முன்வைத்துள்ளன. அது சம்பந்தமான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 80
- தாமதமாக கையளித்தமையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 04
- அடிப்படை விடயங்கள் நிறைவு செய்யப்படாமையின் காரணமாக நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 34
- கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை - 03
- நேர்முக தேர்வுக்காக முதலாம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை - 39
- நேர்முக தேர்வின் முதலாம் கட்டத்தின் பின்னர் நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை- 26
- நேர்முக தேர்வின் இரண்டாம் கட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கை - 13
- நேர்முக தேர்வின் இரண்டாம் கட்டத்தின் பின்னர் நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை - 06
- 2022 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை - 07

2022 ஆம் ஆண்டில் அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2022 ஆண்டில் 07 அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 79 ஆகும் அது பற்றிய தகவல்கள் இலக்கம் 2263/22 மற்றும் 2022 சனவரி 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டதுடன் தேர்தல் ஆணைக்குழுவின் இணைத்தளமான www.elections.gov.lk இலும் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தோடு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர் பட்டியல் இல 2312/31 மற்றும் 2022.12.28 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதுதொடர்பான தகவல்கள் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.16.2. அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள்

தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள், அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்காக அரசியல் கட்சிகளின் அலுவலர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல், ஊடக வழிகாட்டுநெறிகள் மற்றும் நன்னெறிகள் சம்பந்தமாக, அரசியல் கட்சிகளின் பதிவு மற்றும் ஆண்டறிக்கையைப் பெற்றுக்கொடுத்தல், உள்ளூர் அதிகார சபைகளின் வெற்றிடங்களை நிரப்புதல், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துதல் சம்பந்தமாக மற்றும் தேர்தல் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் / நிரந்தர முகவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வுக் காலப் பகுதியினுள் அதாவது 2022.02.23, 2022.06.06, 2022.08.08 மற்றும் 2022.08.23 ஆம் திகதிகளில் தேர்தல் ஆணைக்குழுவில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இந்தக் கலந்துரையாடல்களுக்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

2.17 தேர்தல் பிணக்குகளைத் தீர்த்தல்

தேர்தல் பிணக்குகள் தீர்வு சம்பந்தமான முறைகள் மற்றும் எதிர்வரும் தேர்தல்களின்போது தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவுகளில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சிவில் அலுவலர்கள், அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் பொலீஸ் அலுவலர்கள், பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் அலுவலர்கள் ஆகியோருக்கு 15 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டதுடன், அது சம்பந்தமான தகவல்கள் குறிப்பு 31 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறைகளுக்கு தேர்தல் வன்முறை செயற்பாடுகளை கண்காணிப்பு நிலையம் (CMEV) , தேர்தல் செயல்முறைக்கான சர்வதேச அமைப்பு (IFES) மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFERAL) ஆகிய அமைப்புக்கள் அனுசரணை வழங்கின. அது தவிர இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை அனுசரணை அமைப்புக்களின் நிதி ஏற்பாட்டின் கீழ் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிலவிய பொருளாதார சிக்கல்கள் காரணமாக அதற்கான அனுசரணை வழங்கும் அமைப்பொன்றை தொடர்புபடுத்திக்கொள்ள முடியாமையின் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களை ஒத்திவைக்க நேரிட்டது.

2.18 வாகனங்கள் நிர்வகிப்பு

குத்தகை முறையின் கீழ் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட வாகனங்களில் 05 வருடங்கள் பூர்த்தியடைந்தமையின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் தேர்தல்

ஆணைக்குழுவுக்கு உரிமை மாற்றம் செய்துகொள்ளப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

மன்னார் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த 253-0452 ஆம் இலக்க டோயோடா கெப் வண்டியின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக 32 இலட்சம் ரூபா பெறுமதிமிக்க மதிப்பீடொன்றை முகவர் நிறுவனமான டொயோட்டா லங்காவிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த மதிப்பீடு இயந்திரவியல் பொறியிலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கெப் வண்டி சுமார் 24 வருடகாலம் ஓடியுள்ளமையின் காரணமாக இந்தளவு பெரியதொரு தொகையொன்றை செலுத்தி பழுது பார்த்தல் பொருளாதார ரீதியில் நன்மை பயக்காதிருப்பதனால் புறத்தொதுக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

ஆயினும் அரசாங்க கைத்தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கு இந்த வண்டியை உரிமை மாற்றம் செய்து தருமாறு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டதுடன் அதற்கிணங்க 2022.09.16 ஆம் திகதி அந்த திணைக்களத்திற்கு இந்த வாகனம் உரிமை மாற்றப்பட்டது.

நாட்டில் நிலவிய பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் அதிகளவு தவனைத் தொகையை செலுத்தவேண்டி ஏற்பட்டமையினால் செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த PI-2359 மற்றும் PI-2360 ஆகிய இரண்டு கெப் வண்டிகளையும் ஒப்பந்த காலம் நிறைவடைவதற்கு முன்னர் 2022.07.31 ஆம் திகதி குறித்த நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்தோடு CAY-4839 ஆம் இலக்க Outlander வண்டியையும் இதே விதமாக 2022.06.20 ஆம் திகதி மீள கையளிக்கப்பட்டது.

புறத்தொதுவதற்கு முன்மொழியப்பட்டிருந்த UI-9835 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் 2022.11.16 ஆம் திகதி பிரசித்த எலத்தில் விற்பனை செய்யப்பட்டதுடன் அதன் மூலம் ரூபா .56,500.00 வருமானமொன்று அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது.

2.18.1 தேர்தல் ஆணைக்குழுவின் வாகனம் பற்றிய தகவல்கள்

குத்தகை முறையின் கீழ் பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்ட வாகனங்களிடையே ஐந்து வருடங்கள் நிறைவடைந்தமையின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர் இல	வதிவு இலக்கம்	உற்பத்தி வருடம்	உரிமை மாற்றம் செய்யப்பட்ட திகதி	பெறுமதி (ரூ)
1	CAR-5330	2014	2022.02.01	7,390,000.00
2	CAR-5342	2014	2022.02.01	7,390,000.00
3	CAR-5346	2014	2022.02.01	7,390,000.00
4	CAD-1251	2014	2022.02.01	7,400,000.00
5	PG-1775	2014	2022.02.01	6,390,000.00
6	PG-1781	2014	2022.02.01	6,390,000.00
7	PG-1782	2014	2022.02.01	6,390,000.00
8	PG-1783	2014	2022.02.01	6,390,000.00
9	PG-1784	2014	2022.02.01	6,390,000.00
10	PG-3994	2014	2022.02.01	6,390,000.00
11	PG-3995	2014	2022.02.01	6,390,000.00

2022.12.31 ஆம் திகதியன்று தேர்தல் ஆணைக்குழுவிடம் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொ.இல.	வாகன வகை	எண்ணிக்கை	அலுவலகம்			
			தலைமை அலுவலகம்		மாவட்ட அலுவலகங்கள்	
			குழாம்	ஒதுக்கப்பட்ட	குழாம்	ஒதுக்கப்பட்ட
1	கெப்	34	7	-	27	-
2	கார்	19	10	9	-	-
3	வேன்	03	3	-	-	-
4	ஜீப்	01	-	1	-	-
5	லொறி	01	1	-	-	-
6	குரு கெப்	01	1	-	-	-
7	மோட்டார் சைக்கள்	01	1	-	-	-
8	பஸ்	1	1	-	-	-
மொத்தம்		61	24	10	27	-

2.19 நிர்மாணங்கள் மற்றும் சொத்துக்கள்

2.19.1. நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்ப்புகள்

செலவு விடயம் - 2001

தேர்தல்கள் செயலகத்தின் பெறுகை பிரிவில் 08 இரும்பு இராக்கைகளை தயாரித்து பொறுத்துதல், பிரதான கேட்போர் கூடத்தின் பெயர் பலகைகளை பழுதுபார்த்தல், நீர் உந்தி இயந்திரம் வைக்கப்பட்டுள்ள இரண்டு அறைகளின் மின்சார வழங்கள் தொகுதியை இற்றைப்படுத்தல், புதிய மின்பிரப்பாக்கி இயந்திரத்தை வைப்பதற்கான கட்டிடத்தை நிர்மாணித்தல், வடக்கு முனைய கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் நீர் கசியும் இடங்களை சீர்செய்தல் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலக வளவின் அவசர மற்றும் அத்தியவசிய பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாத்தறை மற்றும் வவுனியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் அவசர மற்றும் அத்தியவசிய பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்டி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லத்தின் மற்றும் திருகோணமலை சுற்றுலா விடுதியின் அவசர மற்றும் அத்தியவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவு திட்ட சுற்றறிக்கைக்கிணங்க நடவடிக்கை மேற்கொண்டு அத்தியவசியமான மற்றும் அவசரமான பழுதுபார்ப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை இங்கு விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் 5.7 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

செலவு விடயம் - 2104

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்காக நிர்மாணிக்கப்படும் புதிய நான்கு மாடிக் கட்டிடத்தின் முதலாவது கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் மற்றும் அதன் இரண்டாவது மேற்கொள்ளுதல் மற்றும் அதன் இரண்டாவது கட்டப் பணிகளை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவுகளை நிதி அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தற்போது பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள பகுதியை பயன்படுத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.20. பொருட்கள் கொள்வனவு, இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் / பழுது பார்ப்புக்கள் / பராமரிப்பு

2.20.1. வாக்காளர்களைப் பதிவு செய்தல்

வருடாந்தம் நடாத்தப்படும் வாக்காளர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளுக்கு பிசி படிவங்களுக்குப் பதிலாக "அ" மற்றும் "ஆ" தகவல்களை மாத்திரம் சேகரித்தலுடன் தொடர்பான ER படிவங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 15 இலட்சம் ER படிவங்களை அரசாங்க அச்சகத்தினால் அச்சிட்டதன் பின்னர் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2022 ஆம் ஆண்டு முதல் அறிமுகஞ் செய்யப்பட்ட குறைநிரப்பு இடாப்பொன்றை தயாரித்தலுடன் தொடர்பாக YC படிவங்கள் மற்றும் குறைநிரப்பு இடாப்பொன்றை தயாரித்தல் சம்பந்தமான சுமார் 65 இலட்சம் அறிவுறுத்தல் பத்திரங்களை அச்சிட்டு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2.20.2. தேருநர் (வாக்காளர்) இடாப்புக்களை அச்சிடுதல்

2022 தேருநர் இடாப்பை இம்முறை அரசாங்க அச்சகத்தினால் அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன். அந்த அச்சிடல் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் குறித்த மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான செலவாக அரசாங்க அச்சகத்திற்கு சுமார் 17.40 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதுடன், 33 இலட்சம் ரூபா செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.20.3 இயந்திர சாதனங்கள் கொள்வனவு / பழுதுபார்த்தல் / பராமரிப்பு

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தேவைக்காக இயந்திர சாதனங்களின் தேவை எழுந்துள்ள போதிலும் வரையறுக்கப்பட்ட நிதி ஏற்பாடு காரணமாக கணினிகள், கணினி அச்சிடல் பொறிகள், டீசீபீ இயந்திரங்கள், நிழற்படப்பிரதி இயந்திரங்கள் போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. ஆனாலும் யூபீஎஸ் மற்றும் மடிக் கணினிகளைக் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டமையினால் 2.58 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

தலைமை அலுவலத்தின் தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் தேவைப்பாட்டின் அடிப்படையில் மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை கொள்வனவுசெய்து பொருத்தப்பட்டதுடன், அதற்காக 6.91 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் உள்ள உத்தரவாதக் காலம் பூர்த்தியடைந்துள்ள கணினிகள், கணினி அச்சிடல் பொறிகள், பெக்ஸ் இயந்திரங்கள், நிழற்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் காற்றுச் சீராக்கிகள் உள்ளிட்ட ஏனைய இயந்திர சாதனங்களுக்கான பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக 3.29 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் கணினி அச்சிடல் பொறிகள் மற்றும் நிழற்படப்பிரதி இயந்திரங்களுக்குத் தேவையான சாயத்தூள் (ரோனர்) மற்றும் டரம்யுனிட் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு 18.34 மில்லியன் ரூபா தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் இணைய வசதிகளுடன் வலையமைப்பு செய்வதற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மென்பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக 13.11 மில்லியன் ரூபா தொகை செலவு செய்யப்பட்டுள்ளதுடன், மாதாந்த தொலைபேசி மற்றும் இணையத்தள வசதிகளுக்காக நவம்பர் மாதம் வரையான காலப்

பகுதிக்கான விலைப் பட்டியல்களுக்காக 21 மில்லியன் ரூபா தொகை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் உள்ள கணினி அச்சிடல் பொறிகள், நிழற்படப்பிரதி இயந்திரம், நகல் பிரதி இயந்திரங்கள் மற்றும் காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் ஆகியவற்றின் சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக 4.79 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.

2.20.4 அலுவலகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்

தலைமை அலுவலகத்தின் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணியாட்குழுவுக்குத் தேவையான மேசைகள், கதிரைகள், கபினட் போன்ற பல்வேறு அலுவலகப் பொருட்களைக் கொள்வனவுசெய்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்காக 2.69 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குத் தேவையான அலுவலகப் பொருட்களை வரைவு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கி அங்கீகாரத்தின் பிரகாரம் பிரதேச பெறுகைக் குழுவின் பரிந்துரை மற்றும் தீர்மானத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போதாமையின் காரணமாக கொள்வனவு செய்ய முடியவில்லை.

2.20.5 பொதுவான விடயங்கள்

தேருநர் இடாப்பு அச்சிடல், வாக்காளர்களைப் பதிவு செய்யும் பணிகள் மற்றும் அலுவலகத்தின் ஏனைய எழுது பொருட்களுக்கான தேவைப்பாட்டை பூர்த்தி செய்துகொள்வதற்காக தேர்தல்களின்போது மீதமாகிய எழுதுபொருட்களுக்கு மேலதிகமாக எழுதுபொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டது. அதற்காக 10.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

தலைமை அலுவலகத்தின் குடி நீருக்கான தேவைப்பாட்டிற்காக குடி நீரைக் கொள்வனவு செய்வதற்கு ரூ. 185,000 மற்றும் நீருக்கான விலைப்பட்டியல்களுக்கு ரூ. 305,000 செலவிடப்பட்டது.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலக வாகனங்களுக்குத் தேவையான டயர்களைக் கொள்வனவு செய்யும் அலுவல்களை பிரதேச மட்டத்தில் மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தை வழங்கும் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், மாவட்டத்தினுள் கொள்வனவு செய்வதற்கு முடியாத அலுவலகங்களுக்கு மற்றும் தேர்தல்கள் செயலகத்தின் வாகனங்களுக்கான டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. அதற்காக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டு கொள்வனவுக்காக 2.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பயன்படுத்திக்கொள்ளப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் மற்றும் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட கடதாசிகளை 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய, அரச காகிதக் கூட்டுத்தாபனத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்காக 2022 ஆம் ஆண்டில் காகிதக் கூட்டுத்தாபனத்திலிருந்து 1.38 மில்லியன் ரூபா தொகை கிடைக்கப்பெற்றுள்ளதுடன், சுமார் 2.21 மில்லியன் ரூபா தொகை கிடைக்க வேண்டியுள்ளது.

மீளாய்வு நடவடிக்கைகளுடன் தொடர்பான படிவங்கள் உள்ளிட்ட எழுத்தாவணங்களை அச்சிடுதல் மற்றும் ஏனைய எழுத்தாவணங்களை அச்சிடுவதற்காக 2022 ஆம் ஆண்டில் அரசாங்க அசிசகத்திற்கு சுமார் 10.58 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

2.21 தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் முன்னேற்றம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை நவீனமயப்படுத்தல் ஊடாக வினைத்திறன் மற்றும் பயன்மிக்க வகையில் நிறுவனத்தின் பணியாட்குழுவுக்கு தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளை தயாரித்தல் மற்றும் எற்புடைய தரப்புக்களுக்கு தேவையான தகவல் தொழில்நுட்ப சேவைகளை பாதுகாப்பான முறையில் பெற்றுக்கொடுத்தல் இந்தப் பிரிவின் அடிப்படைக் கடமையாகும். நவீன தகவல் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளை ஆராய்தல் மற்றும் திட்டமிடல், கருத்திட்ட

அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அங்கீகரித்துக்கொள்ளல், கருத்திட்டங்களை சோதனையிடல்,அமைத்தல் மற்றும் அலுவலர்களைப் பயிற்றுவித்தல் போன்ற அலுவல்கள் நிறைவேற்றப்படுகின்றன.

2.21.1. மென்பொருள்களை உருவாக்குதல், மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் (திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய) 18 வயதை பூர்த்தி செய்து தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ள சகலரையும் தேருநராக (வாக்காளராக) பதிவு செய்துகொள்வதற்கு குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரிப்பதற்கான புதிய முழுமையை கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றை "அ" "ஆ" பட்டியல் படுத்தல், உரிமை கோரிக்கைகள், ஆட்சேபனைகள், பன்மை பதிவுகளை தடுத்தல், அச்சிடலுக்காக தேருநர் இடாப்பு கோப்புக்களை தயாரித்தல், எண்ணிக்கைக் குறிப்புக்களை பெற்றுக்கொள்ளல் போன்ற தேருநர் இடாப்பு மீளாய்வுக்கு தேவையான அனைத்து கணினி மென்பொருள்களை உள்ளடக்கி உறுவாக்குதல்/ மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றிய விதத்திலேயே 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்தல் மற்றும் இற்றைப்படுத்தப்பட்டதுடன் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்களின் பணிகளை இலகு படுத்துவதற்காக கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரித்தல்/ மேம்படுத்தல்.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் அலுவலர்களுக்கு கணினி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தேருநர் இடாப்பு மீளாய்வு பணிகளை மேற்கொள்ளும் போது தேவையான தொழிநுட்ப அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை பெற்றுக்கொடுத்தலும், தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புக்களை பெற்றுக்கொள்ளும் போது தேவையான தொழிநுட்பம் சார்ந்த உதவியை பெற்றுக்கொள்ளலும் ஆண்டு பூராகவும் குறித்த காலங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதுதொடர்பாக வீடியோ தொழிநுட்பத்தினூடாக கணினி நிகழ்ச்சித் திட்டமொன்றும், இணையவழி பயிற்சியொன்றும் வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவிய போக்குவரத்து சிரமங்கள் காரணமாக அலுவலகத்திற்கு வருகை தந்து பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாத அலுவலர்களுக்கு பாதுகாப்பாக தரவுத் தொகுதியை பயன்படுத்தி வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழிநுட்ப கருவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்பான நிருவாகம் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்காக எண்ணிக்கை தரவுகள் உள்ளடங்கிய தரவு பலகையொன்று (Dash Board) உறுவாக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் கடைசி பகுதியில், எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுடன் தொடர்பாக பயன்படுத்துவதற்கு தேவையான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணினி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பு மற்றும் குறைநிரப்பு இடாப்பை இணைத்து உள்ளூர் அதிகார சபை மட்டத்தில் தேருநர் இடாப்பை தயாரிப்பதற்குத் தேவையான கணினி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தல், பெயர்குறித்த நியமனங்களை கணினி மயப்படுத்துவதற்குத் தேவையான கணினி நிகழ்ச்சித் திட்டங்களை உறுவாக்குதல், அலுவலர்கள் கணக்கெடுப்பை இணையவழியில் மேற்கொள்வதற்கான கணினி நிகழ்ச்சித் திட்டம்/ இ-சேவையை மேம்படுத்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை இலகு படுத்துவதற்காக பயன்படுத்துவதற்கு அரச நிறுவனங்களை குறியீடு இடுவதற்கான முறையொன்று தயாரிக்கப்பட்டது.

இது தவிர தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளக நிருவாக நடவடிக்கைகளை இலகு படுத்துவதற்காக கணினி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டதுடன் அவை 2022 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டன. தலைமை அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களும் இணையவழியில் விடுமுறைக்கு விண்ணப்பிப்பதற்கு விடுமுறை முகாமைத்துவ முறைமையொன்றை (Leave Management System) பேணிவரல், தேர்தல் ஆணைக்குழுவின்

மோட்டார் வாகனங்கள் முகாமைத்துவ முறைமையை (Vehicle Management System) மேம்படுத்தல் மற்றும் பேணிவரல், கணக்குகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக செலவுகள் முகாமைத்துவ முறைமையை (Expenditure Management System) மேம்படுத்தல் மற்றும் பேணிவரல், பெறுகை திட்டமிடல் மேற்பார்வை முறைமை (Procurement Plan Monitoring System) மேம்படுத்தல் மற்றும் தேர்தல் பிணக்குகள் தீர்வு முகாமைத்துவ முறைமையை (Electoral Dispute Resolution Management System) மேம்படுத்தப்பட்டது.

2.21.2. தேர்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தரப்புக்களுக்கு இ - சேவையை வழங்குதல்

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், அரச நிறுவனங்கள், அரச அலுவலர்கள், வாக்காளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் ஆண்டு பூராவும் இ - சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.

இங்கு தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மும்மொழிகளிலும் இற்றைப்படுத்திப் பேணிவரல் மற்றும் விசேடமாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்தல் தொடர்பான தகவல்கள், அரசியல் கட்சிகளின் பெயர்ப் பட்டியல், ஊடக அறிவித்தல்கள், வர்த்தமானி மற்றும் சுற்றறிக்கை போன்ற தகவல்களை ஆண்டு பூராவும் மும்மொழிகளிலும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மும்மொழிகளிலும் இற்றைப்படுத்திப் பேணிவரல்.

அத்துடன் விரிவான வகையில் சமூகத்தில் வியாபித்துள்ள சமூக ஊடக வலயமைப்புக்களைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை துரிதமாக பெற்றுக்கொடுத்தலுடாக தேர்தல் செயற்பாடுகளை வினைத்திரனுடன் மேற்கொள்வதற்கு தகவல் தொழிநுட்பத்தை பயன்படுத்திக்கொள்ளல்.

அரசாங்க பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது தேவைப்படும் தேருநர் இடாப்பு தொடர்பான விபரங்களை தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விலையளவுகளின் கீழ் இணையவழி முறையில் பாதுகாப்பாக பெற்றுக்கொடுத்தல்

இது தவிர ஆட்பதிவுத் திணைக்களம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம் என்பவற்றிற்கு தேருநர் இடாப்புப் பதிவு தொடர்பான தகவல்களை இணையவழி முறையில் பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான தொழிநுட்ப உதவியை வழங்குதல்.

வாக்காளர்களுக்கு இணையவழி முறையில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு மற்றும் உரிமை கோரிக்கைகளை முன்வைப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தல், வாக்காளர்கள் பற்றிய தகவல்களை இற்றைப்படுத்துவதற்கு இணையவழி வசதிகளை வழங்குதல், முன்னைய ஆண்டுகளில் தான் வசித்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமாகவிருந்த தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புகையை நாட்டின் எந்தவொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவகத்தினூடாகவும் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல், 16 வயதைத் தாண்டிய இளம் பிரசைகளுக்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக இணையவழி முறையில் விண்ணப்பிக்க முடியுமான புதிய இ-சேவை ஒன்றை அறிமுகம் செய்தல், தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து தரப்புக்களும் தேர்தல் செயற்பாட்டுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய அறிவு மற்றும் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்காக தேர்தல்கள் பற்றிய கல்வி மற்றும் பங்கேற்பு தொடர்பான இணையத்தளம் பக்கமொன்றை அறிமுகம் செய்தல், இணையவழி முறையில் பதிவு செய்தல் உள்ளிட்ட தேர்தல்கள் தொடர்பான இ-சேவைகளை பயன்படுத்தும் போது பொதுமக்களுக்கு ஏற்படும் சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக உரிய அலுவலர்களை தொடர்புகொள்வதற்கு முடியுமான வட்சப் மற்றும் மின்னஞ்சல் கணக்கொன்றை தயாரித்து பேணிவரல் போன்ற அலுவல்கள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலையமைப்புக்களுடாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை உரிய தரப்புக்களுக்கு அனுப்பி அதற்கான பதில்களை வழங்கும் நடவடிக்கைகளும் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

இது தவிர தலைமை அலுவலகத்தின் மற்றும் அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் அலுவலக மின்னஞ்சல் சேவைகளை பேணிவரல்.

2.21.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்

தலைமை அலுவலகத்தில் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகள் பராமரிப்புப் பணிகள் ஆண்டு பூராவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அதில் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரவுகள் மையத்தில் மற்றும் ஹம்பாந்தோட்டை தேர்தல்கள் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரவுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சேவைகளைப் பேணிவரல், காப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் குறித்த நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் பிரிவுகள் உள்ளிட்ட மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் கணனிகள், கணனித் துணைப்பாகங்கள், கணனி வலையமைப்புக்கள், VPN வலையமைப்பு, பயர்வோல் மற்றும் **ADSL** இணையத்தள முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

2018 ஆம் ஆண்டு முதல் இணையவழி முறைகளைப் பயன்படுத்தி கூட்டங்களை நடாத்தும் Video Conference முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

தலைமை அலுவலகத்தின் CCTV அமைப்பை விரிவுபடுத்தல் மற்றும் அது சம்பந்தமான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.22 நிதி மற்றும் கணக்காய்வுத் தகவல்கள்

திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டிற்கமைய 2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு 1928.2 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் மீண்டெழும் செலவினங்களுக்கு 867.2 மில்லியன் ரூபாவும் மூலதன செலவினங்களுக்கு 61 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினம் 852.3 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் அந்த செலவினம் 787.6 மில்லியன் ரூபாவாகும். மொத்தமாக நோக்கும் போது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவினம் 64.7 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் மூலதன செலவினம் 23.2 மில்லியன் ரூபாவாக இருந்ததுதடன் 2021 ஆம் ஆண்டில் அந்த செலவின் 82 மில்லியன் ரூபாவாகும். மூலதன செலவினங்கள் குறைவடைவதற்கான காரணம் வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கைகள் ஊடாக மூலதனச் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமையாகும்.

2022 தேருநர் இடாப்பை தயாரிப்பதற்காக சுமார் 165.2 மில்லியன் ரூபா செலவாகியுள்ளதுடன் தேருநர் இடாப்பை அச்சிடுவதற்கு மற்றும் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு ஊக்குவிப்புப் படிகளைச் செலுத்துவதற்காக செலவாகுமென எதிர்பார்க்கப்படும் தொகையான சுமார் 42 மில்லியன் ரூபாவையும் சேர்த்தால் மொத்தச் செலவு சுமார் 208 மில்லியன் ரூபாவாகும். 2021 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பை தயாரிப்பதற்குச் செலவான 122.01 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் தேருநர் இடாப்பை தயாரிப்பதற்கான செலவு சுமார் 86 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளமையைக் காண முடிகின்றது. எழுது பொருட்கள் மற்றம் அச்சிடல் செலவுகள் அதிகரித்தமையே இந்த அதிகரிப்புக்குக் காரணமாகும்.

இந்த ஆண்டில் இடர் கடன்கள்/ விசேட / பண்டிகைக் கால முற்பணம் கோரிய அலுவலர்கள், ஊழியர்களுக்கு 21.4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை 15 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பு பிரித்தெடுப்புகை வெளியிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 4.2 மில்லியன் ரூபாவாகும். 2021 ஆம் ஆண்டில் இந்த வருமானம் 1.6 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் அந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரித்தெடுப்புகை மூலமாக கிடைத்த வருமானம் 2.6 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

தேருநர் இடாப்பு புத்தகமாக தயாரிப்பதனை வரையறுத்து இறுவட்டுக்களாகத் தயாரிக்கப்படுவதுடன் அவற்றை விற்பனை செய்வதன் மூலமாக இந்த ஆண்டில் உழைத்துக்கொண்ட வருமானம் 0.1 மில்லியன் ரூபாவாகும். கடந்த ஆண்டின் இந்த வருமானம் 0.3 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் குறைவைக் காட்டுகின்றது.

2022 ஆம் ஆண்டில் நானாவித விடயங்களின் கீழ் 2022.12.31 ஆம் திகதி வரை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 10 கணக்காய்வு ஐய வினாக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 10 ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளன. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 02 கணக்காய்வு ஐய வினாக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கும் பதில்கள் அளிக்கப்பட்டன.

2.23. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவல்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் நிலவும் தேர்தல்கள் செயலகத்தின் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலங்களில் உள்ளக கணக்காய்வு அலுவல்களை நிறைவேற்றும் போது தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(ஆ) மற்றும் 38(ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தலைமை கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அந்த சட்டத்தின் 40வது பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134ற் கமைய உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் இலக்கம் DMA01/2019 மற்றும் 2019.01.02 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய 2022 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சட்டரீதியான கடமைகள் நிறைவேற்றப்பட்டன.

அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உள்ளடக்கப்படும் வகையில் காலாண்டு ரீதியிலான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் அமைத்தலை தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அந்த சட்டத்தின் 41(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு சம்பந்தமாக முறையான உள்ளடக்கத்தைக் கொண்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் அழைப்பாளராக நடைவடிக்கை மேற்கொண்ட அவ்வாறான 03 குழுக்கள் 2022 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவினுள் பயன்மிக்க செயலாற்றுகையை உறுதிப்படுத்தும் முகமாக 2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகை கணக்காய்வு, முறைமைகள் கணக்காய்வு, நிதிசார் கணக்காய்வு மற்றும் விசேட விசாரணைகள் உள்ளடக்கப்படும் வகையிலான ஆபத்துக்களைக் கொண்ட செயற்பாடுகளை சோதனை இடுதல் மீது அதிகம் கவனம் செலுத்தப்பட்டு ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்காக சகல திணைக்களங்கள் சார்ந்த அலுவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் ஒவ்வொரு பொறுப்புக் கூறும் துறைகளுக்குமான 200ற்கும் அதிகமான செயற்பாடுகள் இனங்கண்டுகொள்ளப்பட்டன. அதற்கமைய முகாமைத்துவம் மற்கும் கணக்காய்வு

திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு 2022 ஆம் ஆண்டிற்கான ஆபத்துக்கள் பதிவேடு இந்தப் பிரிவினால் தயாரிக்கப்பட்டது.

வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அலுவல்களை உதவித் பணியாட் குழு ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான மனித வளம் மற்றும் ஏனைய வளங்களை இனங்கண்டு 2022 ஆம் ஆண்டில் புதிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டன. இதுவரை பயன்பாட்டிலிருந்த அனைத்து வினா கொத்துக்களும் ஆபத்துக்களை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுக்கு உட்பட்ட வகையில் திருத்தியமைப்பதற்கு அல்லது இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேர்தல்கள் நலநோப்புகை தொடர்பான பெறுகை அலுவல்கள் தொடர்பில் மாவட்ட அலுவலகங்களின் பிரதானிகள், குழுக்களுக்குப் பொறுப்பான தலைமை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பெறுகைகள் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவை மற்றும் தொடர்புடைய அலுவலர்களின் பங்கேற்புடன் 2022.10.17 மற்றும் 18 ஆகிய இரு தினங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளப் பயிற்சி பட்டறையொன்றுக்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வளப்பங்களிப்பு வழங்கப்பட்டது. இங்கு உணவு பானங்கள் தொடர்பான பெறுகைகளுக்கு தற்போது நிலவும் அங்கீகரிக்கப்பட்ட ஏல ஆவணங்களை நிறுவனம் சார்ந்த தேவைப்பாடுகளுக்கு ஏற்புடைய பிரகாரம் மீளமைக்கப்பட்டது. அந்த ஆவணங்கள் பொறுத்தமான நடவடிக்கைகளுக்காக நிறுவாகப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் கடமைகளை நிறைவேற்றம் உதவி பணியாட் குழுவிற்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க ஐக்கிய அமெரிக்காவின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் இந்த நாட்டு கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் இணையத்தள பாதுகாப்பு பற்றிய இணையவழி ஊடான நடாத்தப்பட்ட பயிற்சி திட்டத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உதவி பணியாட் குழு முனைப்புடன் பங்கேற்றது.

அனைத்து கணக்காய்வு நிறுவனங்களும் குறித்த ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தலைமை உள்ளக கணக்காய்வாளரின் ஆரம்ப அறிக்கையை நிறுவனத்தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென DMA/1-2019 மற்றும் 201901.02 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அனைத்து காலாண்டுகளும் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தலைமை உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு அறிக்கையை முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென அந்த சுற்றறிக்கையில் 8.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க குறித்த அந்த அறிக்கைகள் உரிய காலப்பகுதிக்குள் உரிய பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு பிரிவுத் தொடர்பாக அதன் நோக்ககங்கள், அதிகாரங்கள், பொறுப்புக்கள் மற்றும் ஆணைக்குழுவினுள் கணக்காய்வு அலுவல்களுக்கான இடத்தை சுட்டிக்காட்டும் அடிப்படை ஆவணமான உள்ளகக் கணக்காய்வு சாசனம் 2022 ஆம் ஆண்டின் யூன் மாதம் வெளியிடப்பட்டதுடன் அதற்கு முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியாகும் போது தேசிய ரீதியில் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட போக்குவரத்து சிரமங்களுக்கு மத்தியிலும் ஆண்டிற்கான திருத்தியமைக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 82% உள்ளடக்கப்படும் வகையில் 22 உள்ளகக் கணக்காய்வு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க உள்ளகக் கணக்காய்வு அறிக்கைத் தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4)(3) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.24 எதிர்கால இலக்குகள்

எதிர்காலத்தில் சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்புடைய அலுவல்களைப் போன்றே உரிய பிரகாரம் சகல தரப்பினர்களினதும் பங்கேற்புடன் எவரும் கைவிடப்படாத வகையில் அனைத்து தேர்தல்களையும் நடாத்துதல்.

.....

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

Saman Sri Rathnayake
Commissioner General of Elections
Election Commission
Sarana Mawatha, Rajagiriya

03 ஆம் அத்தியாயம் - ஆண்டிற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை

ஏசீஏ - எப்

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

			உண்மை நிலை		
		குறிப்பு	2022	2021	
ரூ			ரூ	ரூ	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ -1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியல்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானம் அல்லாத பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணி முற்பணங்கள்		842,279,000	827,560,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		1,294,928	2,909,695	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		31,703,530	31,318,602	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்குகள் பெறுகைகள்			42,412,012	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		875,277,458	904,200,309	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		875,277,458	904,200,309	
	திறைசேரிக்கு மாற்றல் (ஈ)			33,504	
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ=(இ)-(ஈ)		875,277,458	904,166,805	
	கழிக்க : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
-	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	530,776,977	495,412,932	
-	ஏனைய பொருட்கள், சேவைகள்	6	318,026,727	288,797,612	ஏசீஏ-2(i
-	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	3,531,244	3,438,952	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
-	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		852,334,948	787,649,496	
	மூலதனச் செலவினம்				
-	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	6,381,891	32,962,604	
	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	15,903,144	46,917,344	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(i
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
-	நிறுவன விருத்தி	14	928,033	2,140,986	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
-	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		23,213,068	82,020,934	
	வைப்புக் கொடுப்பனவுகள்		2,866,805	6,012,754	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		27,283,667	29,279,986	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு கொடுப்பனவுகள்		-	80,372	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		30,150,472	35,373,112	
	மொத்த செலவினம் ஐ = (ஊ + எ + ஏ)		905,698,488	905,043,542	
-	**திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஒ = (உ - ஐ)**		(30,421,030)	(876,737)	
	பணி முற்பண இணக்கக் கூற்றுக்கமைய மீதி		(30,421,030)	(876,737)	ஏசீஏ-7
	திசெம்பர் 31 திகதியன்று பணிமுற்பண மீதி				ஏசீஏ-3
			(30,421,030)	(876,737)	

2022.12.31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	2,206,017,496	2,065,916,625
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	96,688,473	100,974,010
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3		-
மொத்த சொத்துக்கள்		2,302,705,969	2,166,890,635
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		95,495,827	98,209,487
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம், வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பி	2,206,017,496	2,065,916,625
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	1,192,646	2,764,523
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்த பொறுப்புக்கள்		2,302,705,969	2,166,890,635

பக்க இலக்கம் 1 முதல் 27 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 28 முதல் 34 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	
சமன்ஜயதி :ரத்நாயக்க	சமன்ஜி ஸ்ரீ ரத்நாயக்க	K.S.P. PERERA
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்	தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்	Chief Financial Officer
தேர்தல் ஆணைக்குழு	தேர்தல் ஆணைக்குழு	Election Commission
சரண மாவத்தை, இராஜகிரிய	சரண மாவத்தை, இராஜகிரிய	Sarana Mawatha,
		Rajagiriya.

ஏசீஎ -சீ

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மைநிலை	
	2022	2021
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பொறுகைகள்	-	-
கட்டணம், மிகைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் உரிமைப் பத்திரங்கள்	28,531,110	37,896,872
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பொறுகைகள்		-
ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	
கிடைக்கப்பெற்ற பணி முற்பணம்	842,279,000	827,560,000
முற்பணங்கள் அறவீடு	34,532,818	31,441,300
வைப்புக்கள் கிடைப்பவை	1,294,928	2,909,695
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் ஊடாக பிறப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் (அ)	906,637,856	899,807,867
கழிக்க : செலவினங்கள்		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவினங்கள்	847,625,388	783,380,017
மானியங்கள் மற்றும் மாற்றல்கள	3,531,244	3,438,952
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	6,501,587	412,650
திரைசேரிக்குத் திருக்கப்பட்ட பணிமுற்பணம் மீற்பணம் செலுத்தல்□	-	33,504
முற்பணம் செலுத்தல்	27,652,086	28,943,824
வைப்புக்கள் செலுத்தல்	2,866,805	6,012,754
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)	888,177,110	822,221,701
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) - (ஆ)	18,460,746	77,586,166
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	4,132,893	4,114,813
பங்கிலாபம்	-	-
உரிமை நீங்கல் ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை	619,430	319,955
துணை கடன் அறவீடுகள்	-	
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஈ)	4,752,323	4,434,768
கழிக்க - செலவினங்கள் :		
பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை கையகப்படுத்தல்	23,213,069	82,020,934
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான மொத்தக் காசுப் பாய்ச்சல் (உ)	23,213,069	82,020,934
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)= (ஈ) - (உ)	-18,460,746	-77,586,166
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ) = (இ) + (ஊ)	0	0
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
கிடைக்கப்பெற்ற நன்கொடைகள்	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ)	-	-
கழிக்க - செலவினங்கள் :		
உள்ளூர்க் கடன்கள் மீளச் செலுத்தல்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீளச் செலுத்தல்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ) = (ஏ) - (ஐ)		
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) - (ஐ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

பணி முற்பண இணக்க கூற்று

அறிக்கையிடும் நிறுவனம் சார்பாக பிற நிறுவனங்களால் சேகரிக்கப்படும் வருமானம்		
ஏனைய செலவின தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகள்	6,618,727	
நிறுவனத்தினால் முற்பணம் "பி" கணக்கிற்கான மேற்கொள்ளப்பட்ட வரவு	3,326,660	
பிற நிறுவனங்களினால் அறிக்கையிடும் நிறுவனத்தின் முற்பணம் "பி" கணக்கிற்கான மேற்கொள்ளப்பட்ட செலவுகள்		
2021 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட வட்டித் தொகையை கடனுக்கான தவணைத் தொகையாக குறிப்பிடப்பட்டமையை சீர்படுத்தல்.	768	9,946,155
கழிக்க:-		
ஏனைய நிறுவனங்கள் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தினால் சேகரிக்கப்படும் வருமானம்	33,400,572	
அறிக்கையிடும் நிறுவனம் சார்பாக ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் செலவுகள்	1,178,316	
ஏனைய நிறுவனங்கள் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பண "பி" கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவுகள்	5,653,970	
2021 ஆம் அண்டில் கடன் நிலுவைகளை தீர்க்கும் போது தவறுதலாக முற்பணம் "பி" கணக்கின் கிடைப்பனவின் கீழ் குறிப்பிடப்பட்டமையை சரிசெய்தல்.	134,327	
ஏனைய நிறுவனங்களினால் முற்பணம் "பி" கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு		40,367,185
2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பணி முற்பண இணக்கக் கூற்று		(30,421,030)

* மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கு மேலதிகமாக ஏதேனும் தேவையெனில் சேர்க்கலாம்.

3.2 நிதிக் கூற்றுகுறிப்புக்கள

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு (ரூ.)	இறுதி மதிப்பீடு(ரூ.)	இறுதி மதிப்பீடு(ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
20.02.02.99	வட்டி - ஏனையவை	4 மில்லியன்	4 மில்லியன்	4.1மில்லியன்	100
20.03.02.99	விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிர்வாகம் சார்ந்த கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	0.05 மில்லியன்	0.05 மில்லியன்	0.03 மில்லியன்	60
20.03.99.00	விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுவனவுகள்	32 மில்லியன்	32 மில்லியன்	8 மில்லியன்	25
20.02.01.01	உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை	1.30 மில்லியன்	1.30 மில்லியன்	1.25மில்லியன்	96
20.04.01.00	விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம்	20 மில்லியன்	20 மில்லியன்	19மில்லியன்	95
20.06.02.02	மூலதன விற்பனை (ஏனையவை)	1.50 மில்லியன்	1.50 மில்லியன்	0.93மில்லியன்	62

3.2.1 வருமானங்கள் சேகரிப்பு செயலாற்றுகை

ஏற்புடையதாகாது

3.2.2 நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்திக் கொள்ளல் செயலாற்றுகை

ரூ., 000

நிதி ஏற்பாட்டு வகை	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு		உண்மையான செலவு(ரூ.)	பயன்படுத்திக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடானது நிறைவு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் % ஆக.
	ஆரம்ப நிதி ஏற்பாடு (ரூ.)	இறுதி நிதி ஏற்பாடு (ரூ.)		
(1) மீண்டுவரும்	867,240,000	867,240,000	852,334,949	98%
(2) மூலதனம்	61,000,000	61,000,000	23,213,069	38%

3.2.3. நி.பி. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் ஒரு பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு

ரூ., 000

இல.	நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்ற அமைச்சு/ திணைக்களம்	நிதி ஏற்பாட்டின் நோக்கம்	நிதி ஏற்பாடு		உண்மையான செலவினம்	பயன்படுத்திக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடானது நிறைவு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் % ஆக.
			ஆரம்ப நிதி ஏற்பாடு	இறுதி நிதி ஏற்பாடு		
1	ஓய்வூதியத் திணைக்களம்		314	314	314	100%

3.2.4. நிதி சாராத சொத்துக்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை

ரூ., 000

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	2022.12.31 ஆம் திகதியன்று சொகுட்கள் கணக்கெடுப்புக்கமைய மீதி	2022.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கைக்கமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்குரிய	முன்னேற்றத்தை % ஆக அறிக்கைப்படுத்தல்
9151	கட்டடங்கள் மற்றும் அமைப்புக்கள்	246,310	246,310		100%
9152	இயந்திர சாதனங்கள்	801,832	801,832		100%
9153	கணினிகள்	1,091,666	1,091,666		100%
9154	அருவச் சொத்துக்கள்	-	-		
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-		
9160	மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள்		66,208		
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-		

3.2.5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

PIC/B/EC/2/22/27 2023 மே மாதம் ஆம் திகதி

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,
தேர்தல் ஆணைக்குழு

தலைப்பு 020 - தேர்தல் ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கருத்துரை

தலைப்பு 020 தேர்தல் ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது ஆணைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துத் தெரிவிப்பு மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் தலைமை கணக்கீட்டு அலுவலருக்கு வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை உரிய காலத்தில் வெளியிடப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் ஏற்படும் அழுத்தங்கள் தவிர நிதிக் கூற்றுக்கள் ஊடாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று தேர்தல் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கணக்கெடுப்புக் கருத்துரை அமைந்துள்ளது. இலங்கை கணக்கீட்டுத் தர நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானதென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக தலைமை கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்ற பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் தலைமை கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணி வரப்படுவதாக தலைமை கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதோடு அந்த முறைமையின் பயன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கிணங்க முறைமையை பயன்மிக்க வகையில் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்துரை உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின்

பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடு இல்லாதிருக்கும். ஊழல்கள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்படும்போது தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தவறாகக் காண்பிக்கப்படல் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் (பாதிப்பு) சக்தி வாய்ந்ததாக இருப்பதற்கான காரணம், அவை கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறாகக் காண்பிக்கப்படல் அல்லது உள்ளக நிர்வாகங்கள் கைவிடப்படல் என்பனவாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் செயல்திறன் சம்பந்தமான கருத்தொன்றை வெளியிடும் நோக்கத்தில் இல்லாவிடினும் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.
- நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக தலைமை கணக்கீட்டு அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவிற்கமைய கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை தெரிவிக்கின்றேன்.

(அ) கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கீழ் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்புக்கமைய கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இயைந்திருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	இந்த அறிக்கையின் பந்தி
கடந்த ஆண்டில் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பீடம்போது மாற்றங்கள் நிலவுகின்றமை	1.6.2 (அ)

(ஆ) கடந்த ஆண்டுடன் தொடர்பான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

1.6.1 வருமானம் அல்லாத பெறுவனவுகள்

(அ) காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் பிறப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய ரூ.4,132,893 ஊழியர் கடனுக்கான வட்டி முதலீட்டு நடவடிக்கைகளிலினால் பிறப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்படப்பட்டிருந்தது.

(ஆ) வருமானம் அல்லாத பெறுகைகள் ரூ. 28,531,110 கட்டணங்கள், மிகை கட்டணங்கள், தண்டப் பணம் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் என காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1.6.2 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) கடந்த ஆண்டில் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களில் இறுதி மீதிகளை மீளாய்வாண்டில் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடும்போது நிறைவு செய்யப்படாத கட்டிடங்கள் மீதி 05 மில்லியன் ரூபா குறைவாகவும், வாகனங்கள் மீதி 58.33 மில்லியன் ரூபா அதிகமாகவும், ஏனைய இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் மீதி 10.26 மில்லியன் ரூபா குறைவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2021 ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பில் இனங்காணப்பட்டிருந்த கிரயம் ரூ.6,717,017 பெறுமதிமிக்க பொருட்கள் 2022 ஆம் ஆண்டில் புறத்தொதுக்கப்பட்டிருந்தாலும் அந்தப் பெறுமதி கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த குருநாகல் மாவட்ட தேர்தல்கள் அலுவலகம், கம்பஹா மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லம், கிளென் ஆபர் காணி, ஹீன் கால்வாய் அருகில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் CIGAS கணனி முறைமை ஊடாக கணக்கில் பதியப்படாமையின் காரணமாக ரூ.255,459,809 இனால் நிதி அல்லாத சொத்துக்கள் மீதி குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் மற்றும் சுற்றுலா விடுதி ரூ.3,118,000 விற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதிலும் அது ரூ.3,700,000 என கணக்கில் பதியப்பட்டிருந்தமையினால் நிதி அல்லாத சொத்துக்கள் ரூ. 582,000 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) ஆணைக்குழுவுக்குரியதல்லாத மொத்தம் ரூ. 40,950,000 அம்பாந்தோட்டை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் பதுளை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் பெறுமதியை CIGAS முறைமையிலிருந்து நீக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறு நீக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.3 நிதிச் சொத்துக்கள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பி கணக்கின் நிலுவை ரூ.100,974,010 ஆக இருந்தபோதிலும் 2022 நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 5 படிவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பண பி கணக்கின் ஆரம்ப நிலுவையாக ரூ. 101,108,337 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

1.6.4 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை

ஏசீஏ - 3 பணி முற்பணக் கணக்குகள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய மூலங்களிலிருந்து பெறுவனவுகளான ரூ.33,269,017 மீதியின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அதனுடன் தொடர்புடைய பகுப்பாய்வொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 செலவுகள் முகாமைத்துவம்

நிதிப் பிரமாணம் 50 இற்கமைய செலவு மதிப்பீடுகளை தயாரிக்காமையின் காரணமாக ஒரு மீண்டெழும் செலவு விடயத்தில் மற்றும் 02 மூலதன செலவு விடயங்களில்

முறையே ரூ. 288,601 மற்றும் ரூ. 20,319,312 மீதி நிலவியது. அது தேறிய நிதி ஏற்பாட்டின் 48 % முதல் 100 % வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 செலவு விடயங்களுடன் தொடர்பான நிதி ஏற்பாடுகளின் மீதி ரூ.2,300,891 மற்றும் அவற்றின் பொறுப்புக்கள் ரூ. 82,051,967 ஆகியமையினால் விஞ்சிய மீதி ரூ. 79,751,076 ஆக இருந்தது.

(ஆ) 07 செலவு விடயங்களுடன் தொடர்பான மொத்தம் ரூ. 63,132,679 பொறுப்புக்கள், இணைப்பு iii பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பெறுகைகள்

(அ) பதாதைகளைக் கொள்வனவு செய்தல்

2022 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தில் வாக்காளர் தின வைபவம் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னாயத்துடன் திட்டமிட்டுக்கொள்ள முடியுமாக இருக்கையில் அதற்குத் தேவையான 730 பதாதைகளைத் தயாரித்துக்கொள்வதனை அவசரத் தேவையொன்றாகக் கருதி சந்தை விலை ஒப்பீட்டு முறையைப் பின்பற்றி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பந்திக்கு முரணாக விலை மனுக்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட வேண்டிய குறைந்த காலப் பகுதியான 07 நாட்களுக்குப் பதிலாக வழங்குனர்களுக்கு அதற்காக 02 தினங்களை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தரவுகள் மையத்திற்காக மேலதிக மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல்

(i) இந்தப் பெறுகைக்காக 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி 08 வழங்குனர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன், பெறுகை தொடர்பான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி மே 13 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் அந்தத் திகதி 2022 மே 20 என திருத்தியமைக்கப்பட்டிருந்ததுடன் அது பற்றி வழங்குனர்களுக்கு விலை மனுக்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்கு 02 நாட்களுக்கு முன்னர் அதாவது 2022 மே 18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.2 பந்திக்கமைய விலை மனுக்கோரல் தொடர்பான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நேரத்தில் விலை மனுக்களை பெற்றுக்கொள்வதனை நிறுத்த வேண்டுமென்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலை மனுக்களை கையேற்கக் கூடாதெனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் இந்தப் பணி ஒப்பந்தத்திற்கான விலை மனுக்களை கையேற்கும் இறுதித் திகதி 2022 மே 20 ஆக இருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் 2022 மே 21 ஆம் திகதி விலை அளவுகளை முன்வைத்திருந்தார்.

(iii) கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் குறித்த விவரக் குறிப்புக்களுக்களுடன் இயைந்திருப்பதாக மின்சாரப் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்படாமல் ரூ.6,912,420 பெறுமதியில் வரி இன்றிய பெறுமதியில் ரூ. 4,767,000 மீளாய்வாண்டின் திசெம்பர் 30 ஆம் திகதியன்று செலுத்தப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்திற்கமைய இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூ.2,500,000 ஆக இருந்தாலும் அதன் உண்மையான பெறுமதி ரூ. 6,912,420 ஆக இருந்தரமையினால் மதிப்பீட்டுத் தொகையைப் பார்க்கிலும் 176% இனால் அதிகரித்திருந்ததுடன், அதற்கமைய பெறுகைத் திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(v) மின் பிறப்பாக்கி இயந்திரத்தை பொருத்துவதற்காக தரவுகள் மையத்தின் சர்வர் இயந்திரத்தை செயலிழக்கச் செய்து மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக முன்னனுமதியின்றி ரூ. 66,000 வெளி நிறுவனமொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மின் பிறப்பாக்கி இயந்திரத்தினை வைப்பதற்கான பாதுகாப்பு கூடமொன்றை நிர்மாணித்தல்

(i) மின் பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான பணி ஒப்பந்தத்தை வழங்கி 02 ½ மாதங்கள் கடந்ததன் பின்னர் இந்தப் பணி ஒப்பந்தத்திற்கு விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாத வழங்குனர் ஒருவரான மின் பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்த நிறுவனத்திடம் பணி ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) இந்தப் பணி ஒப்பந்தத்திற்காக 2022 ஒக்தோபர் 18 ஆம் திகதி விலை அளவுகள் கோரப்பட்டிருந்தாலும் பணி ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிறுவனத்தினால் 2022 செப்தெம்பர் 08 ஆம் திகதி அதாவது விலை மனுக்களை கோருவதற்கு முன்னரே மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூ. 795,000 பெறுமதிமிக்க பணி ஒப்பந்தத் தொகை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டைப் பார்க்கிலும் 38% இனைப் பார்க்கிலும் அதிகமாக இருந்தது.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) புத்தளம் மாவட்ட அலுவலகத்தில் காணப்படும் மின்பறிப்பாக்கி 06 வருடங்களிலும் அதிக காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் காணப்படும் கையடக்க தொலைபேசியொன்று காணமற் போயிருந்ததுடன் அது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த சில தேர்தல்களின்போது எவ்விதமான திட்டமிடலுமின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூ.12,848,164 பெறுமதிமிக்க பல்வேறு வகையான ரோனர்கள், ரிபன், மாஸ்ட்டர் ரோல் மை பயன்படுத்தப்படாமல் களஞ்சியசாலையில் காணப்பட்டது.

3.3 சேதங்கள் மற்றும் நட்டங்கள்

(அ) மீளாய்வாண்டில் ஏற்பட்ட 10 வாகன விபத்துக்கள் தொடர்பாக ரூ.151,192 ஆண்டினுள் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விபத்துக்களின்போது அறவிட்டுக்கொள்ள முடியாத மற்றும் பதிவழிப்புச் செய்ய முடியாதுபோன நட்டங்களின் பெறுமதி ரூ. 2,598,736 ஆக இருந்தது.

(ஆ) 2022 திசெம்பர் 31 பதிவழிப்புச் செய்யப்படாமல் முன்கொண்டு சென்ற ரூ. 2,671,428 நிலுவையை பதிவேடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்தல் பற்றிய கூற்றில் இணைப்பு ii இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

3.4 முகாமைத்துவக் குறைபாடுகள்

2022 ஆம் ஆண்டில் செலவுகளை மேற்கொள்வதற்காக அதிகாரமளித்தல் மற்றும் அரச செலவுகளை முகாமைப்படுத்தல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2021.12.21 ஆம் திகதிய 03/2021 ஆம் ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 04 ஆவது பந்தியில் 2022 ஆம் ஆண்டில் அரச நிதி முகாமைத்துவம் சவால்மிக்க நிலைமையில் காணப்படுவதனால் செலவுகள் கட்டுப்பாடு சம்பந்தமாக சிறப்பான மேற்பார்வையைப் பேணிவரல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தபோதிலும் ஆணைக்குழுவினால் வாக்காளர் தின நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஹோட்டல் கட்டணங்கள், அறிவித்தல் நடவடிக்கைகள், நிகழ்ச்சி ஏற்பாடுகள் மற்றும் பதாதைகளை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூ.4,585,147 செலவிடப்பட்டது.

4. மனித வளங்கள் முகாமைத்துவம்

4.1 ஆளணி வெற்றிடங்கள்

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஆணைக்குழுவில் 06 சிரேஷ்ட மட்டப் பதவிகள், 09 மூன்றாம் நிலை மட்டப் பதவிகள், 42 இரண்டாம் நிலை மட்டப் பதவிகள் மற்றும் 29 கனிட்ட மட்டப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவின.

எச்.எஸ்.எஸ்.பெரேரா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பாக.

அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

சிறப்புக் குறிகாட்டி	எதிர்பார்த்த வெளியீட்டின் (%) ஆக உள்ளபடியான வெளியீடு		
	100%-90%	**75%-89%**	**50%-74%**
	90%		

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதிலான செயலாற்றுகை

குறிக்கோள் இலக்கம்	குறிக்கோள்களும் இலக்குகளும்	இலக்குகள்	காலச் சட்டகம்	நிறுவனத்தின் தொழிற்பாட்டுக் குறிகாட்டி	முன்னேற்றம்/ தற்போதைய நிலை
05. பால்நிலை சமத்துவம் அடைந்துகொண்டு அனைத்துப் பெண்களையும் சிறுவர்களையும் வலுப்படுத்தல்.	5.1 தேசிய மட்டத்தில்/ சட்டவாக்கத்துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அடைந்து கொள்ளல்	5.1.1 சட்டவாக்கத்துறை சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தங்கள்	2021 - 2025	பெண் பிரதிநிதித்துவத்தை 25% என்ற மட்டத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தல்	சம்பந்தப்பட்ட பிரேரணைகளை தேர்தல் சட்டத் திருத்தத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்தல்.
	5.5. அரசியல், பொருளாதார மற்றும் வாழ்வின் பொதுவான எல்லா வேளைகளிலும் முடிவெடுக்கும் போது பெண் தலைமைத்துவத்திற்கு சம வாய்ப்பளித்தலும் பயன்கூர் விதத்திலான பங்கேற்பை உறுதிப்படுத்தலும்.	5.5.1 அரசியல் கட்சிகளின் நிறைவேற்றுக் குழுவில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு செயலாற்றுதல்.	2021 - 2025		பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
		5.5.2 தேர்தல் ஆணைக்குழுவில் நிறைவேற்றுநர் தரங்களில் பதவிவகிக்கும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.	2021 - 2025	-	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
10. நாடுகளுக்கு உள்ளும் அவற்றிற்கு இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.	10.2 2030 ஆம் ஆண்டளவில் பால், வயது, இனப் பிரிவு, வலதுகுறைவு, மதம்,இனம், பொருளாதார அல்லது வேறு நிலைமைகள் பற்றி பொருட்படுத்தாமல் அனைவரதும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான வலுவூட்டல், இடையீடு மற்றும் வளர்த்தல்.	அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் செயன்முறையொன்றை அமுல்படுத்தல்.	2021 - 2025	தகுதிபெற்ற அனைத்துப் பிரசைகளும் அடங்கிய தேருநர் இடாப்பொன்றைத் தயாரித்தல்.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
16. பேண்தகு அபிவிருத்திக்கான அமைதியானதும் முழுமை அடைந்ததுமான சமூகங்களை ஏற்படுத்தல், நியாயத்திற்கான அனைவருக்கும் வாய்ப்பளித்தல், எல்லா மட்டங்களின் பொறுப்பக்களும், பயன்கூர் முழுமையான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்.	16.7 அனைத்து மட்டங்களில் பதில்குறிப்புள்ள,அனைவரையும் உள்ளடக்கிய, பங்கேற்புடன்கூடிய பிரதிநிதித்துவம் அடங்கிய முடிவெடுக்கும் செயன்முறையொன்று காணப்படுவதை உறுதிப்படுத்தல்.	16.7.2. பால்நிலை, வயது, வலதுகுறைவு, இனக் குழுக்களின்படி முடிவெடுக்கும் செயன்முறையில் தாமும் உள்ளடங்குவதாக தமது கருத்துக்களுக்கும் பதில்குறிப்பு காட்டும் நம்பிக்கையுள்ள சனத்தொகையின் அளவு	2021 - 2025	அனைத்துத் திறத்தவர்களதும் பங்கேற்புடன் தேர்தல் ஆணைக்குழுவின் செயல் திட்டத்தைத் தயாரித்தல்.	செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிக்கோள் இலக்கம்	குறிக்கோள்களும் இலக்குகளும்	இலக்குகள்	காலச் சட்டகம்	நிறுவனத்தின் தொழிற்பாட்டுக் குறிகாட்டி	முன்னேற்றம்/ தற்போதைய நிலை
17. செயற்படுத்துவதற்கான முறைமைகளை பலப்படுத்துதலும் பேண்தகு அபிவிருத்திக்கான உலக பங்கேற்பின் புத்துயிர்ப்பும்.	17.8 2017 ஆம் ஆண்டளவில் குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு தொழில்நுட்பத்தையும் புத்தாக்க இயல்திறன்களைக் கட்டியெழுப்பும் முழுமையாக இயங்கும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்திலும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் புதிய தொழில் நுட்பத்தை முன்னேற்றுதல்.	தேர்தல் செயன்முறைக்கான நவீன தொழில்நுட்ப முறைமைகளைக் கையாளல்.	2021 - 2025	– தேருநர் இடாப்பில் பதிவுசெய்து கொள்ளல். – தேர்தல் செயன்முறைக்கு பங்களிப்பை வழங்கும் அனைத்து அரச அலுவலர்களின் தரவு முறைமையைத் தயாரித்தல். – அதன் அடிப்படையில் தேர்தல் கடமைகளுக்கு இணைத்தல். – தேருநர் இடாப்பைத் தயாரிக்கும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு நிலையத்தை நிறுவுதல்.	பூர்வாங்க நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
	17.16 குறிப்பாக வளர்முக நாடுகளும் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பல்வேறு திறத்தவர்களின் பங்காண்மையுடன் அறிவு,அனுபவம், தொழில்நுட்பம், நிதிவள அசைவூட்டம் மற்றும் விநியோகத்தின் ஊடாக பேண்தகு அபிவிருத்திக்கான உலக பங்காண்மையை முன்னேற்றுதல்.	அனைத்துத் திறத்தவர்களும் அடங்கிய தரவுத் தளமொன்றைத் தயாரித்தல்.	2021 - 2025	– தேர்தல் சட்டங்கள் பற்றி அலுவலர்கள், பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பொது மக்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	அந்தந்த ஆண்டுடன் தொடர்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும்.

இலக்கு/நோக்கம்	இலக்கு	வெற்றிக் குறிகாட்டி	இதுவரை வெற்றியீட்டல் முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
05-பந்தியை பார்க்கவும்	-	மொத்தம்			75%

அத்தியாயம் 06 – மனித வளம் பற்றிய விவரம்

6.1 பணியாட்குழு எண்ணிக்கை முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழு எண்ணிக்கை	தற்போதுள்ள பணியாட் குழு எண்ணிக்கை	பதவி வெற்றிடம் / (மேன்மிகை)**
சிரேஷ்ட	56	48	08
மூன்றாம் நிலை	21	13	08
இரண்டாம் நிலை	**502**	**460**	**42**
ஆரம்ப நிலை	227	198	29

தேர்தல் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்தப் பணியாட்குழு, பின்வரும் பதவிகளை வகிக்கும் அலுவலர்களை உள்ளடக்கியுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அதன் ஐந்து உறுப்பினர்கள் தவிர ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அது தவிர, தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், இலங்கை நிருவாக சேவை (இ.நி.சே.) அலுவலர்களும், இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே.) அலுவலர்களும், சட்டப் பணிப்பாளரும் சட்ட அலுவலர்களும், இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சேவை (இ.த.தொ.தொ.சே.) அலுவலர்களும், இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே.) அலுவலர்களும், அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை (அ.மொ.சே.) அலுவலர்களும், அரச முகாமைத்துவ சேவை (அ,மு.சே.) விசேட வகுப்பு அலுவலர்கள் மற்றும் பதவிநிலைத் தரமல்லாத பணியாட்குழுவில் அரச முகாமைத்துவ சேவை அலுவலர்களும், அபிவிருத்தி அலுவலர் சேவை அலுவலர்களும், தகவல் தொழில்நுட்ப உதவியாளர்களும், ஆவண உதவியாளர்களும், அலுவலகப் பணியாளர்களும் சாரதிகளும் அடங்குவர். அதன் அடிப்படையில், 2022.12.31 அன்றுள்ளவாறு தேர்தல் ஆணைக்குழுவின் முழுதுமளாவிய பணியாட்குழுவின் அமைப்பு பின்வருமாறு:-

	எண்ணிக்கை
பதவிநிலை தர அலுவலர் (தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய பதவிநிலை தர அலுவலர்கள் உட்பட)	61
முகாமைத்துவ சேவை அலுவலர்	358
அபிவிருத்தி அலுவலர்	38
தொழில்நுட்ப அலுவலர் (சிவில்)	01
தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	10
ஆவண உதவியாளர்	46
வரவேற்பு அலுவலர்	01
அலுவலகப் பணி உதவியாளர்	155
சாரதி	43
வாகனம் துப்புரவாக்குநர்	0

6.2 தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவில் பதவிநிலை தர அலுவலர்களின் தாபன அலுவல்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரியும் பதவிநிலை தர அலுவலர்கள் சம்பந்தமாக குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:

6.2.1. புதிய நியமனங்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரிந்த பதவிநிலை அலுவலர்களின் பதவிகளில் நிலவிய வெற்றிடங்களும் இடமாற்றல்களும் காரணமாக ஏற்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய 2022.12.31 ஆம் திகதி வரை தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன:-

❖ **வெற்றிடமாகியிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை நிதி அலுவலர் பதவி :**

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இல.: MPub/AD/AcSD/02/ 1628 மற்றும் 2021.12.22 ஆம் திகதிய கடிதத்தினூடாக இந்த ஆணைக்குழுவுக்கு இடமாற்றல் செய்யப்பட்ட கணக்காளர் சேவையின் விசேட தர அலுவலர் திரு. கே.எஸ்.பீ. பெரேரா அவர்கள் 2022.01.06 ஆம் திகதி தலைமை நிதி அலுவலராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த கேகாலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி –**

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5732 ஆம் இலக்க, 2022.01.28 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் III அலுவலர் திரு. கே.எச்.எம்.எஸ்.பீ. கஸ்தூரிசிங்ஹ அவர்கள், 2022.02.07 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் கேகாலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த அம்பாறை மற்றும் புத்தளம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் உதவிச் செயலாளர் பதவி –**

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் R/I/I/POSTING/2020(2021) ஆம் இலக்க, 2022.02.02 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் மூன்று இலங்கை நிருவாக சேவை - தரம் III அலுவலர்கள் வெற்றிடங்கள் நிலவிய கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு 2022.03.14 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டனர்.

- திருமதி ரீ. சுவர்ணா - உதவிச் செயலாளராக (தேர்தல் ஆணைக்குழு) நியமித்தல்.
- திரு. எஸ்.எல்.ஆர். ஜயநாயக்க - கேகாலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமித்தல்.
- திரு. ஏ.எம்.கே.எஸ். அத்தனாயக்க - அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமித்தல்.

❖ **வெற்றிடமாகியிருந்த மன்னார் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி –**

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/6329 ஆம் இலக்க, 2022.10.25 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம்

செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் III அலுவலர் திரு. வீ.சிவராஜா அவர்கள், 2022.11.14 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவி:**

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் MPA/PSD/C2/40 ஆம் இலக்க, 2022.12.05 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவை - தரம் III (எண்மிகை அடிப்படை) அலுவலர் திருமதி எஸ்.பீ.செனரத் அவர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6.2.2. விடுவிப்புக்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரிந்த பின்வரும் பதவிநிலை அலுவலர்கள் ஆணைக்குழுவின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்:-

❖ இலங்கை நிருவாக சேவை - தரம் III திரு. எஸ்.டப்ளியூ. வெல்கம அவர்கள், 2022.02.02 ஆம் திகதியிலிருந்து போக்குவரத்துத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

❖ இலங்கை நிருவாக சேவை - தரம் III திரு. எச்.ஐ.ஆர். ஹத்துருசிங்க அவர்கள், 2022.02.18 ஆம் திகதியிலிருந்து அஞ்சல் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

❖ இலங்கை நிருவாக சேவை - தரம் I திரு. எஸ். சுதாகரன் அவர்கள், 2022.05.31 ஆம் திகதியிலிருந்து உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டார்.

❖ இலங்கை நிருவாக சேவை - தரம் III திரு.டப்ளியூ.ஜீ.டப்ளியூ.ஞானதயாளன் அவர்கள், 2022.06.01 ஆம் திகதியிலிருந்து சுகாதார அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டார்.

6.2.3. உள்ளக இடமாற்றல்கள்

❖ தேர்தல் ஆணைக்குழுவில் உதவி செயலாளராக பணியாற்றிய திருமதி. ஏ.ஏ. ஆனந்தி அவர்களின் கோரிக்கையை கவனத்தில் கொண்டதன் பின்னர் 2022.01.03 ஆம் திகதி முதல் கம்பஹா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக இடமாற்றப்பட்டார்.

❖ தேர்தல் ஆணைக்குழுவின் முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக பணியாற்றிய திரு. கே. காண்டீபன் அவர்களின் கோரிக்கைக்கமைய 2022.03.07 ஆம் திகதி முதல் பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக இடம் மாற்றம் வழங்கப்பட்டது.

❖ தேர்தல் ஆணைக்குழுவில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக பணியாற்றிய திரு. கே. விமரூபன் அவர்களின் கோரிக்கைத் தொடர்பாக மேலதிக விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதன் பின்னர் 2022.08.01 ஆம் திகதி முதல் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக இடம் மாற்றம் வழங்கப்பட்டது.

6.2.4. பதில் கடமையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வழங்கப்பட்ட நியமனங்கள்

❖ இந்தியாவின் புதுடில்லி நகரில் நடாத்தப்பட்ட வாக்காளர்களுக்கு அறிவூட்டுதல் தொடர்பான இயலளவு மேம்பாட்டு செயலமர்வில் பங்குபற்றுவதற்காக 2022.02.13 ஆம் திகதி 2022.02.20 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் நாட்டிலிருந்து வெளியேறிச் சென்ற கீழ் குறிப்பிடப்படும் அலுவலர்கள் நாட்டுக்கு மீள திரும்பும் வரை பதவிக்குறிய

கடமைகளை நிறைவேற்றுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன

அலுவலரின் பெயர்	கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள்.
திரு. பி.எம்.பீ.ஜீ.பீ.வீ. பண்டார மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்)	திரு. கே.எம்.ஜீ.எஸ்.என். களுவெவ மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
திரு. எச்.டி.என் சம்பத் பிரனாந்து பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (கண்டி)	திரு. பீ.எஸ். பதிரண உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (மாத்தளை)
திரு. எஸ்.எச்.வை.எஸ். பொரலெஸ்ஸ உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (தேசித் தேர்தல்கள்)	செல்வி. குமரினி பிரதாபசிங்ஹ உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம்)
திரு. கே. விமலரூபன் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (மன்னார்)	திரு. ஜே. ஜெனிட்டன் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (வவுனியா)

- ❖ வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஜே. ஜெனிட்டன் அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொறுத்தமான அலுவலர் ஒருவரை நியமிக்கும் வரை 2022.03.07 ஆம் திகதி முதல் பதிற் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்

- ❖ யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஆர்.சீ. அமல்ராஜ் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொறுத்தமான அலுவலரை நியமிக்கும் வரை 2022.05.30 ஆம் திகதி முதல் பதிற் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.

- ❖ பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் செல்வி. ஏ.டி.பீ.என். ஆட்டிகல அவர்கள் திருகோணமலை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவிக்காக நிரந்தர அலுவவலர் ஒருவரை நியமிக்கும் வரை அப்பதிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2022.09.01 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்.

- ❖ பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் செல்வி ஏ.டி.பீ.என். ஆட்டிகல அவர்கள் நேபாளத்தின் கத்மண்டுர் நகரில் நடைபெறும் அறிவை பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பதற்காக 2022.06.12 ஆம் திகதி முதல் 2022.16.16 ஆம் திகதி வரை அநுராதபுரம் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே. முகுந்தன் அவர்கள் பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.

- ❖ மொனராகலை மவாட்த்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் 2022.08.25 ஆம் திகதி முதல் 2022.09.13 ஆம் திகதி வரை விசேட விடுமுறை பெற்றக்கொண்டுள்ளமையினால் அக்காலப்பகுதிக்காக பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே. காண்டீபன் அவர்கள் மொனராகலை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.
- ❖ திரு. எம்.பி.எம். சுப்பியான் அவர்கள் தனிப்பட்ட காரணத்திற்காக வெளிநாடு சென்றமையினால் அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஏ.எம்.கே.எஸ். அத்தநாயக்க அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவியில் 2022.09.16 ஆம் திகதி முதல் 2022.10.06 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் கடமைகளை நிறைவேற்றுவற்காக நியமிக்கப்பட்டார்.

- ❖ தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்கள் குஜராத் மாநில தேர்தலை கண்காணிப்பதற்காக வெளிநாடு சென்றமையின் காரணத்தினால் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) திரு. எச்.ஆர். பிரீஸ் அவர்கள் 2022.12.02 ஆம் திகதி முதல் 2022.12.06 ஆம் திகதி வரை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.

6.3. நிருவாகப் பிரிவின் அலுவல்கள்

தாபனப் பிரிவு

தாபனப் பிரிவு மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தின் நிருவாக அலுவலரின் வழிகாட்டலின் கீழ் மற்றும் 02 தலைமை முகாமைத்துவ சேவை அலுவலர்களின் மற்றும் 10 முகாமைத்துவ சேவை அலுவலர்கள் மற்றும் ஆவண உதவியாளர் ஆகியோரின் கீழ் செயற்படுகின்றது. மேலும் நிருவாக அலுவலரின் வழிகாட்டல் மற்றும் தலைமை முகாமைத்துவ சேவை அலுவலரின் மேற்பார்வையின் கீழ் வரவேற்பு கருமபீடமொன்றும் இயங்குகின்றது. நாட்டில் அமைந்துள்ள 27 தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் தேர்தல்கள் செயலகத்தின் பதவிநிலை அல்லாத அலுவலர்களின் அனைத்து தாபன நடவடிக்கைகள், தேர்தல் ஆணைக்குழுவின் தாபன நிருவாக அலுவல்கள், சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் தொடர்பான மேற்பார்வையும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

6.3.1 பணியாட்குழு அலுவல்கள்

6.3.1.1 முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை

- 2022 வருடாந்த இடமாற்றல்களின் கீழ் மூன்று முகாமைத்துவ சேவை அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வெளியே இடமாற்றலாகிச் சென்றதுடன், அவரது பதிலி அலுவலர் சேவைக்கு அறிக்கையிட்டுள்ளார்.
- திணைக்களங்களுக்கு இடையிலான இடமாற்றல்களின் கீழ் இவ்வாணைக்குழுவுக்கு இடமாற்றலாகி வர விருப்பம் தெரிவித்த 18 முகாமைத்துவ சேவை அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டனர்.
- தேர்தல் ஆணைக்குழுவுக்கு வெளியே பதிலாளின்றி முகாமைத்துவ சேவை அலுவலர்கள் 08 பேர் இடமாற்றலாகிச் சென்றனர்.

6.3.1.2 அபிவிருத்தி அலுவலர் சேவை

